Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 77 • 29.01.2017

MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance
All Countries Air Ticketing
TICKET
261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 00 666 56
Maholidaysmayu@gmail.com
www.maholiday.com
B.Mayuran
Managing Director



# கண்ணீர் தேசம்!

உங்கள் காதலன் இப்படியிருக்கட்டும்

"சம்மந்தனிற்கு செருப்புமாலை போட்டவர்கள்தான் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்"

அனந்தி ஆவேசம்

JPN SHIPPING Ltd

Tel: 0044 - 2086680252
0044 - 7931197571
Viber 0044 - 7436261912

லண்டனில் இருந்து கப்பல் மற்றும் விமானம் மூலமாக பொதிகளை மிகக்குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாகவும், நம்பிக்கையான முறையிலும் துரித கதியில் உங்கள் இல்ல வாசலில் பெற்றிடவும், இலங்கையிலிருந்து அனைத்து நாடுகளுக்கும் பொதிகளை அனுப்பிடவும் முடியும்...

info@jpnshippingltd.co.uk
www.jpnshippingltd.co.uk

# இணைய யன்னல்




**Aniruth Styles Vinoth**






**Umapathy Sk**







**Castro Rahul**







**தினேஷ் குமார்**







**Balakumar Thiruchselvam**





**குட்டி மோகன்**





**சூது கவ்வும்**

நூற்றுக்கும் மேலானோர் இறந்த ஒரு ரயில் விபத்து குறித்து, விபத்தில் உயிர் பிழைத்த ஒரே ஒருவரும், ரயிலின் ஓட்டுனருமான சர்தார்ஜியிடம் விசாரணை நடந்தது. விபத்துக்கு என்ன காரணம்? என்று நீதிபதி கேட்டார். தண்டவாளத்தில் நடந்து போய்க்கொண்டிருந்த ஒருவன் தான் காரணம் என்று சர்தார்ஜி சொல்லவே, நீதிபதி கடும் கோபம் கொண்டார். அந்த ஒருவனுக்காகவா இவ்வளவு பேரையும் கொன்றாய்?. அப்படியே அவன் மீது ரயிலை ஏற்றிவிட்டு சென்றிருக்கலாமே என்று நீதிபதி சொல்லவே, சர்தார்ஜி சொன்னார். நீதிபதி அவர்களே, நானும் அவனைக் கொல்லவே முடிவெடுத்தேன், ரயில் பக்கத்தில் வந்த உடன் அவன் தண்டவாளத்தை விட்டு இறங்கி ஓட ஆரப்பித்தான் என்றார்.



**ஸ்டேட்டஸ் நாயகன் டாவ்**

அவசர சட்டம்னா
ஆய் போனவனுக்கு
தண்ணிக்கு பதில பேப்பர கொடுக்குறதே
மிக்சரு தாங்க முடில உன் டார்ச்சரு



**Suhir Sathya**

இந்த குருநாகல்  தம்புள்ள ரோட் போட ஆரம்பிக்கும்போது,

1. இலங்கை ஜனாதிபதியாக மஹிந்தவும், இந்தியப் பிரதமராக மன்மோகன் சிங்கும், அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமாவும் இருந்தனர்.
2.சிரியாவில் சண்டை ஆரம்பிக்கவேயில்லை.
3.நெல்சன் மண்டேலா, ஃபிடல் காஸ்ட்ரோ, ஜெயலலிதா உயிருடன் இருந்தனர்.
4. நயன்தாராவும் பிரபுதேவாவும் காதலித்துக் கொண்டிருந்தனர்.
5. இலங்கைக் கிரிக்கெட் அணி பலம் வாய்ந்த அணியாக இருந்தது.
6. ஜல்லிக்கட்டுக்கு சுப்ரீம் கோர்ட் தடை விதித்திருக்கவில்லை.

இப்போது எல்லாமே மாறிவிட்டன, ஆனால் இந்த ரோட் மட்டும் போட்டு முடியல்ல.



**Rajh Selvapathi**

வியப்பு!
உலகமே திரும்பி பார்த்தத தமிழன் போராட்டங்கள்
கடலுக்குள் கமுக்கமா முடிக்கப்படுகின்றதே?
முள்ளிவாய்க்கால் - மெரினா
மெரினாவிலும் போலீஸ் காலில் விழுந்து கெஞ்சுகின்றனர்.



**செந்தமிழ் செல்வன்**

நாள் முழுவதும் சும்மா இருப்பது இலகுவான விடயம் இல்லை.
அதனை செய்ய முழுமையாக ஒரு நாள் தேவைப்படுகிறது



**போடா போடி**

பனி காலம் வந்தாலே நம்மல மாதிரி கருப்பா இருக்க பசங்க நிலமை ரொம்ப கஷ்டம்பா வீட்டுக்கு வெள்ளை அடிச்ச மாதிரி கை கால் எல்லாம் கோடு கோட இருக்கு



**Ranganathan Rangashri**

வவுனியா உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தலாம்.
சல்லிக்கட்டு போராளிங்க அந்தப்பக்கம் போயிடாதீங்க. பாவம்யா நீங்க...






பீஷ்மர்


கிட்டுவின் தாயாரை ஆறுதல்படுத்தும் பிரபாகரன். அருகில் சூசை, சொர்ணம்


இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 14

# பதுமனை கைது செய்த சொர்ணம்!


சொர்ணம்

கருணா சதியில் பதுமனிற்கிருந்த பங்கை உறுதி செய்த புலிகள், அவர் எப்படியான எதிர்வினையாற்றுவார் என்பதை புலிகள் ஊகிக்க முடியாமல் திணறினர். கருணாவுடன் இணைந்து அவரும் பிரிவாரா, அல்லது புலிகளின் பேச்சை கேட்பாரா என்ற குழப்பம் இருந்தது. ஆனால், தலைமையுடனான தொடர்பை பதுமன் நிறுத்திக்கொள்ளவில்லை.

கருணா சதி முற்றி, அவர் பிரிவது உறுதியானபோது பதுமனுடன் புலிகள் பேசினார்கள். பதுமன் உண்மையில் மனதில் என்ன வைத்திருந்தார் என்பதை உறுதியாக சொல்ல முடியவில்லை. கருணாவுடன் பிரிந்து செல்ல விரும்பி புலிகளின் கை ஓங்கியதால் மனம் மாறியிருக்கலாம், கருணாவுடனான நட்பினால் விடயத்தை அறிந்து, அதை தலைமையிடம் சொல்லாமல் மறைத்திருக்கலாம், நடப்பதை பார்த்து முடிவெடுக்கலாமென இருந்திருக்கலாம்.

ஆனால் தலைமையுடன் பேசும்போது பதுமன் சரணடைந்து விட்டார். கருணா தன்னுடன் இணையுமாறு கேட்டதே தவிர, நான் மறுத்துவிட்டேன என கூறினார். அப்படியானல் உடனே வன்னிக்கு புறப்பட்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டார். இதனை பதுமன் விரும்பவில்லை. வன்னிக்கு சென்றால் தனக்கு ஏதும் நிகழ்ந்துவிடலாமென அவர் பயந்தார். அதனால் வன்னி செல்வதை இயன்றவரை தாமதப்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்த பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தபோது புலிகள் வேறொரு கணக்கையும் போட்டார்கள். கருணாவுடன் பிரிந்து சென்றவர்களை மனம் மாற்றி, மீண்டும் இயக்கத்தில் இணைக்கும் நடவடிக்கை செய்தார்கள். அப்படி பேசுபவர்களிற்கு உயிருத்தரவாதம் கொடுத்தார்கள். கருணாவிற்கே உயிருத்தரவாதம் கொடுத்த புலிகள், அவரின் கீழ் போராளிகளாக செயற்பட்டவர்களிற்கு கொடுக்காமலிருப்பார்களா?. கருணாவுடன் சென்றவர்களை பிரித்தெடுத்து, அந்த அணியை ஆளணி ரீதியாக பலப்படுத்துவது மட்டுமல்ல, அவர்கள் முன்வைப்பது பிழையான சித்தாந்தமென்பதை நிறுவ புலிகள் விரும்பினார்கள். அத்துடன், மோதலையும், இரத்தம் சிந்தலையும் தவிர்க்க விரும்பினார்கள்.

இப்படி எல்லா காரணங்களும் சேர, பதுமனிற்கும் உயிருத்தரவாதம் வழங்கப்பட்டது. ஆனால் அவர் வன்னிக்கு வர தயங்கினார்.

காட்டுவழியால் வராமல் தரைப்போக்குவரத்திற்கு அப்போது புலிகள் பழக்கப்பட்டு விட்டனர். தரைவழிப்பயணத்தில் கருணா குழுவினர் ஆபத்தை ஏற்படுத்தலாமென தட்டிக்கழித்துக் கொண்டிருந்தார்.

பதுமனை வழிக்கு கொண்டுவர பிரபாகரன் தனது பாணியில் முடிவெடுத்தார். இறுதியில் அதுதான் வெற்றியளித்தது!

1994 இல் மாத்தையா விவகாரம் புலிகளிற்குள் சூறாவளியை கிளப்பியது. மாத்தையாவின் கீழ் வன்னிப்படையணி செயற்பட்டது. மாத்தையாவை கைது செய்யும்போது கடுமையான மோதல் நடக்கும், இரத்த ஆறு ஓடும் என்றுதான் புலிகள் எதிர்பார்த்தனர். மாத்தையாவை கைது செய்யும்போது எச்சரிக்கையாக நடக்க வேண்டும். அதனை சரியாக செய்யக்கூடிய ஒரே ஆள் சொர்ணம்தான் என பிரபாகரன் நம்பினார். சொர்ணத்தில் பிரபாகரன் அவ்வளவு பெரிய நம்பிக்கை வைத்திருந்தார். பிரபாகரனில் மட்டுமல்ல அவரது குடும்பத்திலேயே சொர்ணம் அளவற்ற விசுவாசம் வைத்திருந்தார். இந்த பகுதியில் அடுத்த வாரத்திலிருந்து சொர்ணம் தொடர்பாக பகுதிகள் இடம்பெறும்.

பதுமனை வன்னிக்கு கொண்டுவர என்னவழியென பிரபாகரன் யோசித்த போது, சொர்ணம்தான் வழியென நினைத்தார். உடனே சொர்ணத்தை அழைத்தார். 2003 இல் இந்த பணிக்காக சொர்ணத்தை பிரபாகரன் அழைப்பதற்கு முன்னர் நீண்டகாலமாக அவருடன் நெருக்கமான தொடர்ப்பை பிரபாகரன் குறைத்திருந்தார். அது வேண்டுமென்றே அவர் செய்தது. ஒவ்வொருவருக்கும் எப்படி தண்டனை கொடுப்பதென்பதை பிரபாகரன் அறிந்திருந்தார். தனது நிழலாக வாழ்ந்த சொர்ணத்தை சற்று தள்ளி வைப்பதே பெரிய தண்டனைதான் என்பதை பிரபாகரன் அறிந்திருந்தார்.

யாழ்ப்பாண சமரில் சொதப்பலாக செயற்பட்டு, ஏராளம் போராளிகளின் உயிரிழப்பிற்கு காரணமாக இருந்தாரென கூறி, அவர் கடற்புலிகளிற்கு மாற்றப்பட்டார். தரைத்தாக்குதலில் கோலோச்சிய தளபதி, ஒன்றுக்கும் சரிப்பட்டு வர மாட்டார் என கடற்புலிகளின் ஒரு பிரதேச தளபதியாக "காற்று" இறக்கப்பட்டார். இந்த காலப்பகுதியில் சொர்ணத்தை சந்திப்பதை தவிர்த்தும் வந்தார்.

திருகோணமலையில் பதுமன் குழப்பம் செய்ததும், சொர்ணத்தை திருகோணமலை மாவட்ட தளபதியாக்கினார் பிரபாகரன். சொர்ணம் திருகோணமலையை சேர்ந்தவர்தான். சமாதான உடன்படிக்கை சமயத்தில் புலிகளின் வடக்கு, கிழக்கு பயணங்களிற்கு ஹெலி வசதியை அனுசரணையாளர்கள் பெற்றுக்கொடுத்தார்கள்.

இந்த இடத்தில்தான் புலிகள் இன்னொரு மாஸ்ரர் பிளான் போட்டார்கள். திருகோணமலைக்கு தளபதிகள் சென்றுவர ஹெலி தேவையென அனுசரணையாளர்களிற்கு அறிவித்தார்கள். ஹெலி வசதி செய்து கொடுக்கப்பட்டது. கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட ஹெலியில் சொர்ணம் சென்றார்.

திருகோணமலை சென்ற சொர்ணம், தனது பாணியில் செயற்பட்டு பதுமனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். தான் தங்கியிருந்த முகாமில் பதுமனை கண்காணிப்பில் வைத்திருந்தார். மீண்டும், திருகோணமலையிலிருந்து கிளிநொச்சி செல்ல ஹெலி வசதி கேட்டார்கள். ஹெலி வந்தது.

பதுமனை ஹெலி மூலம் கிளிநொச்சிக்கு அனுப்பிவைக்க முடிவு செய்தனர். இப்படி பார்த்தால், புலிகள் கைதியொருவரை ஹெலி மூலம் கொண்டு வந்த ஒரேயொரு சந்தர்ப்பமாக இது அமைந்தது.

ஹெலியில் பதுமனை அனுப்பினால் என்ன நடக்குமென்றெல்லாம் புலிகள் பலவாறாக சிந்தித்தார்கள். இதில் முக்கியமானது அரச துணையுடன் பதுமன் அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்லலாம் என்ற ஐயம் புலிகளிடம் இருந்தது. இதற்கும் ஒரு மாற்றை சொர்ணம் செய்தார். பதுமனை ஹெலியில் ஏற்றும்போது சொர்ணம் அதனை பதுமனிற்கும் கேட்கும்படி சொன்னதுதான் சுவாரஸ்யம்!

பதுமன் ஹெலி மூலம் கிளிநொச்சி வந்த செய்தி அப்போது பத்திரிகைகளில் வெளியானது. தளபதியாகத்தான் வந்தார் என்றுதான் எல்லோரும் நினைத்திருந்தார்கள். கைதியாகத்தான் வந்ததை அறிந்தவர்கள் வெகு சிலர்தான். அப்போது பதுமனுடன் உதவியாக இரண்டு போராளிகளும் வந்திருந்தனர். அவர்கள் சொர்ணத்தால் அனுப்பப்பட்ட நம்பிக்கையான போராளிகள். ஹெலிக்குள் பதுமன் ஏதாவது குழறுபடி செய்து தப்பிச்செல்லாமல், கிளிநொச்சிக்கு கொண்டுபோய் சேர்க்கும் பொறுப்பு அவர்களிடம் வழங்கப்பட்டிருந்தது.

ஹெலியில் பதுமன் ஏற தயாரானபோது, அவருக்கு முன்பாகவே போராளிகளை கூப்பிட்டு, பதுமன் தப்பிச்செல்லாமல் கிளிநொச்சி கொண்டுபோய் சேர்ப்பது அவர்களின் பொறுப்பு என கட்டளையிட்டார். அப்போதுதான் சொர்ணம் அந்த சுவாரஸ்ய கட்டளையை இட்டார்.

'இடையில ஏதாவது குழறுபடி செய்து, தப்பிப்போக பார்த்தால் எதையும் யோசிக்ககூடாது. பதுமனை ஹெலியிலயிருந்து தள்ளிவிழுத்திப் போட வேணும். அது முடியாவிட்டால், பதுமனை கட்டிப் பிடிச்சுக்கொண்டு ஓராள் கீழ குதிக்க வேணும்'!


(தொடரும்)



சொர்ணம், பால்ராஜ், தமிழ்செல்வன்


பிரபாகரன் குடும்பத்தை உபசரிக்கும் சொர்ணம்

# வவுனியா நகரை மாற்றுமா புதிய பேருந்து தரிப்பிடம்?

வன்னிமது





வவுனியா மாவட்டத்தின் சனத்தொகையில் 80 வீதத்திற்கும் அதிகமான மக்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவும் ஏனையோர் நகரங்களில் வசிப்பவர்களாகும். இவர்களின் தமது போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகளையே பெரும்பாலானோர் சார்ந்து இருக்கின்றனர். அத்துடன் வவுனியா நகரம் வடக்கின் நுழைவாயிலாக இருப்பதாலும் வெளி மாவட்டங்களை சார்ந்த பேருந்துகள் வவுனியா ஊடாகவே செல்கின்றது. இதனால் வவுனியா நகரத்தின் கண்டி வீதியில் அமைந்துள்ள அரச பேருந்து தரிப்பிடத்தில் அரச பேருந்துக்களும் முதலாம், இரண்டாம் குறுக்குத்தெருக்களில் தரித்து நின்று தனியார் பேருந்துகளும் தமது சேவையினை மேற்கொள்கின்றமையால் வவுனியா நகர மற்றும் அரச பேருந்து நிலையத்தினை சூழ்ந்த வியாபாரிகளிற்கும் இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கின்றது.

இருந்த போதும் வவுனியா நகரில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் தரித்து நிற்பதற்கு போதுமான இடவசதி இன்மை, போக்குவரத்து நெரிசல்கள், வீதி விபத்துக்கள் போன்றவற்றை கருத்திற் கொண்டு முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியின் போது வவுனியா நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஏ9 வீதியில் அமைந்துள்ள வடமாகாணசபையின் கீழ் உள்ள விவசாய பண்ணைக்கு சொந்தமான காணியில் ஒரு பகுதியினை பெறப்பட்டது. (வடமாகாணசபை தேர்தலிற்கு முன்னரே பெறப்பட்டது.) வவுனியா நகரின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வழங்கி வருகின்ற நூற்றுக்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் பேருந்துகள் நின்று உள்ளூரிலும் மாகாணங்களுக்கிடையிலும் சேவையாற்றும் வகையிலான நவீன வசதிகளை உள்ளடக்கியதாக 19.5 மில்லியன் ரூபாய் செலவில் மத்திய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டதுடன் கடந்த 16.01.2017 அன்று போக்குவரத்து மற்றும் பயணியர் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.


இந்து இதன் பின்னர் 17.01.2017 அன்று வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் ஏற்பட்ட அரச மற்றும் தனியார் பேருந்து சாரதிகளிடையே கலவரம் ஏற்பட்டதுடன் இதில் பொலிஸார் அரச பேருந்து நிலையத்தில்பணியாற்றிநேரக்கணிப்பாளர் ஒருவரையும் அன்றைய கலவரத்தின்போது வீதியில் அமர்ந்து பேருந்தினை செலுத்த இடம்கொடுக்காமலும் பேருந்தின் கண்ணாடி மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவித்து தனியார் பேருந்து சாரதிகள் இருவரையும் கைது செய்த சம்பவமும் இடம்பெற்றது.

இதன் பின்னராக அமைச்சர்கள், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருடனான அரச, தனியார் சங்கங்கள் கலந்துரையாடப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தையும், உள்ளூர் சேவைகளில் ஈடுபடும் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்தினையும் பயன்படுத்துவதற்கு இணங்கம் தெரிவிக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் வவுனியா நகரில் இருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு பயணிகள்செல்வதற்குஏற்றவாறாகபேருந்து சேவைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன.

பெர்துவாக வவுனியா நகரம் ஒரு திட்டமிடப்படாமல் காலத்தின் தேவைக் கேற்ப அமைக்ப்பட்ட நகரம் என்பதுடன் யுத்தக் காலங்களில் ராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசங்களுக்கு பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்ட பெருமளவு நிதி ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான வவுனியா நகரையும் அதனை அண்டியுள்ள பல இடங்களுக்கும் மாற்றப் பட்டு செலவிடப்பட்டமை கடந்த கால வரலாறாகும். இதனடிப்படையில் தற்போது அமையப்பெற்ற புதிய பேருந்து நிலையமும் ஒரு திட்டமிடப்படாமல் வவுனியா நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமையப்பட்டுள்ளது. அத்துடன் வவுனியா நகரிற்கு வருபவர்கள் இப்பேருந்து நிலையத்தை அடைய முச்சக்கரவண்டி அல்லது பேருந்து போன்றவற்றினூடாக இவ்விடத்தை அடைந்த தமது இடத்திற்கான பேருந்திற்கு செல்கின்றனர்.

அத்துடன் வவுனியா பழைய அரச பேருந்து நிலையத்தை சூழ உள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகம் கேள்விக்குறியாகியுள்ளதுடன். இவர்களின் வர்த்தக நிலையங்களை புதிய பேருந்து நிலையத்தில் அமைப்பதற்கான கட்டிட தொகுதியும் நிறுவப்படவில்லை. எதிர் காலத்தில் கடைத்தொகுதிகள் அமையப் பெறும் போது இப்புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் தரித்து நிற்பதற்கான இடம் போதாமல் செல்லும். அத்துடன் இப்புதிய பேருந்து நிலையம் அமையப்பெற்ற இடம் வடமாகாணசபைக்குரிய நிலமாகும். இதனால் நகர மயமாக்கலின் போது புதிய பேருந்து நிலையத்தினை விஸதீரணம் செய்வதற்கு நிலம் பெறுவதில் சிக்கல் நிலை ஏற்படுவதுடன் இவ் அரச பண்ணையில் அமைய இருந்த பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு விவசாயப் பண்ணையை வேறிடத்திற்கு மாற்றி அதன் மூலம் ஏற்படும் இழப்புக்கள் பல்லாண்டு கால விவசாயப் பாரம்பரியம் கொண்ட பண்ணையை புதிதாக அமைப்பதற்காக அதிகபணத்தை முதலீட்டுகளுக்குசெலவிட நேரிடும்.விதைஉற்பத்தியில்புதியபண்ணை செயல்பட ஆரம்பிக்கும் பட்சத்தில் விவசாயத்தில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தும் என்பதுடன் அருகாமையில் உள்ள விவசாயக் கல்ல}ரியில் கற்கும் மாணவர்கள் தமது செயன்முறைக் கல்வியை கற்பதில் இடர்பாடுகளை எதிர் நோக்குவர். போன்ற காரணங்களும் சில அரசியல் தலையீடுகளாலும் மாற்றப்பட்டது. இதே போன்ற நிலையே புதிய பேருந்துநிலைய விஸதீரணத்திலும் ஏற்படப்போகின்றது.

வவுனியாவில் நகர் அதிகளவு அரச நிலங்களை உள்ளடக்கிய ஓர் இடமாகும். பழைய பேருந்து நிலையம் அதனை சூழ உள்ள பல பிரதேசங்கள் அரசிற்கு சொந்தமானது. அத்துடன் பழைய பேருந்து நிலையத்திற்கும் வவுனியா மத்திய புகையிரத நிலையத்திற்கும் இடையில் ஒரு கிலோமீற்றர் இடைவெளியே உள்ளது. அதன் அடிப்படையில் ஆரம்ப காலத்தில் பழைய பேருந்து நிலைத்திற்கும் புகையிரத நிலையமும் எதிர் எதிரே இருக்குமாறு அமைப்பதற்கான யோசனைகள் வைக்கப்பட்டிருந்தன. ஏனெனில் இரண்டு நிலையங்களிற்கும் இடையில் அரசிற்கு சொந்தமான நிலங்களே காணப்பட்டதால் இதற்கான சாத்தியம் இருந்த போதும் மக்கள் பிரதிநிதிகளின் அசன்டையீனங்களால் இது ஒரு எட்டாக்கனியாக மாறியது. மேலும் மக்களிற்காகவே சேவைகளே தவிர சேவைகளிற்காக மக்கள் இல்லை.






## தொடர்கதை

இலங்கை மத்தியவங்கியின் பிணைமுறி விவகாரம் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து புயலைக் கிளப்பி வருகிறது. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் அர்ஜூன மகேந்திரன் மற்றும் அவரது மருமகன் நேரடியாக சம்பந்தப்பட்டதாக கூட்டுஎதிரணி, ஜேவிபி கொடுத்த அழுத்தத்தினால் மகேந்திரன் பதவி விலக வேண்டியேற்பட்டது. இந்த விவகாரத்தில் எல்லா தகவல்களும் வெளிப்படையாக இருந்தும் அரசு விசாரணை நடத்தி, குற்றவாளிகளை தண்டிக்கவில்லையென்ற எதிரணியின் குற்றச்சாட்டால் பாராளுமன்றம் அல்லோலகல்லோலப்படுகிறது.

பிணைமுறி விவகாரத்தை ஆராய்ந்த கோப் குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் கடந்த வாரம் அனல் பறந்தது. கோப் குழுவின் அறிக்கையில், அர்ஜூன மகேந்திரன் மற்றும் சில முக்கிய அதிகாரிகள் இதில் நேரடியாக சம்பந்தப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு உள்ளது. கோப் குழு அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே கூட்டு எதிரணி, ஜேவிபியின் கோரிக்கை. கூடவே, இந்த விசாரணை நகர்வுகளை ரணில் தடுக்கிறார் என்ற குற்றச்சாட்டையும் வைக்கிறார்கள்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய எதிர்கட்சி தலைவர் இரா சம்பந்தனும் உரையாற்றினார். பிணைமுறி விவகாரத்தில் ஒரு அளவிற்கு மேல் அடித்தாட முடியாத சங்கடம் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு உள்ளது. ஏனெனில், ஐக்கியதேசியக்கட்சியை இனப்பிரச்சனை தீர்வு விவகாரம் அல்லாத வேறு ஒன்றில் பகைத்துக்கொள்ள கூட்டமைப்பு விரும்பாது. அதனால் வரையறுக்கப்பட்ட அளவிலேயே கூட்டமைப்பின் குரல் இதில் இருக்கும். என்றாலும், இலங்கை அரசு, அரச நிர்வாகத்தில் புரையோடிப் போயுள்ள ஊழல் கலாசாரத்தை விலாவாரியாக விபரித்துள்ளார்.

ஊழல் என்பது அவமானம் என்ற கலாசாரம் உருவாக்கப்படும் வரை இப்படியான பிரச்சனைகள் இருக்கும். ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும் மலைவிழுங்கிகள் இருப்பார்கள். சில சமயங்களில் அவர்கள் விசாரணை வலயத்திலும் சிக்குவார்கள். முன்னைய ஆட்சியில் நடந்த கணக்கற்ற ஊழல் விவகாரத்தில் சிக்கிய எத்தனையோ அரசியல்வாதிகள் விசாரணைக்காக வந்து போகிறார்கள். விளக்கமறியலுக்கு செல்கிறார்கள். ஆனால், ஊழல் வழக்கில் சிக்கிய அவமானம் துளியும் அவர்களிடம் கிடையாது. நாட்டுக்காக சிறை செல்பவர்களை போல விலங்கிட்ட கையை அசைக்கிறார்கள். எட்டுக்கோடி ரூபா பெறுமதியான வாகனத்தை வரியின்றி இறக்குமதி செய்ய விவகாரத்தில் கைதான முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சொன்னார் "ஒரு இத்துப்போன வாகனத்திற்காகத்தான் கைது செய்துள்ளார்கள்" என்று. அரசியல்வாதிகளின் மனநிலை எப்படியிருக்கிறதென்பதற்கு இது உதாரணம்.

மக்களால் தேர்வுசெய்யப்படும் பிரதிநிதிகள் வெட்கமின்றி ஊழலில் ஈடுபடுவது அரசநிர்வாகத்திலும் எதிரொலிக்கிறது. அரச நிர்வாகத்திலும் குறிப்பிடத்தக்களவு ஊழல் உள்ளது. ஊழலென்பது வெட்கமானதென்ற உணர்வை ஏற்படுத்த வேண்டுமெனில், அதற்கெதிரான கறாரான நடவடிக்கைகள் அவசியம். ஆனால் அது நடப்பதில்லை. அரச நிர்வாகத்தில் ஊழலுக்கெதிரான அதிகபட்ச நடவடிக்கைகளில் ஒன்று இடமாற்றம். எவ்வளவு பெரிய கேலிக்கூத்து இது!

அரசியலில் அதைவிட மோசம். பெரும்பாலான ஊழல் பேர்வழிகள் அகப்படுவதேயில்லை. ஆட்சியதிகாரத்தை பிடிக்க உதவுபவர்களை அரசதலைமைகள் கண்டும்காணாமலும் விடுவது வழக்கமாகிவிடுகிறது. பல ஊழல்களிற்கு கட்சிகளின் முகவர்களாக சிலர் செயற்படுவார்கள். பிணைமுறி விவகாரம் அப்படியாததொன்றாக இருக்கலாம். இதுபற்றி நிறைய தகவல்கள் ஊடகங்களில் வந்த வண்ணமுள்ளன.


கோப் குழு அறிக்கையில் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. ஆனால் விசாரணை நடக்கவில்லை. விசாரணை நடத்த தாமதிப்பதிலிருந்தே இதன் உள்விவகாரங்கள் ஊகிக்கதக்கவையாக உள்ளன. முன்னைய ஆட்சியாளர்கள் ஊழல் பெருச்சாளிகள் என்ற கோசத்தை தற்போதைய ஆட்சியாளர்கள் முன்வைத்தார்கள். ஆனால் இப்போது பிணைமுறி விவகாரம் பெரிய கறையாக நல்லாட்சியில் ஒட்டிக்கொண்டுள்ளது.

ஊழலிற்கெதிரான வலுவான குரல் ஜனாதிபதியுடையது. தேசிய அரசில் விரிசல் ஏற்படக்கூடாதென்பதற்காக பிணைமுறி விவகாரத்தில் ஜனாதிபதி மௌனமாக இருக்கலாம். ஆனால், அது நல்லாட்சி பயணத்திற்கு ஆபத்தானது. பிணைமுறி விவகாரம் தீர்வின்றி நீடிக்கும் ஒவ்வொரு நாளும் அரசுக்கெதிரான அபிப்பிராயம் பெருக்கிக் கொண்டிருக்கும்.


ஊழலற்ற நாட்டை கட்டியெழுப்புவதாக இரண்டு கட்சிகளும் பலமுறை கூறிவிட்டன. இப்போது இரண்டு கட்சிகளின் ஆட்சி. இலங்கையில் ஊழல் அதிகரித்து செல்வதை சமீபத்திய புள்ளிவிபரங்களும் உறுதி செய்கின்றன. அரசுகளின் வாக்குறுதிகளும், யதார்த்தமும் எதிரெதிராக உள்ளன. ஊழலை ஒழிக்க நடைமுறையிலுள்ள அரசியல் கலாசாரம் உதவாது. புதிதாக எதையாவது சிந்திக்க வேண்டும்.

தீபம்
197, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
விநியோகம் 0768255563
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk

## சொன்னார்கள்



**கி.துரைராசசிங்கம்**
**– கிழக்கு மாகாண விவசாய அமைச்சர்**
மகாபாரத சூதாட்டகளத்தில் தர்மருக்கு எதிராக அவரது சகோதரர்கள் நிதானம் இழந்து, பக்குவம் இழந்து எப்படி கதைத்தார்களோ, அதுபோல எமது தலைமைக்கு எதிராக கதைக்கிறார்கள். ஆனால் எமது தலைமை மிகவும் பொறுமையாகவும், பக்குவமாகவும் செயற்படுகிறது. இப்போது ஒரு இணக்கப்பாடு நடக்கிறது. சர்வதேசமும் இதை அவதானித்து கொண்டிருக்கிறது. அதை எந்த இடத்தில் முறிப்பது, எதுவரை தொடர்வது என்பதில் ஒரு கடப்பாடு உள்ளது. எடுத்தவுடன் முறித்துக் கொண்டு செல்ல முடியாது.




**சீ.யோகேஸ்வரன்**
**– பா..உ, தமிழ்தேசிய கூட்டமைப்பு**
கிழக்கு பல்கலைகழகத்தில் பலதுறைகளில் சிங்கள மாணவர்கள் 80 வீதத்திற்கும் அதிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பின் கலாசார சீரழிவுக்கு காரணம் இதுதான். சிங்கள மாணவர்களின் பெரும்பான்மையை குறைக்க வேண்டுமென உயர்கல்வி அமைச்சருடன் பலதடவை பேசியுள்ளேன். அதற்கு அவர் சொன்னார், "பல்கலை அனுமதி விண்ணப்ப படிவத்தில் கிழக்கு மாணவர்கள் கிழக்கு பல்கலைகழகத்தை முன்னிலைப்படுத்தி அனுப்புவதில்லை" என. காலடியுள்ள பல்கலைகழகத்தை நாங்கள்தான் பயன்படுத்த வேண்டும்.



**ஜூவான் மென்டஸ்**
**– சிறப்பு அறிக்கையாளர், ஐநா**
இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக விலக்கிக்கொள்ளப்பட வேண்டும். உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில், கைதானவரை சட்டத்தரணி சந்திப்பதற்கு முன்னர் வாக்குமூலம் பதிவுசெய்யப்படும் நடைமுறையையும் விலக்கிக்கொள்ள வேண்டும். சித்திரவதை பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரித்து வழக்கு தாக்கல் செய்ய, எந்த தலையீடுமில்லாத பணியகம் உருவாக்கப்பட வேண்டும். அதில் தேசிய பாதுகாப்பு படையில் அங்கம் வகிக்காதவர்கள் இடம்பெற வேண்டும்.

## கடந்தவார கடி



காதலனுக்கு காதலி வேறு ஒருவருடன் போனால் கோபம் வரும்தான். காதலினால்தானே தாஜூதீன் கொலையும் நடந்தது. நாமலும் அப்படியான விரக்தியில்தான் சொல்லியுள்ளார் - **ராஜித சேனாரத்ன**



உங்களை கூட்டு எதிரணியென அழைக்கிறீர்கள். ஆனால் இங்கு அப்படியொன்று கிடையாது. நிழல் அரசை அமைத்து மகிந்த பிரதமர், நாமல் வெளிவிவகார அமைச்சராக்கி கனவு கண்டீர்களே, நாடு கடந்த தமிழீழ அரசும் இப்படித்தான் - **மங்கள சமரவீர**

## கடந்தவார பஞ்ச்




## எண்ணிக்கை

**1.8%**
உள்ளூராட்சிசபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்

**100/=**
ஹொரண டயர் தொழிற்சாலைக்கு ஒதுக்கிய காணியின் 1 ஏக்கரின் விலை

**2,753**
புதிதாக இணைக்கப்படவுள்ள உளவியல் ஆசிரியர்கள்

**34,255**
வட,கிழக்கில் மீள்குடியமர்த்தப்படாத குடும்பங்கள்

# “சம்மந்தனிற்கு செருப்புமாலை போட்டவர்கள்தான் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்”

## அனந்தி ஆவேசம்

எஸ்.நிதர்சன்

சிறிதுகாலத்திற்கு முன்னர்வரை அரசியலில் சரவெடியாக முழங்கிக் கொண்டிருந்தார் அனந்தி. அடிக்கடி போராட்டங்கள், அதிரடி அறிக்கைகள், தமிழரசுக்கட்சிக்குள்ளிருந்தபடியே தலைமையுடன் உரசல் என பரபரப்பிற்கு குறைவில்லாமலிருந்த அனந்தி, அண்மைக் காலமாக இருக்கிறாரா என்பதே தெரியாமல் சத்தமில்லாமல் இருக்கிறார்.

அனந்திக்கு என்ன நடந்து விட்டதுஞ் இப்போது என்ன செய்கிறார் என்பதை அறிய அவரையே தொடர்பு கொண்டோம். இன்னும் அதிரடி குறையாமல் இருக்கும் அனந்தி பல்வேறு விடயங்களை மனம்விட்டு எம்முடன் பேசினார்.

**தீபம்: இப்போது எந்தக்கட்சியில் இருக்கிறீர்கள்?**

**அனந்தி:** தமிழ்தேசிய கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக்கட்சியினூடாகத்தான் மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றேன். ஆனால் சில கருத்து முரண்பாடுகள் காரணமாக அந்தக்கட்சியின் மகளிர் அமைப்பு செயலாளர் என்ற பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டு, கட்சியின் அடிப்படை உறுப்பினராக மட்டும் இருக்கிறேன்.



தமிழரசுக்கட்சியுடன் நிறைய கருத்து முரண்பாடுகள் எனக்கு உள்ளது. அதனால் கட்சியின் நடவடிக்கைகளில் இப்போது என்னை இணைப்பதை தவிர்த்து வருகிறார்கள். இதை நான் பொறுமையாக அவதானித்து வருகிறேன். மக்களிற்கு இவை தெரிய வேண்டும்.

தமிழரசுக்கட்சி சர்வாதிகாரமாக செயற்படுவதுதான் பிரச்சனை. தமிழ்தேசிய கூட்டமைப்பு உள்ளது. ஆனால் வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தமிழரசுக்கட்சியே தனியாக தேர்வு செய்துவிட்டது. பல பெண்கள் என்னிடம் வந்து இதுபற்றி முறையிடுகிறார்கள். தங்களிற்குரிய பிரதிநிதித்துவத்தை தருமாறு கோருகிறார்கள். தமிழ்தேசிய கூட்டமைப்பாக செயற்பட வேண்டுமென்பதே எமது விருப்பம்.

**தீபம்: கட்சிக்கும் உங்களிற்குமிடையில் அப்படியென்ன பிரச்சனை?**

**அனந்தி:** நான் பாதிக்கப்பட்ட பெண்ணாக இருக்கிறேன். குடும்பத்தலைவனை கொடுத்துவிட்டு தேடிக் கொண்டிருக்கிறேன். அதனால் நான் நிலைப்பாட்டை மாற்ற முடியாது. கட்சி என்ன நிலைப்பாடு எடுத்தாலும் எனக்கு பிரச்சனையில்லை. எதிர்க்கட்சி தலைவராக சம்பந்தன் ஐயா உள்ளார். அரசிற்கு நாங்கள் பலவிதத்தில் அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. ஐநாவிலும் கொடுக்கவில்லையென்பதே என் கருத்து. இப்படியான கொள்கைரீதியான முரண்பாடுகளே தவிர, தனிப்பட்ட முரண்பாடுகள் கிடையாது.

**தீபம்: நீங்கள் அங்கம் வகிக்கும் கட்சியில் அதிருப்தி என்கிறீர்கள். தமிழரசுக்கட்சியில் குற்றம்சொல்லும் பலர் புதிய கூட்டணிக்கு முயற்சிப்பதாக தெரிகிறது. அப்படியொரு கூட்டணி அமைந்தால் அதில் இணைவீர்களா?**



**அனந்தி:** தமிழரசுக்கட்சி பிழையான பாதையில் போகிறதா இல்லையா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். மக்கள் விரும்பினால் புதிய கட்சி உருவாக்கலாம். இன்று தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் அதிகம் விரும்பப்படும் தலைவராக முதலமைச்சர் இருக்கிறார். முதலமைச்சர் தலைமையில் கட்சியொன்று அமைந்தால், அது பெரு வரவேற்பு பெறும். முதலமைச்சர் மீது மட்டும்தான் மக்களிற்கு அதிருப்தியில்லை.

இப்படியொரு கூட்டு அமையுமா என முதல்வரிடம் கேட்டபோது, “அது ஆண்டவன் விட்டவழி“ என அவர் கூறியதாக அறிகிறேன். சரியான நேரத்தில் சரியான முடிவை அவர் எடுத்தால், மக்கள் அவரின் பின்னால் செல்வார்கள். நான் அரசியலுக்கு விரும்பி வரவில்லை. தேவை காரணமாக வந்தேன். நீண்ட அரசியல் நோக்கமும் எனக்கில்லை. மக்களின் விருப்பம்தான் என் விருப்பம்.

**தீபம்: தமிழ் மக்கள் பேரவை தொடர்பான உங்களின் பார்வை என்ன?**

**அனந்தி:** நான் அதில் அங்கம்



வகிக்கவில்லை. ஆனால், அது அடிமட்ட மக்கள் வரை சென்று சேரவில்லை. கிராமிய மட்டத்தில் கட்டமைப்புக்களை அவர்கள் ஏற்படுத்தவில்லை. அதேபோல பெண்களிற்கான அங்கீகாரத்தையும் அவர்கள் வழங்கவில்லை. வழக்கமான ஆணாதிக்க நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். எனவே, நான் அதற்குள் போகவில்லை. நாட்டில் அறுபது வீதமான பெண்கள் இருக்கும்போது, தமிழ்மக்கள் பேரவையில் முழுவதும் ஆண்கள்தான் உள்ளனர். ஆகவே, பெண்களை நிராகரித்துவிட்டு அவர்கள் அவர்களால் எப்படி மக்கள் மத்தியில் வேரூன்ற முடியும்?

**தீபம்: நீங்களும் வடமாகாணசபை உறுப்பினர். அங்கு ஏன் இவ்வளவு பிய்த்தல் பிடுங்கல்?**

**அனந்தி:** கட்சிப்பிரச்சனைதான் காரணம். தமிழரசுக்கட்சி நிலைப்பாடும், முதல்வர் நிலைப்பாடும்தான் உறுப்பினர்களை பிரித்து வைத்துள்ளது. சர்வதேச விசாரணை தேவையென முதல்வர் பிரேரணை சமர்ப்பித்தபோது இந்த பிரிவு ஆரம்பித்தது. அதன்பின், முதல்வரின் நடவடிக்கைகளை சபையில் விமர்சித்து, மரியாதை கொடுக்காமல் செயற்பட்டனர். ஆரம்பத்திலேயே கட்சித்தலைமைகள் இதை கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். இப்போது விரிசல் பெரிதாகி, சிலர் முகம் பார்த்து கதைக்க முடியாதளவு வைராக்கியமாக பகை வளர்த்துள்ளனர். நான் கூட சிலருடன் பேசுவதில்லை, நிமிர்ந்து முகம் பார்ப்பதில்லை.

**தீபம்: காணாமல் போனவர்கள் போராட்டங்களில் முக்கிய பங்கு**

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




**வகித்தீர்கள். ஆனால் இப்போது வவுனியாவில் காணாமல் போனவர்களின் உறவுகள் நடத்தும் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளவில்லையே? ஏதாவது முரண்பாடுகள் உள்ளதா?**

**அனந்தி:** உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு முதல்நாள் ஒருவர் சொல்லித்தான் எனக்கு தெரியும். சரணடைந்தவர்களின் நிலையை அறிவதற்காக நான் செய்யும் போராட்டங்கள் எல்லோருக்கும் தெரியும். மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் கடுமையான நெருக்கடிக்குள்ளும் போராட்டங்கள் நடத்தினோம். நான் தொடர்ச்சியாக போராடியவள், ஐநா வரை சென்று குரல் கொடுத்தவள். அப்போது வராதவர்கள் இப்போது புதிய புதிய அமைப்புக்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

ஏதோ நிகழ்ச்சிநிரலில் செயற்படுவதைபோல ஒருவர் பின் ஒருவராக ஏதோ செய்கிறார்கள். மனிதஉரிமை அமைப்புக்கள் என காணாமல் போனவர்களை வைத்து பல அமைப்புக்களை உருவாக்குகிறார்கள். வவுனியா போராட்ட அமைப்பும் அப்படித்தான் உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் என்மீது தேவையற்ற குற்றச்சாட்டையும் வைத்துள்ளனர். உண்ணாவிரதத்தின் முன்னர் என்னிடம் அவர்கள் சொல்லியிருக்கலாம்.

கிளிநொச்சியில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் கூட்டத்திற்கு முன்னால் இவர்கள் போராட்டம் நடத்தினார்கள். வவுனியாவில் போராட்டம் நடத்தி கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் படத்திற்கு செருப்பு மாலை போட்டு, உண்ணாவிரதமும் இருந்தார்கள்.

நாங்கள் உறவுகளை பறிகொடுத்தது. இராணுவத்திடம். காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கு அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டும். பொதுஎதிரியை விட்டுவிட்டு, கூட்டமைப்பை தாக்க வேண்டும் என இவர்கள் செயற்படுகிறார்கள். நிச்சயமாக இந்த போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள காணாமல் போனவர்களின் உறவுகள் பாவம். தமது உறவுகளுக்காகவே அதில் கலந்து கொண்டுள்ளனர்.

**தீபம்: உங்கள் கணவரை நீங்கள் இராணுவத்திடம் ஒப்படைத்தீர்கள். உங்களை மாதிரியே ஏராளமானவர்கள் ஒப்படைத்துள்ளனர். சரணடைந்தவர்களை புனர்வாழ்வின் பின் விடுவித்து விட்டோம் என்கிறது அரசு. அப்படியானால் இராணுவத்தில் ஒப்படைக்கப் பட்டவர்களின் கதி?**

**அனந்தி:** எங்கள் உள்ளுணர்வு சொல்கிறது அவர்கள் எங்கேயோ தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என. பெயர் வெளியிடாதவர்களின் பட்டியலை வெளியிடுவதாகவும், இரகசிய முகாம்கள் உள்ளதென்றும் மகிந்த அரசு சர்வதேசத்திடம் ஒப்புக்கொண்டிருந்தது. பல சர்வதேச அமைப்புக்களும் இரகசிய முகாம்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் இந்த அரசுதான் சொல்கிறது, இரகசிய முகாம்கள் இல்லையென. திருகோணமலையில் தடுப்புமுகாம் இருந்ததற்கான தடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால் எமது உறவுகள் எங்கோ தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என சரணடைந்தவர்களின் உறவுகள் நம்புகிறார்கள்.

**தீபம்: தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்காக நடந்த போராட்டங்களிற்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் ஒரு உண்ணாவிரத போராட்டம் நடந்தது. அதில் கலந்து கொண்டிருந்தீர்கள். நமது பாரம்பரியமான மாட்டுவண்டு சவாரி உள்ளிட்ட பல பாரம்பரியங்களை சத்தமில்லாமல் தொலைத்து கொண்டு, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக உண்ணா விரதமிருப்பது முரண்பாடாக இல்லையா?**

**அனந்தி:** அந்த ஆதரவு போராட்டம் என்பது வெறுமனே ஜல்லிக்கட்டு ஆதரவு மட்டுமல்ல. இறுதி யுத்தத்தில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது தமிழக தமிழர்கள் எப்படி ஏமாற்றப்பட்டார்கள் என்பதை புரிந்துள்ளனர். அதனால் ஜல்லிக்கட்டு போராட்டம் தமிழக தமிழர்களிக் போராட்டமாக இல்லாமல் உலக தமிழர்களின் போராட்டமாக நடந்தது. நியாயமான அந்தப்போராட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஈழத்தமிழர்களிற்கான போராட்டமாகத் தான் அதை பார்க்க வேண்டும். வன்னியில் நாங்கள் கொல்லப்பட்டபோது, தங்களை தாங்களே மாய்த்த அந்த சொந்தங்களிற்கு நன்றிக்கடன் பட்டவர்களாக நாங்கள் இருக்க வேண்டும்.

**தீபம்: கணவனை இழந்த பெண்களிற்கு சமூகத்தில் பாதுகாப்பில்லை, உங்களை பார்த்தும் கண்ணடிக்கிறார்கள் என்று அண்மையில் சொல்லியிருந்தீர்கள். யுத்தத்தின் கணவனை இழந்த குடும்ப பெண்கள் ஏராளம் பேர் உள்ளனர். எப்படியுள்ளது அவர்கள் நிலை?**


**அனந்தி:** போரில் கணவன் கொல்லப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள், கைவிடப்பட்டவர்கள் என பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஏராளமாக உள்ளன. இராணுவ கெடுபிடி ஒருபுறம், நமது சமூக ஆண்களின் கெடுபிடி ஒருபுறம் என நெருக்கடியான வாழ்க்கை வாழ்கிறார்கள். பாதுகாப்பில்லாத நிலையை உணர்கிறார்கள். வடமாகாண சபையிடமும் இந்த விடயத்தில் உருப்படியான திட்டமில்லை. சரியான கட்டமைப்பொன்றை உருவாக்கி, இந்த குடும்பங்களை பாதுகாக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் இல்லாமல் போன பின் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதையும் சொல்ல வேண்டும். பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் சமூகமொன்றை உருவாக்க எல்லோரும் செயற்பட வேண்டும். ●






# நள்ளிரவில் தூங்காத மகிந்த மனைவி!




ரக்பி வீரர் வசீம் தாஜுடின் கொலை வழக்கில் புதிய தகவலொன்று கசிந்துள்ளது. கொலை நடந்த இரவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மனைவி சிராந்தி ராஜபக்சவின் நடத்தையில் சந்தேகம் இருப்பதாக, இந்த விசாரணையில் ஈடுபடும் இரகசிய பொலிசார் கருதுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தாஜுடின் கொலை நடந்த அன்று அலரி மாளிகையிலிருந்து சந்தேகத்திற்கிடமாக தொலைபேசி அழைப்புக்கள் சென்றுள்ளதாகவும், அது பற்றி ஆராய வேண்டியுள்ளதாகவும் இரகசிய பொலசார் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர். உரையாடல் விபரங்களை வழங்குமாறு, முன்னாள், இன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் விக்கிரமசிங்கவிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நீண்ட தாமதத்தின் பின்னர் அவை வழங்கப்பட்டிருந்தன. அவற்றை ஆராய்ந்ததில், கொலை நடந்த நள்ளிரவில் ஒரே இலக்கத்திலிருந்து 41 அழைப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளதாக விசாரணைக்குழு தகவல்கள் கூறுகின்றன. அந்த தொலைபேசி முன்னாள் ஜனாதிபதியின் பாரியாரினது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த அழைப்புக்களில் அனேகமானவை நாரஹேன்பிட்டிய முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் இன்னொரு அதிகாரிக்கே சென்றுள்ளன. இதுபற்றி விசாரணையாளர்கள் விசேட அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். இந்த விவகாரம் பற்றிய தெளிவுபடுத்தல்களை பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதியின் பாரியாருக்கு இரகசிய பொலிசார் விரைவில் அழைப்பு விடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# அவர்தான் காரணமாம்!



தேசிய அரசாங்கத்தில் அதிருப்திகள் எழுந்துள்ளன. ஐக்கிய தேசிக்கட்சி யுடன் இணைந்து ஆட்சி செய்ய முடியாதென சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தொடர்ந்து கூறி வருகின்றனர். இந்த பிளவு உச்சமடைந்து வரும் நிலையில், அண்மையில் யாழ்ப் பாண வருகையையும் நிறுத்திவிட்டு, உறுப்பி னர்களை சமரசம் செய்தார் ஜனாதிபதி.

அந்த சமரச பேச்சுவார்த்தையின் போது, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மீதே பெரும்பான்மையான சுதந்திரக்கட்சி யினர் குற்றம் சுமத்தியுள்ளனர். நிதியமைச்சர் தன்னிச்சையாக செயற்படுகிறார், அரசாங் கத்தின் மீது மக்கள் அதிருப்தியடையும் விதமான திட்டங்களையே அமுல்படுத்து கிறார் என்பதே அவர்களின் குற்றச்சாட்டு. நிதியமைச்சரை கட்டுப்படுத்தாவிட்டால், நல்லாட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படு மென்று பெரும்பாலானவர்கள் அபிப்பிராயப் பட்டுள்ளனர்.

அமைச்சரவை மாற்றத்தை விரைவில் செய்து, நிதியமைச்சை சுதந்திரக்கட்சிக்குள் கொண்டுவர வேண்டுமென்றும் அங்கு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. சுதந்திரக் கட்சிக்குள் இதுவரை இரண்டு பிரிவு இருந்தது. ஐக்கிய தேசியக்கட்சியுடனான முரண்பாட்டையடுத்து, கூட்டு எதிரணி யுடன் இணங்கிச் செல்லும் சுதந்திரக் கட்சிக்காரர்கள்தான் அதிகம் என்பதையும் அங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.


நிதியமைச்சு விவகாரத்தில் உறுதியாக முடிவெதனையும் எடுக்க முடியாமல் ஜனாதிபதி திண்டாடுவதாகவே தெரிகிறது. ஏனெனில், ரணில் விசுவாசியான ரவி கருணாநாயக்கவில் கைவைப்பது தேசிய அரசின் உடைவாகுமென்பதை மைத்திரி அறிந்தே வைத்திருக்கிறார். அதனால், அதிர்ஸ்டலாப சீட்டு விலைக்குறைப்பு உள்ளிட்ட சில தலையீடுகளை மட்டும் அவசரமாக செய்ய முடிவு செய்துள்ளதாக சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர்.



▶ வாழைச்சேனை கல்மடு கிராமத்தில் அத்துமீறி குடியேறி வீடு அமைத்திருந்தவரை நீதிமன்றத்தின் ஊடாக வெளியேற்றிய போதும், கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக அவர் மீண்டும் அந்தக்காணியை பெற முயன்றதற்கு எதிராக பிரதேச மக்கள் ஆர்ப்பாட்ட போராட்டம் நடத்தியுள்ளனர்.



▶ வெள்ளம் காரணமாக தரை வழி துண்டிக்கப்பட்ட மட்டக்களப்பு கிரான் புலிபாய்ந்தகல் பகுதிகளை பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் படகு மூலம் நேரில் சென்று பார்வையிட்டார். பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியதால் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1500 குடும்பங்களின் தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பொதுமக்களின் போக்குவரத்திற்காக இயந்திரப் படகுச் சேவைகள் கிரான் பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த பிரதான வீதி ஒவ்வொரு மழை காலத்திலும் வெள்ளத்தில் மூழ்குவது குறிப்பிடத்தக்கது.



▶ வாழைச்சேனை கல்மடு கிராமத்தில் அத்துமீறி குடியேறி வீடு அமைத்திருந்தவரை நீதிமன்றத்தின் ஊடாக வெளியேற்றிய போதும், கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக அவர் மீண்டும் அந்தக்காணியை பெற முயன்றதற்கு எதிராக பிரதேச மக்கள் ஆர்ப்பாட்ட போராட்டம் நடத்தியுள்ளனர்.





▶ தென்னை பயிர்ச்செய்கை சபையினால் வழங்கப்பட்ட மானிய திட்டங்களிற்காக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளிற்கு காசோலை வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது, கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர், உதவி பொது முகாமையாளர், கரைச்சி பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 400 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு நிகழ்வில் 150 பேருக்கு காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.



# கண்ணீர் தேசம்!

## வற்றாத கண்ணீருடன் அலையும் தாய்மாரின் கதை

✒ வன்னிமது

காணாமல் போனவர்களின் உறவினர்களால் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரையான உண்ணாவிரத போராட்டம், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவின் வாக்குறதியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. உறவுகளை பறிகொடுத்த பதின்னான்கு பேர் வவுனியா தபாலகத்திற்கு அருகில் கொட்டும் மழையின் மத்தியிலும் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டனர்.

தமிழர் தாயகத்தில் கொந்தளிப்பான நிலையொன்றை ஏற்படுத்திய நிலையில், நான்காம் நாளில் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. சரணடைந்த, காணாமல் போன தமது பிள்ளைகள் வேண்டுமென்ற கோரிக்கையுடன் நடைபிணங்களாக வாழும் உறவினர்கள், தமது மரணத்தின் மூலமாவது நீதி கிடைக்கட்டுமென துணிந்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

காணாமல்போன தமது உறவுகளின் படங்களை முன்னால் வைத்தபடி அவர்கள் மேற்கொண்ட சத்தியப்போர் நெஞ்சை உலுக்குவதாக இருந்தது. அவர்களின் சிலரது கண்ணீர்கதைகள் இவை.

**காசிப்பிள்ளை ஜெயவனிதா** - 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மாத்தளனில் வைத்து இராணுவத்தினரால் எனது மகள் பிடித்து செல்லப்பட்டாள். பிடித்து செல்லப்பட்ட போது 16 வயது. நான் இராணுவத்திடம் சென்று கேட்ட போதெல்லாம் எனது மகளை இராணுவம் பிடித்து செல்லவில்லை என்று கையை விரித்து விட்டார்கள். அவளை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. சிறிது காலத்திற்கு பின்னர் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அதில் எனது மகள் கொழும்பிலுள்ள ஒரு பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகிறாள். அவளை வந்து அழைத்து செல்லுங்கள் என்று கூறினார்கள். நான் போவதற்கு ஆயத்தமாகிய போது மறுநாள் அதே தொலைபேசி அழைப்பிலிருந்து அது






உங்களுடைய மகள் இல்லை என்று கூறினார்கள். நான் கதைத்துக் கொண்டு இருந்தபோது தொலைபேசி இணைப்பை துண்டித்து விட்டார்கள். நான் மீண்டும் முயற்சித்தபோது அந்த இலக்கம் இயங்கவில்லை. பின்னர் பிள்ளையை பல இடமும் தேடியும் கிடைக்கவில்லை. இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேனவின் தேர்தல் பிரச்சாரத்தில் உள்ள தேர்தல் துண்டுப் பிரசுரத்தில் எனது மகளை கண்டேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா முன்னைய ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றைத் தேர்தலின்போது 'மைத்திரி ஆட்சி.. 100 நாட்களில் புதிய நாடு' என்ற துண்டுபிரசுரத்தில் பிரசுரித்திருந்தார். அதில் வெள்ளை நிற பாடசாலை சீருடையுடன் நிற்கும் சில பிள்ளைகளுடன் எனது பிள்ளையும் ஜனாதிபதி மைத்திரி அருகில் நிற்கின்றாள். இதற்கு ஜனாதிபதி என்ன பதில் கூறப்போகின்றார். தன் அருகில் நின்றவர் யார் என்பதையும்

**நாங்கள் 10 மாதம் சுமந்து பெற்ற பிள்ளைகளை, உயிரோடு உள்ளவர்களை தேடுகின்றோம். எங்களது உறவுகளுக்காக வாதாடுகின்றோம். எத்தனையோ சகோதரிமார்கள் தனது கணவன்மார்களை, பிள்ளைகளை இழந்து ஒரு நேரம் கூட உணவு வழங்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள்.**

எங்கு உள்ளார் என்பதையும் ஜனாதிபதி வெளிப்படுத்துவாரா. காணாமல் போனவர்கள் என்று யாரும் இல்லை என்றால் ஜனாதிபதியின் அருகில் உயிருடன் இருந்த என்மகள் எங்கே.

**தனபாலசிங்கம் புஸ்பாம்பாள்** - நாங்கள் யுத்தம் முடிந்து ஏழு எட்டு வருடங்களாக எங்கள் பிள்ளைகளை கேட்டு, படாத கஸ்டங்கள் பட்டுள்ளோம். பிள்ளைகளை தேடுவதற்குரிய வழி இதுதான் என்று இறுதியாக உண்ணாவிரத முடிவிற்கு வந்துள்ளோம். ஜனாதிபதி பதவியேற்று இதுவரைக்கும் எதுவும் செய்யவில்லை. அவர் முன்னைய அரசிற்கு பயப்படுவதாகவே தெரிகின்றது. எங்களிற்கு இதை செய்து தருவதற்கு பயப்படுகின்றார். முப்பது வருட கால யுத்தம் நடந்ததிற்கு காரணம் அரசாங்கம். அவர்கள் கேட்டிருந்த கொடுத்திருந்தால் யுத்தம் நடைபெற்றிருக்காது. அதேபோல் தான் எங்களிற்கும். எட்டு வருடங்களாக எங்களது கைகளால் கொடுத்த பிள்ளையை

தொடர்ச்சி 25-ம் பக்கம்

வேலைவாய்ப்புக்கள்

அரச மற்றும் தனியார் வேலைவாய்ப்புக்களை உங்கள் மொபைலில் SMS மூலம் பெற

REG <இடைவெளி> JOBS என டைப் செய்து

77010 க்கு SMS அனுப்புங்கள்.

HUTCH CONTACT US FOR MORE INFO : 076 76 77 222 Dialog

*நிபந்தனைகளுக்குட்பட்டது

- Web Designing and Development
- Web Maintenance
- Cloud Software Development
- Mobile application Development
- Social Media Management
- Graphic Designing
- Professional Video Editing
- Video Advertising
- Online Marketing

பொங்கல் சிறப்புச்சலுகை

20% Off



"If your business is not on the Internet, then your business will be out of business."

- Bill Gates, Founder of Microsoft.

சர்வதேச தரத்தில் வணிக நிறுவகங்களுக்கான மென்பொருள், இணையத்தள வடிவமைப்பு, இணைய விளம்பரம் போன்ற அனைத்து வகையான தகவல் தொழில்நுட்ப சேவைகளை பெற

assistia® YOUR TRUSTED IT PARTNER

www.assistia.lk

#18, Vairavarkovil Rd, Vairavapuliyankulam, Vavuniya.

076 76 77 222 | 024 222 8118




# குழந்தைப் போராளி

அரச இராணுவத்தின் மிகப் பெரிய படையணி ஒன்றை நாங்கள் சில நாட்களிலேயே எதிர்கொண்டோம். எங்களுக்கிடப்பட்ட கட்டளைப்படியே நாங்கள் மணலில் "ஒன்றுமறியாது" விளையாடிக்கொண்டிருந்தோம். வந்துகொண்டிருந்த அரச படையினரின் வாகனத் தொடரணி விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளைக் கண்டதும் நிறுத்தப்பட்டது. படையினர் வாகனங்களிலிருந்து கீழே குதித்தனர். அதுதான் நாங்கள் விரித்திருந்த வலையில் அரச படையினர் விழுந்ததற்கான அடையாளம். நாங்கள் எங்கள் படைப் பிரிவினர் பதுங்கியிருந்த திசையை நோக்கி ஓட்டம் பிடித்தோம். நாங்களெல்லோரும் பாதுகாப்பான இடத்திற்கு ஓடிப் போனதும் மற்றவர்கள் அரச படையினரைத் தாக்கத் தொடங்கவேண்டும். ஆனால் திட்டமிட்டபடி காரியங்கள் நடக்கவில்லை. துப்பாக்கிகள் நாங்கள் பதுங்குமிடத்திற்குப் போய்ச் சேர்வதற்கு முன்னதாகவே வெடித்ததால் நாங்கள் மரங்களின் பின்னால் பதுங்கிக் கொண்டோம். வீதியும் அதன் மேலிருந்த எல்லாமும் துண்டு துண்டாக வெடித்துச் சிதறின. வெடிச் சத்தங்கள் காதைச் செவிடுபடுத்தின. இதுவரை இவ்வாறான ஒரு அனுபவமுமே இல்லாத எனக்கு ஈரற்குலை நடுங்கியது. இது விளையாட்டாகத் தெரியவில்லை. நான் எழுந்து செல்ல எத்தனிக்க என் தோழனொருவன் என்னைப் பிடித்திழுத்து மரத்தின் பின்னே அமுக்கி வைத்திருந்தான்.

சண்டை முடிவடைந்து எங்கள் படைப்பிரிவு தாக்குதலில் வெற்றி பெற்றது. கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடைகளும் காலணிகளும் இடம் மாறி அவற்றின் புதுச் சொந்தக்காரர்களை அலங்கரித்தன. எனக்கோ தலை சுற்றியது. இதுதானா விடுதலை? இதைத் தானா நாங்கள் விடுதலைப் போராட்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்? இப்படியானவர்களுடன் நான் சேர்ந்திருப்பதையும் இறந்த உடல்களிலிருந்து பொருட்களை அபகரிப்பதையும் என்னால் ஒரு கெட்ட கனவில் கூட ஏற்றுக்கொள்ள முடியாது. காயமடைந்தவர்கள் வீதியில் கிடப்பதையும் உதவி கோரி அலறுவதையும் பார்த்த எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர்களைப் பகைவர்களாகப் பார்க்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. சரணடைந்த இராணுவத்தினரின் கைகள் அவர்களின் முதுகுகளிற்குப் பின்னால் வளைத்துக் கட்டப்பட்டிருந்தன. அவர்கள் வலியால் துடித்துகொண்டிருந்தனர். எனது தோழர்கள் சரணடைந்த இராணுவத்தினரைச் சித்திரவதைகள் செய்துகொண்டிருந்தனர். தங்களது அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டோரைத்துன்புறுத்துவதும்சித்திரவதைசெய்வதும் தான் மனிதனுக்கு எல்லாவற்றையும் விட அதிக இன்பத்தைக் கொடுக்கும் என்ற எனது கருத்திற்குப் பலம் சேர்ப்பதாகவே நிகழ்வுகள் அமையலாயின. இந்தக் கோணத்தில் பார்த்தால் எனது புதிய "குடும்பம்" பழைய குடும்பத்திற்குக் கிட்டவே நிற்கமுடியாது.

பிடிபட்டவர்கள் உதைக்கப்பட்டும் முகத்தில் காறி உமிழப்பட்டும் முகாமிற்குக் கொண்டுவரப்பட்டார்கள். அங்கு அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். எங்களின் பெருந்தலைவர் யோவேரி முசேவெனி எங்களுக்காக முகாமில் காத்துக்கொண்டிருந்தார். அவர் எங்களை ஒரு புகழுரையுடன் வரவேற்றார். அவரின் பேச்சின்படி நாங்கள் சிறுபொழுது மண்ணில் விளையாடியே பெரிய விடுதலை வீரர்களாகியிருந்தோம். அன்று இரவுணவிற்காகத் தலைவருடன் ஒரே மேசையில் அமரும் 'பாக்கியமும்' எங்களுக்குக் கிட்டியது.


இரவுணவு முசேவெனியின் பிரத்தியோகக் குடிலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முடிவில் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பரிசு தரப்பட்டது. மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இராணுவ அதிகாரிகளின் சீருடைகளும் காலணிகளுமே எங்கள் பரிசுப் பொதியினுள் இருந்தன. அன்றிரவு எங்களக்கு காவற் கடைமை தரப்படவில்லை நீண்ட நேரம் தூங்க அனுமதி கிடைத்தது.

அடுத்த நாள் காலையில் நாங்கள் எங்கள் பாசறையை ஒரு புதிய இடத்தை நோக்கி நகர்த்தும் ஆயத்தங்களில் இறங்கினோம். ஒரு தாக்குதலின் பின்பும் அதே இடத்தில் தொடர்ந்து நிலை கொண்டிருந்தால் இராணுவத்தினர் ஆட்டிலரிப் படைகளுடனும் உலங்கு வானூர்திகளுடனும் எங்களைச் சுற்றிவளைத்து விடக்கூடும்.

உயரே கயிற்றிலாடும் ஒரு 'சேர்க்கஸ்' கலைஞனின் லாவகத்தோடு எங்கள் படை நகரத் தொடங்கியது. காலணிகள் முழங்கால்கள் வரை உயர்ந்திருக்க அளவில் மிகப் பெரிய சீருடைகள் எங்களை முற்றாகவே விழுங்கிவிட்டிருந்தன. இந்தக் கோலத்துடன் காட்டுப் பாதையில் அணிவகுத்துச் செல்வதென்பது இலேசான காரியமல்லவே. குழந்தைகள் எல்லோரும் களைத்துப் போயிருந்தனர். நல்ல வேளையாக ஒரு பெண் போராளி தலைவருடன் துணிச்சலாக வாதிட்டு ஒரு சிறிய ஓய்விற்கும் உண்பதற்கும் அனுமதி வாங்கினாள். வழமையைப் போலவே பயறும் சோளமும் தான் சாப்பாடு. குழந்தைகள் நீரைத் தேடியும் நெருப்பிற்கு விறகு தேடியும் போகத் தலைவர் தனது தளபதிகள் புடைசூழ மர நிழலில் இளைப்பாறிக்கொண்டிருந்தார்.

தளபதிகள் குழாமில் ஒரு சிறுமியுமிருந்தாள். 'முக்கோம்போஸி' என இவள் அழைக்கப்பட்டாள். இதன் கருத்து 'விடுவிக்கப்பட்டவள்' என்பதாகும். அரச படையினர் இவளது குடும்பத்தை அழித்தொழித்தபோது NRA இவளைச் சுவீகரித்துக் கொண்டது. இராணுவத்திடமிருந்து இவள் தப்பித்தது ஏறத்தாழ ஒரு அதிசயம் தான். இராணுவத்தினரே இவளது உயிரைக் "காப்பாற்றியதாகவும்" பேசப்படுவதுண்டு. படையினர் தாக்கப்படும் ஒவ்வொரு முறையும் அவர்கள் இவளை ஜீப்பின் முன்னால் கட்டிவைப்பார்களாம். NRAயின் ஒரு வெற்றிகரமான தாக்குதலில் இராணுவத்தினர் கொல்லப்பட இவள் காப்பாற்றப்பட்டாள். வெடி குண்டுகளின் சத்தத்தில் அவள் தனது பெயரைக் கூட மறந்து போயிருந்தாள் . 'முக்கோம்போஸி' இரண்டு விடயங்களுக்காக எங்களிடையே பிரபலமாகியிருந்தாள். அவள் அசாத்தியமான நெஞ்சுரம் கொண்டவள். அடிபாட்டின் போது அவள் ஸிறிநியைத் தாங்கித் துணிச்சலுடன் போரிடுவாள். அவள் சிறிய ஆயதங்களைச் சீண்டுவதே கிடையாது. RPG ஒரு 'பஸூக்கா' அளவிற்குப் பெரியது.

(தொடரும்)



# சிலநேரங்களில் சிலஅனுபவங்கள்...

கேற்றைத் திறந்து அவள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற பொழுது, பாடசாலை விட்டு பிள்ளைகள் சென்று கொண்டு இருந்தார்கள். அவளின் நினைவுகளும் 5 வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வை இரை மீட்கத் தொடங்கியது. பாடசாலையில் அவளின் பிள்ளைகளை சேர்ப்பதற்காக சென்ற பொழுது, தானும் வரிசையில் பெற்றோர்களுடன் அமைதியாகக் காத்திருந்தாள். திடீர் என ஒரு குரல் அமைதியைக் கிழித்தது. "நாங்கள் கஸ்ரப் பட்டனாங்கள் ஐயா, எங்களிடம் காசு கட்டுவற்கு வசதியில்லை எங்கட பிள்ளைகள் மாக்ஸ் எடுத்த படியால் தானே விண்ணப்பித்தோம்?. அதற்கான 'இன்டர்வியூ'வுக்குத் தானே வந்தோம்?. எங்கட பிள்ளை கெட்டித்தனமாகப் படிப்பா என்று தானே இங்க சேர்க்க வந்தனாங்கள்" என்றார் ஒருபெண்மணி. ஆனால் அவர்களோ காசு கட்டாமல் சேர்ப்பதாகத் தெரியவில்லை.

பின்பு அந்த தாய்க்கு (முன்பு மன உளைச்சல் இருந்ததன் விளைவோ தெரியவில்லை) மன உளைச்சல் மாதிரி ஏற்பட்டு நெஞ்சுக்குள் ஏதோ செய்வதாக கூறினார். வெளியில் காற்றுப் பிடிக்க இருக்கும் படி சுற்றி இருந்தவர்கள் அவருக்குதண்ணீரும்கொடுத்து, காற்று பட விசிறி விட்டார்கள். அதன் பிற்பாடு பாடசாலையின் செலவில் ஆட்டோ பிடித்து அவரையும், பிள்ளைகளையும் ஆட்டோவில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அந்தப் பிள்ளைக்கு இடம் போட்டு கொடுத்திருப்பார்கள் என்று தான் இன்று வரை அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். ஒரு மாதம் சென்ற பின் தற்செயலாகஅவள் ஆஸ்பத்திரிக்கு சென்ற போது அந்த அம்மாவை ரிக்கற் வெட்டி (வாட்டில் இருந்திருக்க வேண்டும்) இரண்டு பிள்ளைகள் கூட்டிக் கொண்டு போவதைப் பார்த்ததும் இப்போது அவளுக்கு நினைவுக்கு வந்தது;.


"தற்போதைய எங்கள் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும் போது தூர இடத்துப் பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு அனுப்பாமல், கிட்டவாக உள்ள பாடசாலைகளுக்கு அனுப்புவதே நல்லது. கெட்டித்தனமுள்ள பிள்ளைகள் எங்கே என்றாலும் படிப்பார்கள் என்பதும் ஒரு நிதர்சனமான விடயம்.

பிறகும் எதற்காக வான்களிலும், ஆட்டோக்களிலும் அனுப்பி பிரச்சினைகள் பலவற்றிக்கும் பிள்ளைகளும், பெற்றோர்களும் முகம் கொடுக்கவேண்டும். பிள்ளைகள் பள்ளி விட்டு வருவதற்குத் தாமதமாகினால் பெற்றோர் படும்பாடு சொல்லில் அடங்காது. பலவற்றையும் கற்பனை பண்ணி கற்பனைக் குதிரையில் ஏறி நிற்பர். முதலில் பாடசாலைகளில் அண்மையாக உள்ள பிள்ளைகட்கு இடம் கொடுக்க வேண்டும். தூரத்துப் பிள்ளைகளை அவர்களின் நிலவரங்களை பார்த்து அனுமதிக்க வேண்டும். வெயில், மழை பாராமல் பாடசாலை கேற்றடியில் நின்று வாகனத்திற்குப் பிள்ளைகள் தவமிருப்பது அடிக்கடி நாம் காணும் காட்சிகளில் ஒன்று.

இந்தக் காலம் யாரையும் நம்ப முடியாத காலம் என்பதால் அதற்கு ஏற்றபடி பிள்ளைகள் ஒழுக்கமாக வளர வேண்டும். யாரும் கெடுதல் செய்ய வந்தால், எதிர்த்து ஏதாவது ஒரு தற்காப்பு முறையை மேற்கொள்ளப் பிள்ளைகள் பழகியிருக்க வேண்டும். ஒதுக்குப்புறமான பாதைகளை பாவிக்கக் கூடாது. மக்கள் அதிகமாகப்போய் வரும் பாதைகளைப் பாவிக்க வேண்டும். கண்ணில் மண்ணைத் தூவுவது கூட தற்பாதுகாப்புத் தானே.

ரூபா
கந்தர்மடம்

இது போல் நீங்களும் சில
விடயங்களை அவதானித்திருக்கலாம்
அல்லது அனுபவித்திருக்கலாம். அவற்றை
ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ள
விரும்பினால், உடனே எமக்கு எழுதுங்கள்.
ஆசிரியர் பீடம்,
தீபம்,
editor@deepam.lk
197, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்



# காதலை ஏற்கலாமா?

இந்த பரீட்சையில் பாஸாகுபவர்களிற்கு ஓகே செய்யுங்கள் பெண்களே!

காதலில் பெண்கள் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். பழகும் நபர் அல்லது காதலை வெளிப்படுத்தும் நபர் எப்படிப்பட்டவர் என்பதை தெரிந்து கொண்டுதான் காதலை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டு அவஸ்தைபட்டுவிடக்கூடாது.

பழகும் ஆண் நண்பரின் நடவடிக்கைகள் என்ன? அவர் நல்லவரா, கெட்டவரா? காதலை ஏற்கவா, வேண்டாமா? என்ற குழப்பத்தில் தவித்தால் நீங்கள் தெளிவான முடிவினை அதிரடியாக எடுக்க இந்த பரிசோதனை வழிகாட்டும்!

**கீழ்க்காணும் கேள்விகளுக்கு நிதானமாக பதில் அளியுங்கள்.**

1. நீங்களும், அவரும் சந்திக்கும் இடங்களை முடிவு செய்வது நீங்கள்தானா?
2. அவரை நினைக்கும்போது மனதில் உற்சாகம் பீறிடுகிறதா?
3. மற்றவர்களைவிட அவரிடம்தான் அதிக நெருக்கம் காட்டுகிறீர்களா?
4. உங்கள் மீது அதிக அன்பைப் பொழிவது அவர்தானா?
5. உங்கள் துயரத்தை போக்குவதற்கு அவரே சரியான நபரா? அவரது ஆறுதலே உங்களை கவலையில் இருந்து வெளிக் கொண்டு வருகிறதா?
6. வெளிப்படையாக பேசுகிறாரா? அவரைப் பற்றிய விஷயங்கள் பெரும் பாலும் உங்களுக்கு அத்துப்படியா?
7. அவரது ஒழுக்கம் உங்களுக்கும், சுற்றி யிருப்பவர்களுக்கும் திருப்தியளிப்பதாக உணர்கிறீர்களா?
8. அவருடனான பிரிவு வாட்டுகிறதா?
9. தன் தகுதியைத் தாண்டியும் உங்கள் தேவையை நிறைவேற்ற போராடு கிறாரா?
10. நீங்கள் ஏதாவது பிரச்சினையில் சிக்கியபோது முதல் ஆளாக வந்து உதவினாரா?
11. ரகசிய சந்திப்புகளுக்கு அழைக்கிறாரா? தொட்டுத் தொட்டுப் பேசுவதை விரும்புகிறாரா?
12. அவருடன் எல்லாவற்றிலும் சற்று இடைவெளி அவசியம் என நினைக் கிறீர்களா?
13. வேறு பெண்களுடனும் நெருக்கம் காட்டுகிறார் என நினைக்கிறீர்களா?
14. நிறைய விஷயங்களில் ரகசியம் பின்பற்றுபவர் என கருதுகிறீர்களா?
15. சந்திப்பின்போது செக்ஸ் உறவு பற்றிய பேச்சுகள் மிகுதியாக இருக்கிறதா?
16. அவரை ஏற்றுக் கொள்ள மனம் தயங்குகிறதா?
17. திருமண பேச்சை எடுத்தால் மழுப்பு கிறாரா?
18. நண்பர்கள், தோழிகள் அவரது பின்புலத்தை சந்தேகிக்கிறார்களா?
19. காதலுக்கு தடையாக இருக்கும் விஷயங்களை கண்டு நடுங்குகிறாரா?
20. கலந்துரையாடும்போது அவரது முடிவுக்கு கட்டுப் படும்படி உங்களை நிர்பந்திக்கிறாரா?

இந்த கேள்விகளுக்கு ஆம்/இல்லை என்று பதில் அளியுங்கள். முதல் 10 கேள்விகளுக்கு ஆம் என்ற பதிலுக்கு 10 மதிப்பெண்களும், 11 முதல் 20 வரையுள்ள கேள்விகளுக்கு இல்லை என்ற பதிலுக்கு 10 மதிப்பெண்களும் கொடுங்கள். அதேபோல முதல் 10 கேள்விகளுக்கு 'இல்லை' என்ற பதிலுக்கு 5 மதிப்பெண்களும், 11 முதல் 20 வரையுள்ள கேள்விகளுக்கு 'ஆம்' என்ற பதிலுக்கு 5 மதிப்பெண்களும் கொடுங்கள்.

**உங்கள் மதிப்பெண் 160க்கு மேல் இருந்தால்..?**

சிறந்த நபரையே தோழராக கொண்டுள்ளீர்கள். வாழ்க்கைத்துணையாக ஏற்கவும் அவர் தகுதியானவர்தான். பண்பிலும், பழக்க வழக்கங்களிலும் சிறந்த அவரை துணையாக ஏற்க தயங்க வேண்டாம். எதிர்பார்ப்புகள், இடையூறுகள் இருந்தால் சுமுகமாகப் பேசி சுப முடிவுக்கு வரலாம். கெட்டி மேளம் கொட்டத் தயாராகலாம்!

**மதிப்பெண் 90 முதல் 160 வரை இருந்தால் :**

நீங்கள் இருவரும் சிறந்த நண்பர்கள். நிறைய விஷயங்களில் உங்களுக்குள் கருத்து ஒற்றுமை நிலவுகிறது. அதனால் உங்கள் நட்பும், உறவும் மகிழ்ச்சியாக செல்கிறது. ஒருவர் மீது ஒருவர் மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறீர்கள். இவரைப் போல சிறந்தவர் தனக்கு துணையாக வந்தால் வாழ்வும் நம் நட்புபோல சந்தோஷமாக பயணிக்குமே என்ற எண்ணம் இருவருக்குள்ளும் எழலாம். அவ்வளவு இணக்கமானது உங்கள் நட்பு. இந்த சூழலில் அவர் காதலை வெளிப்படுத்தினால், யோசித்து சிறந்த முடிவை எடுக்கலாம். உங்கள் வாழ்க்கை கனவுகளுக்கு அவர் சரியானவர், சின்னச்சின்ன இடையூறுகள், பிரச்சினை களைத் தாண்டியும் அவர் ஜோடி சேர ஏற்றவர் என்ற எண்ணமிருந்தால் காதலை ஏற்றுக் கொள்ளுங்கள்.

**உங்கள் மதிப்பெண் 80க்குள் இருந்தால்..?**

மற்ற ஆண் நண்பர்களைப் போலவே அவரிடமும் பழகுகிறீர்கள். அவருக்கென்று தனி முக்கியத்துவமோ, காதலராக கருதும் எண்ணமோ உங்களிடம் இல்லை. காதலர் ஆவதற்கு அவர் தகுதியானவரும் இல்லை. இத்தகைய ஆண் நண்பர், உங்களிடம் காதலை வெளிப்படுத்தினால் நிச்சயம் காதலை ஏற்றுக் கொள்ள வேண்டாம்.










உலகின் முன்னணி சமூக வலைத்தளமான பேஸ்புக், தனது பயனாளிகளுக்கு அவ்வப்போது புதுப்புது வசதிகளை அறிமுகம் செய்து இன்ப அதிர்ச்சியை கொடுத்து வருகிறது. அந்த வகையில் லேட்டஸ்ட்டாக பேஸ்புக் அறிவித்த வசதி பேஸ்புக் லைவ் வீடியோ. இதன் மூலம் எந்த ஒரு நிகழ்ச்சியையும் வீடியோ லைவ் செய்து மகிழலாம்.

இந்நிலையில் இந்த வசதி இதுவரை பேஸ்புக் மொபைல் அப்ஸ்க்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்போது லப்ரொப் மற்றும் டெஸ்க்ரொப் கொம்ப்யூட்டரிலும் லைவ் வீடியோ வசதியை பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது.

உங்கள் லப்ரொப்பில் இருக்கும் கமரா மூலமோ அல்லது டெஸ்க்ரொப் கொம்ப்யூட்டரில் உள்ள வெப் கமரா மூலமோ தற்போது பேஸ்புக் லைவ் வசதியை பயன்படுத்தி மகிழலாம். முதல்கட்டமாக இந்த வசதி செலிபிரிட்டிஸ், பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு தரப்படவுள்ளது. அவர்களுக்கு இந்த வசதி மிக முக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் பேஸ்புக்கில் 5000 அல்லது அதற்கு மேல் ஃபொலோயர்கள் உள்ளவர்களுக்கும் இந்த வசதி விரைவில் தரப்படவுள்ளது. மேலும் இந்த வசதியை பயன்படுத்துபவர்களுக்கு அவர்கள் பதிவு செய்யும் லைவ் வீடியோவிற்கு கிடைக்கும் ரெஸ்பொன்ஸை பொறுத்து இந்த சலுகை அவர்களுக்கு நீட்டித்து வழங்கப்படும். மேலும் வீடியோ லைவ் செய்யும்போது அந்த வீடியோ குறித்த விவரங்கள் மற்றும் கொமெண்ட்ஸ் களை பதிவு செய்யும் வசதியும் உண்டு. மேலும் லைவ் வீடியோவை தங்கள் நண்பர்களின் பேஸ்புக் பக்கங்களுக்கு ஷேர் செய்யும் வசதியையும் பேஸ்புக் நிறுவனம் தருகிறது. மேலும் லைவ் வீடியோக்கள் மட்டுமின்றி இந்த லைவ் வீடியோக்களை ரெக்கோர்டிங் செய்து அதை ஒரே நேரத்தில் பல பக்கங்களில் பதிவு செய்யும் வசதியும் பேஸ்புக் நிறுவனம் தரப் போகின்றது.

## ருவிற்றரிலும் தொடரலை

கடந்த மாத இறுதியில், தனது பயனர்களுக்கு 360 பாகை காணொளி தொடரலை (Streaming) வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது டுவிற்றர் தளம்.

இதன் மூலம் டுவிற்றர் பயனர்கள் நேரலை (Live Video) காணொளியில், 360 பாகையில் அங்குள்ள காட்சிகளைக் காண முடியும்.

இது குறித்து டுவிற்றரின் வடிவமைப்புப் பிரிவுத் தலைவர்களில் ஒருவரான (Virtual Reality & Augmented reality head) அலெசாண்ட்ரோ சபாடெலி தனது வலைப்பதிவில் தெரிவித்துள்ள தகவலில், "இந்த 360 பாகை காணொளிகள் ருவிற்றர் பாவனையாளர்களிற்கு புதிய அனுபவத்தை கொடுக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்த நேரலைக் காணொளிகளுக்கு பெரிஸ்கோப் (Periscope) என்ற செயலி பயன்படுத்தப்படுகின்றது.



# இராமர் வந்த நகரம்
## மானிப்பாய்

நிலவன்

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் தெற்குப் பிரிவில் புகழ்பூத்த ஊர்களில் ஒன்று தான் மானிப்பாய். யாழ்ப்பாணத்தில் இருந்து 12 கிலோமீட்டர் துலீரத்திலுள்ளது. சண்டிலிப்பாய், நவாலி, சுதுமலை, உடுவில், ஆனைக்கோட்டை பிரதேசங்களை எல்லையாக கொண்ட நகர். மாதகல், இளவாலை, காரைநகர் பிரதேச பேருந்துப் பயண வழித்தடங்களை யாழ் நகரத்துடன் இணைக்கும் அமைவிடம் மானிப்பாய் நகரம்.

### பெயர்க் காரணம்

மானிப்பாய் என்று பெயர் வந்தற்கு பல்வேறுபட்ட வரலாற்றுக் காரணங்கள் சொல்லப்படுகின்றன.

- மானி என்பது பொழில் (சோலை) எனவும் பாய் என்பது இருக்கை அல்லது இருப்பு எனவும் பொருள்படும். அதாவது, சோலைகளின் இருப்பிடம் என்ற அர்த்தத்திலேயே மானிப்பாய் என்று பெயர் பெற்றது என்பதையே அனேகர் கூறுகிறார்கள். (மாணி என்ற சொல்லின் திரிபே மானி ஆகும்).
- மான் வடிவத்தில் இராமனை திசை திருப்பி வந்த மாரீசனை இராமன் இந்த இடத்தில் வைத்து "மானே நிற்பாய்" என்று கூறியதாகவும், அவ்வாறு கூறியும் மான் நிற்காததால் இராமர் அம்பு எய்தி மானைக் கொன்றதாகவும் அம்பு பட்ட மான் இளவாலைப் பிரதேசத்தில் விழுந்ததாகவும் (அவ்வாறு மான் வடிவத்தில் இருந்த மாரீசன் விழுந்த இடமே தற்போது "மாரீசன் கூடல்" எனப்படுகின்றது. ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு. மானே + நிற்பாய் என்பது பிற்காலத்தில் மானிப்பாய் என்று மருவியதாகச் சொல்கின்றார்கள்.
- மானி + பாய் என்பதன் சேர்க்கையே பிற்பாடு மானிப்பாய் ஆனது என்றொரு கருத்தும் உள்ளது. (மானி என்ற சொல் மாணி என்ற சொல்லின் திரிபாகும்) பண்டை நாட்களில் பிராமணருக்கு மாயமாக வழங்கப்பட்ட நிலம் என்பதால் இப் பெயர் வந்திருக்கலாம் என்பதும் ஒரு கருத்து.

இவை அனைத்தையும் விட இவ் ஊரின் பெயரானது மானப்பாய அல்லது மானிப்பாய என்ற சிங்களப் பெயரின் திரிபு என்று கூறுவொரும் உண்டு. ஆயினும் தமிழ் அறிஞர்களின் கருத்துப்படி மானி என்பது பிராமணரைக் குறிக்கும். (பிரமச்சாரி, கோயிற் தொண்டர் ஆகிய பொருள்களும் வரும்). ஆகவே பிராமணர் இருந்த இடமே மானிப்பாய் என்பதே அவர்கள் கூறும் பெயர்க் காரணமாகும்.

### பிரபலம்

மானிப்பாய் பிரதேசத்தில் அதிகமாக பெரியவர்கள் வாழ்ந்துள்ளனர். முதலியார் நமச்சிவாயம் (சேர் பொன்னம்பலம் இராம நாதன் அவர்களின் மாமனார்), சேர். அருணாசலம் மகாதேவன், நீதிபதி சிவா. செல்லையா, ஏ. மாணிக்காவசகர் என பல பிரபலங்கள்ளை கொண்டிருந்த ஊர். அதேபோன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுப் பிரபலமடைந்த இசைக்கலைஞரான வீரமணி ஐயர், கட்டிடக் கலைஞரான வீரமணி ஐயர், கட்டிடக் கலைஞரான வி.எஸ் துரைராஜா, மருத்துவரான அப்பாக்குட்டி சின்னத்தம்பி போன்றோரும் இந்தப் பிரபலங்களின் தொடர்ச்சியே.

மிஷனரிகளின் காலத்தில் கல்வியில் கோலோச்சியிருந்தவர்கள் மானிப்பாய் வாசிகளே. மானிப்பாய் பிரதேசத்திற்கென்று விளையாட்டு மைதானம், நூலகக் கட்டிடம், காணி என்பவற்றை அளித்த அதிகார் செல்வமுத்து, பெரும் தமிழ்ப் பணியினை மேற்கொண்ட சுவாமி ஞானப்பிரகாசியார், ஆ.முத்துத்தம்பிபிள்ளை, பாலவர் சரித்திர தீபகத்தை எழுதிய அ.சதாசிவம் பிள்ளை, சமூகஜோதி கேட் முதலியார் தியாகராசா, கரோல் விஸ்வநாதபிள்ளை (சுதுமலை) போன்றோர் மானிப்பாயின் அடையாளங்களே.

### வைத்தியம்

யாழ்ப்பாணத்தில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க மிஷன் சபையின் சார்பில் அமெரிக்காவில் இருந்து வந்த மருத்துவரான சாமுவேல் பிஸ்க் கிறீன் என்பவரால் 1864ஆம் ஆண்டு இங்கே ஒரு மருத்துவமனை நிறுவப்பட்டது. இவ் வைத்தியர் மேல் நாட்டு மருத்துவத்தை தமிழில் கற்றுக் கொடுத்ததன் மூலம் சிறந்த வைத்திய பணியாளர்களை உருவாக்கிப் பெருமை பெற்றார்.

அது மட்டுமின்ற தமிழியற் கல்வி நூலாக்கம், கலைச் சொல்லாக்கம் போன்ற முயற்சிகளிலும் இவர் ஈடுபட்டு வெற்றி கண்டார். இவரது ஞாபகர்த்தமாக இன்றும் இவ் வைத்தியசாலை 'கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை' என்ற பெயருடன் இயங்கி வருகின்றது.

கிறீன் நிறுவிய வைத்தியசாலையின் மூலம் மானிப்பாய் மக்கள் மட்டுமல்லாமல் சுற்றியுள்ள பல ஊர் மக்களும் பயன் பெற்றனர். கிறீன் மூலம் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்ட முதல் வைத்தியர் டொக்டர் மில்ஸ் என்பவரே. (இவரது வீடு வைத்தியசாலையின் முற்புறமே அமைந்திருந்தது. தற்போது அந்த இடம் விருந்தினர் விடுதியாக மாற்றம் பெற்றுள்ளது) அண்ணா மலைப் பரிகாரியாரும் இவரது கற்பித்தலின் கீழ் உருவாகிய சிறந்த ஓர் மாணவராவார்.

### கல்வி

மானிப்பாய் பிரதேசமானது கல்வித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க பின்னணியைக் கொண்டுள்ளது. ஆங்கில மிஷனரிமார்கள் சில பாடசாலைகளை நிறுவினாலும் பிற் காலத்தில் நம்மவர்களால் நிறுவப்பட்ட பாடசாலைகளும் இன்று புகழ்பூத்த பாடசாலைகளாக வீற்றிருக்கின்றன. மானிப்பாய் மெமோறியல், மானிப்பாய் இந்துக் கல்லூரி (1910இல் நிறுவப்பட்டது) மானிப்பாய் மகளிர் கல்லூரி (1963இல் நிறுவப்பட்டது) போன்ற பாடசாலைகள் பிரபலமான பாடசாலைகளாகும். (மானிப் பாய் இந்துக் கல்லூரியில் சுவாமி விபுலாநந்தர், பொன். கந்தையா போன்றோர் ஆசிரியர்களாகப் பணியாற்றியமை பெரும் சிறப்பாகும்).

கல்வித் துறையில் மட்டுமில்லாது விளையாட்டுத் துறையிலும் மானிப்பாய் பிரதேசம் சிறப்புற்று விளங்குகின்றது. மானிப்பாயில் அமைந்துள்ள செல்வமுத்து மைதானம் ஆனது இளைஞர்களின் மத்தியில் மட்டுமல்லாது முதியோர்கள் மத்தியிலும் மிகவும் புகழ் பெற்று விளங்கும் மைதானமாக விளங்கு கின்றது.

இப் பிரதேசத்தில் மட்டுமல்லாது வலி தென் மேற்கிலேயே ஒரே ஒரு தேசியப் பாட சாலையாக அமைந்திருக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரியானது கல்வி, விளையாட்டுக்களில் சிறப்பான பெறுபேறுகளை வெளிக் காட்டுவதைக் காண முடிகின்றது. பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும் இப் பாடசாலைக்குப் பெருமளவில் கிடைத்து வருகின்றது. அண்மைய (2016) க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளில் கலைப் பிரவில் மாவட்டத்தில் முதலிடத்தினையும், தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தையும் இப் பாடசாலை (பத்மநாதன் குருபரேசன்) பெற்றிருந்தார்.

மானிப்பாயின் கல்வி வளர்ச்சியில் நூலகத்தின் பங்களிப்பும் இன்றியமையாத தாகும். 1968இல் ஆரம்பிக்கப்பட்ட மானிப் பாய் பொது நூலகம் தற்போது 8612 நூல் களையும் 900க்கும் மேற்பட்ட வாசகர்களையும் கொண்டுள்ளது.


### சமூக அமைப்பு

மானிப்பாய் கோவிற்பற்று என்பது முற்காலத்தில் மானிப்பாய், சண்டிப்பாய், நவாலி, சுதுமலை, ஆனைக்கோட்டை போன்ற கிராமங்களை உள்ளடக்கிய கிராம சபையாக இருந்தது. 1952ஆம் ஆண்டில் மானிப்பாய் தனி ஒரு பட்டினசபையாகப் பிரிந்தது. 5 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டதாக மானிப்பாய் நிர்வகிக்கப்பட்டு வந்தது. (தற்போது 7 வட்டாரங்கள் காணப்படுகின்றன). பேரின்பநாயகம் என்பவரே முதலாவது பட்டினசபைத் தலைவராக இருந்திருக்கின் றார். மானிப்பாயின் சிறு வீதிகளுக்கு பெயர் வைத்தவரும் இவரே. (மூத்ததம்பி லேன், சங்கரப்பிள்ளை லேன் வகையறாக்கள்)

### நகர்ப்புறம்

மானிப்பாயில் முன்னர் ஒன்றிரண்டு கடைகளே காணப்பட்டன. மகாலட்சுமி ஸ்ரோர்ஸ், தில்லையம்பலம் கடை, கார்த்தி

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



சந்தை



சென்.அன்ரனீஸ் தேவாலயம்



சென்.அனீஸ் தேவாலயம்



அமெரிக்கன் மிஷன் சேர்ச்

கேசு கடை போன்றவை அறியப்படக் கூடிய வையாக இருந்தன. அப்போது விதானையால் வழங்கப்படும் கூப்பன்களுக்கான பொருட் களையும் இவர்கள் வழங்கி வந்தனர். அதேபோல் தற்போது பிரபலமாக உள்ள சுந்தர்சன் வாணிபத்தின் ஆரம்பமும் மானிப்பாயில்தான். சுந்தரம் என்பவரின் வழிநடத்தலின் கீழ் 1955களில் பிரபலமாக சைக்கிள் வியாபாரத்தை மேற்கொண்ட இந் நிறுவனம் இப்போது பெருவிற்பனை நிறுவனமாக விஸ்பரூபம் எடுத்துள்ளது.

நகர்ப்புறத்தில் குறிப்பிடக் கூடிய இன்னு மொரு விடயம் மானிப்பாய்ச் சந்தை. மரக்கறிச்சந்தை, மீன்சந்தை என்பன மிகவும் அருகருகே சிறியதோர் இடத் துக்குள் காணப்படுவது சற்றே சிரமத்தினை ஏற்படுத்துவதாக அமைவதால் தற்போது (அருகிலேயே) ஒரு மீன் சந்தைக்கான தற்காலிகக் கட்டடம் அமைக்கப்பபட்டிருந் தாலும் அக் கட்டடம் இன்னும் திறந்து வைக்கப்படவில்லை. இளவாலை, மாதகல், காரைநகர் ஆகிய மூன்று பெரும் இடங்களை பஸ் மூலம் இணைக்கும் இடமாக மானிப்பாய் இருப்பதனால், யாழப்பாணத்தில் இருந்து தத்தம் ஊர்களுக்குச் செல்பவர்கள் இடை யிலுள்ள மானிப்பாய்ச் சந்தைக்கு வந்து செல்கின்றனர்.

### கோவில்கள்

மானிப்பாயில் அதிகமாக இந்துக்களே வாழ்கின்றார்கள். பிரபலமான மருதடி விநாயகர் கோவில் இங்குதான் அமைந் துள்ளது. இந்தியாவில் இருந்து தியாகராஜா சுவாமிகள் ஒரு பிள்ளையார் சிலையை கொணர்ந்து மருத மரத்தடியில் வைத்து சிறு கோவில்கள் கட்டி வழிபட்டதால் இக் கோயிலுக்கு இப் பெயர் உண்டாயிற்று.


“மானி மருதிற் புதறானை வான்பதியில்
ஞானச் சுடராய் நயந்தானை ஆனை
முகத்தானை ஐங்கரனை முன்னவனை யன்பர்
அகத்தானைப் போற்றும் அகம்”

என்ற பாடல் மூலம் மருதடி விநாயகரால் மானிப்பாய்சிறப்புற்றதைக்காணலாம்.மருதடி விநாயகர் கோயிலோடு சேர்ந்ததாக சுதுமலை அம்மன் கோவில், அட்டகிரி முருகன் கோவில், களவோடை அம்மன் கோவில் போன்றவை பெயர் பெற்று விளங்கும் கோவில்களாகத் திகழ்கின்றன. (மானிப்பாயில் ஒவ்வொரு சிறு சிறு கோவில்களாக பல கோவில்களைத் தரிசிக்கலாம்)

மானிப்பாய் வடக்கில் உள்ள பெரியதம்பிரான் ஆலயமானது பதினேழாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இருந்தே வழிபாடுகள் நடத்தப் பெற்றுவரும் ஆலயமாகும். இங்கு ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதத்தில் பெரும் பொங்கல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

மானிப்பாயில் அமெரிக்க மிஷனரிகளின் ஆதிக்கம் கடந்த நூற்றாண்டில் இருந்தமை யால் புரட்டஸ்தாந்தியரே இந்துக்களை அடுத்து அதிகமாக உள்ளனர். இவர்களது வழிபாட்டிற்கென்று மருதடி விநாயகர் ஆலயத்திற்கு நேர் முன்னதாக பழமையான அமெரிக்க மிஷன் ஆலயம் ஒன்று காணப் படுகின்றது. தூரத்திலிருந்து பார்க்கும்போது இவ்விரு கோவில்களின் கோபுரங்களும் அருகருகே ஒட்டியதாக காணப்படுவது மிகவும் அழகான காட்சியாகும்.

தற்போது கத்தோலிக்கர்களே அதிகம் காணப்படுவதால் சென்.ஆன்ற்ஸ் தேவாலயம், புனித அந்தோனியார் தேவாலயம், நவாலி சென். பீட்டர்ஸ் தேவாலயம் போன்றவை கத்தோலிக்கர்களின் வழிபாட்டிடங்களாகக் காணப்படுகின்றன. புனித அந்தோனியார் தேவாலயம் ஒரு யாத்திரைத் தலமாகையால் வெளியிடங்களிலிருந்தும் பக்தர்கள் செவ்வாய்க் கிழமைகளில் அதிகமாக வருகி றார்கள். பதுவை நகரிலிருந்து புனித அந்தோனி யாரின் அழியாத நாக்கு இவ் ஆலயத்திற்க


மருதடிப் பிள்ளையார் ஆலயம்


சென்.பீற்றர்ஸ் தேவாலயம்



மானிப்பாய் இந்துக்கல்லூரி

கொண்டு வரப்பட்டமையும் இன்னொரு சிறப்பு. கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி இந்துக் களும் அளவற்ற நம்பிக்கையுடன் இவ் ஆலயத்தை நாடி வருவதை அவதானிக்க முடிகின்றது.

### தொழில்

மானிப்பாய் பிரதேச மக்கள் கமத் தொழிலையே தமது பிரதானமான தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். எஞ் சிய சிறுபான்மையினர்கள் கள் இறக்குதல், வியாபாரம் போன்ற தொழில்களை (அரச தொழில் உட்பட) மேற்கொண்டு வருவதைக் காண முடிகின்றது. தற்போது நிலைமை மாறி, அரச, தனியார் உத்தியோகத்தர்கள்தான் அதிகமாக உள்ளனர்.

### போக்குவரத்து

மானிப்பாய் நகரம் ஆரம்பத்திலிருந்தே போக்குவரத்து மத்திய நிலையமாக இருந்தது. பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடங்களில் இருந்து வரும் பேரூந்துகள் மானிப்பாயை ஊடறுத்தே சென்றன. அரசாங்க பஸ்களை விட பஸ் கம்பனிகளின் பஸ்களும் தம் சேவையைப் போக்குவரத்திற்கு வழங்கின. இப்போது மாதகல், காரைநகர், இளவாலை பகுதிகளிலிருந்து வரும் பஸ்கள் மானிப்பாயினூடாகவே செல்கின்றன.

### இன்ன பிற

- மானிப்பாய் நவாலிப் பகுதியில் ‘இடிகுண்டு’ எனப்படுகின்ற ஒரு இடம் உண்டு. 1960ஆம் ஆண்டளவில் இவ் இடத்தில் இடி விழுந்ததால் இந்தப் பள்ளம் உருவானது. இப் பள்ளத்தினுள் எப்போதும் நீர் நிறைந்து காணப்படும். 40 அடி நீளமும், 30 அடி அகலமும் கொண்ட இப் பள்ளத்தின் ஆழம் கண்டறியப்படவில்லை. இதில் விழுந்து பலர் தற்கொலை செய்திருக்கின்றார்கள் என்பது கூடுதல் தகவல்.
- மானிப்பாயில் (சந்தைக்கு முற்புறமாக) வெஸ்லி திரையரங்கம் என்ற பெயரில் ஒரு திரையரங்கம் காணப்பட்டது. எனினும் தற்போது அது இல்லை.
- மானிப்பாய் பிரதேசத்திலும் சுமை தாங்கிகள் ஆங்காங்கே காணப்பட்டன. காரைநகரில் இருந்து நவாலி ஊடாக மானிப்பாயை அடைந்து பின் தாவடி ஊடாக திருநெல்வேலிக்கு கால்நடையாக சுமைகளைக் கொண்டு சென்ற மக்களிற்கு இவை உதவியாக இருந்தன.
- மின்சாரப்பாவனைக்கு முன்னர் தேங்காய் எண்ணெய் விளக்கு மாத்திரமே வீடுகளில் இருந்தது. சாப்பிடும் போது மட்டுமே அதைப் பயன்படுத்தினார்கள். குழந்தை பிறந்த வீடுகளில் மட்டும் விடியும் வரையில் விளக்குகள் எரிந்தன.
- மானிப்பாயில் வாழ்ந்த லோட்டன் குடும்பத்தினரால்தான் அங்கு மண்ணெய் விளக்கும், கமராவும் அறிமுகம் செய்யப் பட்டன.
- மானிப்பாயில் 26 வருடங்களாக இயங்கி வருகின்ற இளைஞர் தாகசாந்தி நிலையத் தினர், இப் பகுதியில் தாகசாந்தி, கற்றல் ஊக்குவிப்புக்கள், பொதுப் பணிகள் போன்ற பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
- யாழில் உள்ள மூன்று ஆறுகளில் ஒன்றான வழுக்கியாறு மானிப்பாயின் ஊடாகவே செல்கின்றது. இது இவ்வூர் மக்களின் விவசாயத்திற்குப் பெரிதும் உதவியது.

### வரலாறு

போராட்ட வரலாற்றில் மானிப்பாய் பிரதேசத்திற்கென்றும் ஒரு தனி இடம் உண்டு. 1995 கீரிமலை, மாதகல், காரைநகர் போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களைத் தன்னுடன் இணைத்து அரவணைத்துக் கொண்டது மானிப்பாய். 09.07.1995 அன்று நவாலி சென்.பீட்டர்ஸ் தேவாலயத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 147 பேர் பலியானதுடன் 324 பேர் படுகாயமடைந்தனர். இத் துக்க நினைவாக வருடா வருடம் ஆடி 9ஆம் திகதி விசேட பிரார்த்தனைகள் இவ் ஆலயத்தில் நடாத்தப்பட்டு வருகிறது.

இதேபோல்தான் 1983இல் திருநெல்வேலி யில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப் பட்ட குண்டுத் தாக்குதலின் எதிரொலியாக மானிப்பாயில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேரூந்தை மறித்து அதில் இருந்து சுமார் 10இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

### தேவைகள்

யாழில் இருந்து மூன்று பிரதானமான இடங்களுக்கு மக்கள் பேரூந்து மூலம் சென்று வருகின்ற முக்கிய இணைப்பு இடமாக மானிப்பாய் காணப்பட்டாலும் பிரதான வீதிக்குரிய அம்சங்களோடு மானிப்பாய் வீதி இல்லை. பல இடங்களில் குன்றும் குழியுமாகவே வீதியுள்ளது. எனவே வீதிப் புனரமைப்பே தற்போது மானிப்பாயின் முக்கிய தேவையாகும்.





▶ வாகரை பிரதேச செயலக பிரிவிலுள்ள ஆண்டாங்குளம் மக்கள் குடியிருப்பிற்குள் கடந்தவாரம் யானை புகுந்தது. மின்சார வேலி அமைக்கப்பட்டபோதும், அதை உடைத்துவிட்டு யானைகள் புகுந்திருந்தன.



## 2017- எதிர்பார்க்கப்படும் படங்கள்

2017ம் ஆண்டு ரசிகர்களிற்கு கொண்டாட்ட வருடமாக இருக்கும். பெரிய நடிகர்கள் அனேகரின் எதிர்பார்க்கும் படங்கள் வெளியாகவுள்ளன. இதனால் முன்னணி நடிகர்களின் ரசிகர்கள் அதிக எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள். ஏற்கனவே விஜய் நடித்த பைரவா வெளியாகிவிட்டது. அடுத்து வெளியாகி பரபரப்பை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படும் படங்களின் பட்டியல் இது.

**2.0:** சிவாஜி, எந்திரன் படங்களின் பின் ரஜினி, சங்கர் இணையும் படம். தமிழ் சினிமாவில் முதன்முறையாக 300 கோடிக்கு மேல் செலவு செய்யப்படும் படம். ஒரு வருடத்தின் முன்னரே வெளியீட்டை அறிவித்து விட்டார்கள். அடுத்த வருடத்தில் பெரிய சாதனை படைக்குமென எதிர்பார்க்கப்படும் படம்.

**சபாஷ் நாயுடு:** கமல்ஹாசனின் இயக்கம், நடிப்பில் அமெரிக்காவில் ஆரம்பித்த படப்பிடிப்பு, காதலின் கால் காயத்துடன் பாதியில் நின்றது. இப்போது அவர் தேறிவிட்டதால் விரைவில் படப்பிடிப்பு நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப்படமும் கமல் ரசிகர்களிற்கு விருந்து படைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏ.கே 57:** (பெயரிடப்படாத அஜித் படம்): சிறுத்தை சிவா, அஜித் இணையும் மூன்றவது படம். படத்திற்கு இன்னும் பெயர் வைக்காமல் பரபரப்பாக படப்பிடிப்பை நடத்துகிறார். காஜல் அகர்வால், அக்ஸரா உள்ளிட்டவர்கள் நடிக்கிறார்கள். அஜித் சிவா இணைந்து ஏற்கனவே வெளியான படங்கள் உள்ளூர் தாதாக்கள் கோலோச்சிய படங்கள். இந்தப்படத்தில் வெளிநாட்டு களத்தை மையமாக வைத்து கதை தயார் செய்துள்ளனர். தாதாக்களை தாக்கியழிப்பதென்றால் அஜித் பின்னியெடுப்பார். இதில் வெளிநாட்டு சாகசங்களும் சேர்ந்தால்?. நிச்சயம் ரசிகர்களிற்கு விருந்து படைப்பார் என எதிர்பார்க்கலாம்.

**எஸ் 3:** தமிழ் சினிமாவில் ஒரு படத்தின் மூன்றாம் பாகம் வெளியாவதே சாதனைதான். சூர்யாவின் எஸ் 3 இந்த வகைதான். முதல் இரண்டு படங்களில் இணைந்து பணி செய்தவர்கள்தான் புதிய பாகத்திலும் நடிக்கிறார்கள். சூர்யா நடித்த அண்மைய படங்கள் சில நன்றாக வசூலாகவில்லை. புதிய படம் அந்த குறையை தீர்க்குமென சூர்யா நம்புகிறார்.

**என்னை நோக்கி பாயும் தோட்டா:** இந்த படத்தில் கௌதம் மேனன், தனுஷ் முதன்முதலாக இணைந்துள்ளனர். இதன் டீசர் வெளியானதிலிருந்தே, அச்சம் என்பது மடைமையடா படத்தின் இரண்டாம் பாகமென இருக்கும் அல்லது அதையே கொஞ்சம் மாற்றி எடுத்துள்ளார்களோ என்ற சந்தேகம் ரசிகர்களிடம் உள்ளது. ஆனால் இதுவரை பார்க்காத தனுசை இதில் பார்க்கலாம். தனுஷ், கௌதம் மேனன் இருவருமே முத்திரை பதித்தவர்கள். இருவரும் முதன்முதலாக இணையும் படம் எப்படியிருக்குமென்ற எதிர்பார்ப்பு அதிகமுள்ளது.

**அன்பானவன் அசராதவன் அடங்காதவன்:** த்ரிஷா இல்லன்னா நயன்தாரா மூலம் செம லோக்கல் படத்தை கொடுத்த இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரனின் படம். சும்மாவே கம்பு சுத்தும் சிம்புவுக்கு இதில் தமன்னா, ஸ்ரேயா என இரண்டு நாயகிகள். கற்றவித்தையெல்லாவற்றையும் சிம்பு பயன்படுத்துவார் என எதிர்பார்க்கலாம்! இதில் அவருக்கு மூன்று வேடமாம். சிம்புவின் சினிமா வாழ்வில் சிறிய இடைவேளைக்கு பின் வரவுள்ள படம். வெற்றிக்காக ஏங்கும் சிம்பு, நிச்சயம் இதில் விருந்து படைத்தே ஆக வேண்டிய கட்டாயம் உள்ளது.

**கடம்பன்:** 2013 இல் வெளியான ராஜாராணிக்கு பின்னர் ஆர்யாவின் பெயர் சொல்லும் படங்கள் வரவில்லை. அவரும் வெற்றிக்காக ஏங்குபவர்தான். வழக்கமான காதல் படங்களில் நடித்துக் கொண்டிருந்தால் சரிவராதென வித்தியாசமான கதையை தேர்வுசெய்துள்ளார். மலைவாழ் மக்களை பற்றிய கதை. கடுமையான பயிற்சி செய்து உடம்மை மாற்றியுள்ளார் ஆர்யா. 2014 இல் வெளியாகி வெற்றியடைந்த மஞ்சப்பை படத்தை இயக்கிய ராகவனின் அடுத்த படம். இந்தப்படம் நிச்சயம் தனக்கு திருப்புமுனையாக இருக்குமென ஆர்யா எதிர்பார்க்கிறார்.

**விஜய் சேதுபதி படங்கள்:** கடந்த வருடத்தில் அதிக படங்களில் நடித்தவர் விஜய் சேதுபதி. இந்த வருடமும் இவர்தான் அதிக பட ஹீரோவாக இருப்பார் போலுள்ளது. ஒவ்வொரு படத்திலும் வெரைட்டி காட்டுவது சேதுபதி ஸ்பெஷல். கவண், புரியாதபுதிர், 96, விக்ரம்வேதா என இந்த வருடமும் படங்கள் வரிசை கட்டி நிற்கின்றன. இதில் எப்படியும் இரண்டு மூன்றாவது ரசிகர்களிற்கு விருந்து படைக்குமென நம்பலாம்.



# டூரிங் டாக்கீஸ்

## புதிய தோற்றத்தில் விஜய்

பைரவா படத்தை தொடர்ந்து விஜய் நடிக்கவுள்ள 61வது படத்தை அட்லி இயக்குகிறார். இதில் முறுக்கு மீசை, தாடியுடன் நடிக்கவுள்ளார். இதற்காக தாடி, மீசை வளர்த்து வருகிறார் விஜய். வரும் பெப்ரவரி மாதம் வரை விஜய் தாடி வளர்க்கவுள்ளார். அதற்காக படக்குழு காத்திருக்கிறது. அட்லியின் முதல்படமான ராஜாராணியில் நயன்தாரா, நஸ்ரியா நடித்தனர். தெறியில் சமந்தா, எமி ஜக்சன் நடித்தனர். புதிய படத்தில் காஜல் அகர்வாலுடன், சமந்தாவும் நடிக்கிறார். இதன்மூலம் அட்லியின் இரண்டு நாயகி வழக்கத்தை கைவிடாமல் தொடர்கிறார் என கொள்ளலாம்.

## சுனைனா புலம்பல்!

சுனைனா ஆரம்பத்தில் கவர்ச்சி வெடிகுண்டாகத்தான் வலம் வந்தார். காதலில் விழுந்தேன், மாசிலாமணி உள்ளிட்ட படங்களில் நடித்தார். பின்னர் வம்சம், நீர்ப்பறவை உள்ளிட்ட படங்களில் ரூட்டை மாற்றி குடும்பப் பாங்காக நடித்தார். இந்த சமயத்தில் ஸ்ரீகாந்துடன் நடித்த நம்பியார் படம் வெளியாக தாமதமாகியது. அதனால் படவாய்ப்புக்களும் கிடைக்காமல் போனது. அதன்பின்தான் இரண்டாவது நாயகியானார். ஜீவா நடித்த கவலை வேண்டாம் படத்தில் இரண்டாவது நாயகியானார். இப்போது சமுத்திரக்கனி இயக்கும் தொண்டன் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கிறார். இனி ஆழத்தமான வேடங்களில் நடித்து இடத்தை பிடிக்க வேண்டுமென்ற முடிவுடன், பல இயக்குனர்களிற்கு தூது விட்டுள்ளார் சுனைனா. ஆனால் அவர்கள் எல்லோரும் அவரை கவர்ச்சியாகத்தான் நடிக்க வைக்க விரும்புகிறார்களாம். இதை சொல்லி சுனைனான புலம்பிக்கொண்டிருக்கிறார்.

## அம்மாவான நயன்தாரா!


மாயா படத்தை தொடர்ந்து இமைக்கா நொடிகள் படத்தில் ஒரு குழந்தைக்கு அம்மாவாக நடிக்கிறார் நயன்தாரா. இதில் முதன்முதலாக பொலிஸ் வேடத்திலும் நடிக்கிறார். தனது நான்கு வயது மகளுடன் பாசத்தை வெளிப்படுத்தும் காட்சிகள் அதிகம் உள்ளதாம். மகளாக நடித்த மானஸ்வியுடன் இயல்பாக நடிப்பிருக்க வேண்டுமென்பதற்காக, உண்மையான அம்மாவைப் போலவே நயன் நடந்துள்ளார். மானஸ்வி விரும்பிய எல்லா பொருட்களையும் நயன் வாங்கியும் கொடுத்துள்ளார். ஆரம்பத்தில் படப்பிடிப்பில் மட்டுமே நயனை அம்மா என கூப்பிட்ட மானஸ்வி, இப்போது நேரிலும் அம்மா என்றுதான் அழைக்கிறாராம்!

## சிம்புவின் பேச்சைக்கேட்டு அடி வாங்கிய ரசிகர்!

சிம்பு என்றாலே வம்புதானே!. எதை சொன்னாலும் வில்லங்கமாகவே சொல்லிப்பழக்கப்பட்டவர். இப்பொது கொஞ்சம் பட்டு தெளிந்து, பக்குவமாக பேச முயற்சிக்கிறார். இந்த சமயத்தில்தான் ஜல்லிக்கட்டு விவகாரம் வந்தது. சிம்பு மௌனப்போராட்டம் நடத்தினார். வன்முறையை யாரும் கையில் எடுக்க வேண்டாம், அகிம்சை வழியில் போராடுவோம், தேசியக்கொடியை உடலில் போர்த்திக்கொண்டு போவோம், பொலிசார் தாக்கினால் தேசியகீதம் பாடுவோம் என எக்குத்தப்பு யோசனை சொன்னார். இதனையடுத்து சிம்பு ரசிகரொருவர் மெரீனா போராட்டகளத்திற்கு தேசியக்கொடியை போர்த்திக்கொண்டு சென்றுள்ளார். பேராட்டக்காரர்கள் மீது பொலிசார் தடியடி நடத்தியபோது, அந்த சிம்பு ரசிகரை தனியாக அழைத்து கவனித்துள்ளனர். சிம்புவின் யோசனைப்படி ஆரம்பத்தில் தேசியகீதம் பாடியுள்ளார். அவர் பாடப்பாட பொலிசின் அடியும் கூட, கதறியழுதுள்ளார். அதனை யாரோ வீடியோ எடுத்து சமூகவலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளனர். சிம்புவின் ரசிகரின் கதறல் வீடியோவை வைத்து சிம்புவை கலாய்த்து வருகிறார்கள்.

## சல்மான் கானின் கன்னத்தில் அறைந்த சாமியார்!

பிரபல தொலைக்காட்சி தொடரான பிக்பாஸ் நிகழ்ச்சியை சல்மான்கான் தொகுத்து வழங்குகிறார். இதன் 10வது சீசன் தற்போது நடக்கிறது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்கள் பிக்பாஸ் இல்லத்தில் இரண்டு மாதங்கள் தங்கவைக்கப்படுவார்கள். அவர்களின் நடவடிக்கைகள் வீடியோ எடுத்து ஒளிபரப்பப்படும். இந்த நிகழ்ச்சிக்கு பிரபல சாமியார் ஸ்வாமி ஓம் அழைக்கப்பட்டிருந்தார். அந்த இல்லத்தில் சாமியார் தகாத செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனால் சாமியார் வெளியேற்றப்பட்டார். இதையடுத்து அவர் அளித்தபேட்டியில், சல்மானின் கன்னத்தில் அறைந்ததாக கூறியுள்ளார். பிக்பாஸ் இல்லத்தை அடித்து நொறுக்குவென் என்றும் சாமியார் சண்டித்தனம் காட்டியுள்ளார். விளம்பர பிரியரான சாமியார், சல்மானை அடித்ததாக கூறுவது பொய் என நம்பப்படுகிறது.



# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

'பூமியில் உள்ள உயிரனங்களின் இரண்டாம் அறிவு நாவு' என்பது ஆசான் தொல்காப்பியர் பதிவு செய்த பரிமாணக் கொள்கையின் செய்திகளில் ஒன்று. முதல் அறிவு, தொடு உணர்வாகிய உற்றறிதல். நாவால் சுவைத்து அறிதல் இரண்டாம் அறிவு. சுவையின் வழியாக உணவின் தன்மைகளை அறிந்து கொள் ளும் முறைமைகள் இந்த அறிவில் புதைந்துள்ளன.

மிக எளிமையான சான்றுகளுடன் தொடங்குவோம். ஓர் உணவுப் பொருளை வாயில் இட்டதும் அதன் ஐம்பூதத் தன்மை முதலில் உணரப்படுகின்றது. குளிர்ச்சியோ வெப்பமோ அதிகம் இருந்தால், நாக்குத் துடிக்கின்றது. அந்தப் பொருளை எப்படியாவது வெளியே தள்ளிவிடத் தவிக்கின்றது. 'என்னால் தாங்கிக் கொள்ள முடியாத பருவ நிலையில் உள்ள பொருட்களை உள்ளே அனுப்பாதே' என்பது நாக்கு உரைக்கும் செய்தி. அதிகக் குளிர்ச்சி, சூடு ஆகிய தன்மைகளுடன் இருக்கும் பொருட்களை அப்படியே வயிற்றுக்குள் திணிப்பது, உடலின் பருவ நிலையில் தவறான மாற்றங்களை உருவாக்கிவிடும்.

அதிகக் குளிர்ச்சியான ஐஸ்க்ரீம் வகைகளை உண்ணும் போது, உடலுக்குள் வெப்பம் பரவுவதை உணரலாம். மிகையான சூட்டுடன் இருக்கும் பானங்களைப் பருகும் போது உடல் வியர்ப்பதையும் கண்களில் நீர் பெருகுவதையும் அறியலாம். இயல்புக்கு மாறான ஐம்பூதத் தன்மையுடன் உள்ளே வரும் எல்லாப் பொருட்களையும் உடல் தனது தன்மைக்கு மாற்றுவதற்காக கடின மாக உழைக்க வேண்டியுள்ளது. இவ்வாறான இயல்புக்கு மாறான பருவநிலை கொண்ட உணவுப் பழக்கங்கள் நீண்டகாலமாகத் தொடர்ந்தால், உடலின் ஐம்பூதச் சேர்க்கை எதிர்மறையான மாற்றங்களுக்கு உள்ளாகும்.

அதிகக் குளிர்ச்சி கொண்ட பொருட் களை நீண்ட காலமாக உண்டால், உடலின் உள்வெப்பம் மிகுந்து கொண்டே இருக்கும். இந்த உள்வெப்பம்தான் உடலின் நோய் எதிப்பாற்றல். காய்ச்சல் என்பதும், நோய் எதிர்ப்பாற்றலின் வடிவம் தான். சளி பிடிக்கும் போதெல்லாம் உடலில் மெல்லிய வெப்பம் பரவுவதைக் கவனிக்கலாம். இந்த வெப்பம் மிக அடிப்படையானது. உணவைச் செரிக்கவும் உள்வெப்பம் தேவை. ஒவ்வொரு வேளை உணவுக்குப் பிறகும் உணர்ந்து பாருங்கள், உடலின் உள்ளே மெல்லிய வெப்பம் உருவாகிக் கொண்டிருக்கும். ஏதேனும் விருந்து போன்ற சூழல்களில் கூடுதலான உணவு உண்டால், வயிற்றுப் பகுதியில் வெப்பம் அதிகரிக்கும். நமது இயக்கத்துக்கும் வெப்பம்தான் அடிப்படை பூதம். வெப்பம் குறைந்த உடலின் இயக்கமும் குறையும். உடலுறவு எனப்படும் புணர்ச்சிக்கு வெப்பம் இன்றியமையாதது.

வெப்பம் எனும் பூதம், உடலின் தேவைகளுக்கு ஏற்ப உருவாகின்றது. தேவைகள் முடிந்த பிறகு தானே மறைகிறது. ஒவ்வொருமுறை அதிக குளிர்ச்சி உள்ள பொருள் உள்ளே வரும்போது, அந்தக் குளிர்ச்சியைக் கட்டுப்படுத்தி இயல்பான பருவநிலையைப் பராமரிப்பது வெப்பத்தின் பணி. ஒருவேளை இந்தப் பணியை உடலின் வெப்பம் எனும் பூதம் செய்யத் தவறினால், உடல் குளிர்ந்து போகும். குளிர்ச்சியில் இருந்து வெப்பத்தால் மீட்டெடுக்கப்படாத உடலில் உயிர் தங்காது. ஆக, உடல்நலனுக்கு மட்டுமல்ல, உயிர் வாழ்க்கைக்கும் உடலின் உள்வெப்பம் தேவையானது.

செயற்கையான வகைகளில் குளி ரூட்டப்படும் உணவுகள், உடலின் உள்வெப்பத்தை தூண்டிக் கொண்டுதான் இருக்கும். உணவுப் பழக்கங்களில் அதிகக் குளிர்ச்சி உடைய பொருட்களை நீண்ட காலம் உட் கொண்டால், உடலின் உள்வெப்பம் தொடர்ந்தும் தூண்டப்படும். இதன் விளைவாக, உடலின் ஐம்பூத இயல்பு மாறிவிடுகின்றது. குறிப்பாக, வெப்பம் எனும் பூதம் வலிமையை இழக்கின்றது. தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் எதுவும் வலிமை இழக்கும் என்பது இயற்கை விதி.

இவ்வாறான குளிர்ச்சி உணவுகளைக் கட்டுப்பாடு இன்றி உட்கொள்வோரின் உடல்கள், கபம் அல்லது நீர்த்தன்மை மிகுந்தவையாக மாறிவிடும். அதாவது, வெப்பம் தனது செயல் ஆற்றலைத் தணித்துக் கொள்வதால், உடலில் நீர்த் தன்மையை அதிகரிக்கின்றது. எப்போதும் சளியுடன் வாழும் நிலை இவ்வாறான உடல் கொண்டோருக்கு உருவாகின்றது. நுரையீரல் குளிர்ச்சி அதிகரித்தால், உடலின் எல்லா மைய உறுப்புக்களும் பலவீனமடையும். நீண்ட காலத்தில் நிகழும் மாற்றங்கள் இவை என்றாலும், காரணங்களைப் புரிந்து கொள்ளாமல் இருந்தால் இந்த மாற்றங்களைத் தவிர்க்க இயலாது.

அதிகமான சூடுடைய பொருட்களை அடிக்கடி உட் கொண்டால், உடலின் நீர்த் தன்மை வற்றுகின்றது. உடலின் உள்ளிருக்கும் நீர்தான் தூய்மைப் பணிகளின் அரணாக உள்ளது. உடல் கழிவுகள் வெளியேறுவதற்கு நீர் தேவை.

**உடலின் உள்ளிருக்கும் நீர்தான் தூய்மைப் பணிகளின் அரணாக உள்ளது. நீரில்தான் உயிர்கள் தோன்றுகின்றன. உடலின் உள் இருக்கும் நீர்த் தன்மை தான், உடல் முழுவதுக்குமான செல்களின் வாழ்க்கைக்கான உணவு தரும்.**

நீரில்தான் உயிர்கள் தோன்றுகின்றன. உடலின் உள் இருக்கும் நீர்த் தன்மை தான், உடல் முழுவதுக்குமான செல்களின் வாழ்க்கைக்கான உணவு தரும். செல்களின் உள்கட்டமைப்பில் நீர்த் தன்மை மிகுந்திருப்பதைக் கவனிக்கலாம். உடலில் நீர்தான் பெரும் பகுதியாக இருக்கின்றது. நீரின் முக்கியமான இயல்பு என்னவெனில், அதிகமாக தேங்கவும் கூடாது அதிகமாக வெளியேறவும் கூடாது அதிகமான தேக்கம் நோயாகும் வெளியேற்றம் பலவீனமாகும்.

சூடான பொருளை தொடும்போது உடலின் உற்றறிவு, 'இது அதிகச் சூடானது' என்பதை உணர்த்துகின்றது. இதன் அறிவுறுத்தலை மீறி வாய்க்குள் அந்தப் பொருளைத் திணிக்கும்போது நாக்கு எச்சரிக்கை செய்கின்றது. 'என்னால் தாங்க இயலாத சூட்டுடன் இந்தப் பொருள் உள்ளது' என்பதை, தனது துடிப்பினாலும் எரிச்சல் எனும் உணர்ச்சியினாலும் வெளிப்படுத்துகிறது. இந்த இ[illegible] அறிவுகளையும் மீறி, வயிற்றுக்குள் அதிக சூடான பொருட்களைத் தள்ளும் போது உடல் தொல்லைக்கு உள்ளாகின்றது.

உள்ளே வரும் இயல்பு மீறிய உணவுகளுக் காக உடல் எதிர்வினையாற்ற வேண்டி யுள்ளது. அதிகமான சூட்டை சமாளிப் பதற்காக ஒவ்வொரு முறையும் தனது நீர்த் தன்மையை தூண்டுவது உடல் வழக்கம். நீண்டகாலம் இவ்வாறான எதிர்வினை நீடித்தால், உடலின் பருவநிலையில் மாற்றங்கள் உருவாகின்றன. உடலின் கழிவு வெளியேற்ற மண்டலங்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டிய நிலை உருவாகின்றது. இதனால் அதிக வியர்வை, அடிக்கடி அல்லது இயல்புக்கு மீறிய அளவில் சிறுநீர், விந்து நீர்த்தல், மாத விலக்கு உதிரப் போக்கில் மாற்றங்கள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# மனமே நலமா?

உங்கள் சந்தேகங்களை கேளுங்கள் பதிலளிக்கிறார்



**கு.நக்கீரன்**
உளவள ஆலோசகர்

சுமித்திரா,
வரணி.

**கேள்வி: நான் ஒரு பெண். வயது 28. நான்கு வருடங்களுக்கு முன் வீட்டை எதிர்த்துக் காதல் திருமணம் செய்து கொண்டேன். இதனால் எம் இரு வீட்டாரும் எம்முடன் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. இப்போது எனது பெற்றோருடன் எனக்கு சமரசம் ஏற்பட்டு விட்டதால் அவர்கள் எம் வீட்டிற்கு வந்து செல்கின்றனர். ஆனால் எனது கணவர் எனது பெற்றோரிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. இப்போதெல்லாம் நான் என்ன தவறு செய்தாலும் என பெற்றோரையும் திட்டுகின்றார். இவர் ஏன் இப்படி? இவரை எப்படிச் சமாளிப்பது என்றே தெரியவில்லை. எனக்கு ஒரு நல்ல முடிவு சொல்லுங்கள்.**

**பதில்:** காரணம் இல்லாமல் உங்கள் கணவர் உங்கள் பெற்றோர் மீது கோபிக்க மாட்டார் சகோதரி. நீங்கள் 4 வருடங்களுக்கு முன் பெற்றோர் எதிர்ப்பின் மத்தியில் பெற்றோரை விட்டு சென்ற போது உமது பெற்றோர் உமது காதலன் பற்றி கடுமையான கருத்துக்களைக் கூறியிருக்கலாம். அது சிலவேளைகளில் அவர் மனதில் பசுமரத்தாணியாகப் பதிந்திருக்கலாம். அதுதான் வள்ளுவரே கூறி விட்டாரே 'தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு' என்று. அப்படியில்லாவிடின் எமது சமூகத்தில் உள்ள அநேக இளைஞர்களைப் போல காதலிக்கும்போது 'நீ மட்டும் வேண்டும்' என்று கூறி கூட்டி வந்தவர் இப்போது வாழ்க்கைச் செலவு கூடியுள்ளதால் உமது வீட்டில் இருந்து வர வேண்டிய சீதனத்தை எதிர்பார்த்து திட்டம் தீட்டுகிறாரோ தெரியவில்லை. எதற்கும் உங்கள் கணவருடன் ஆறுதலாக, அமைதியாகப் பேசிப் பாருங்கள். கட்டு அவிழலாம்.

நீங்கள் பெற்றோருடன் ஒன்று சேர்ந்ததைப் போல் தன்னால் ஒன்று சேர முடியவில்லையே என்ற ஆதங்கமும் ஒரு காரணமாக இருக்கலாம். இல்லாவிட்டால் அவரது பெற்றோருடன் அவரைச் சேர்த்து வைக்க முயலுங்கள். எது எப்படியோ, வாழ்க்கை ஒரு விளையாட்டுத்தானே. விளையாடிப் பாருங்கள். நல்லதொரு அனுபவம் கிடைக்கலாம்.

வர்ஷினி,
மானிப்பாய்.

**கேள்வி: நான் ஒரு பெண். வயது 22. என்னோடு ஒன்றாகப் படித்த ஒருவரை நான் காதலித்தேன். அவரும் என்னை மிகவும் காதலித்தார். எமது காதல் அனுபவங்களை எனது நண்பியிடம் அடிக்கடி கூறுவதுண்டு. ஒரு வருடத்திற்கு முன் எனக்கும் எனது காதலருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்து விட்டோம். எனக்கும் காதலருக்கும் சண்டை ஏற்பட்டு நாம் பிரிந்ததற்கு எனது நண்பிதான் காரணமென இப்போது அறிகிறேன். எனது காதலரை நண்பியும் காதலித்தாராம். எனது நண்பி இப்படிச் செய்வார் என்று நான் நினைக்கவேயில்லை. அவர் விடயத்தில் நான் என்ன செய்வது?**

**பதில்:** சகோதரியே! இப்படிக் காதலனை நண்பியிடம் பறிகொடுத்த முதலாவது பெண்மணி நீங்கள்தான் என்று நினைக்க வேண்டாம். இப்படியான நண்பிகள் தொன்று தொட்டு இன்றுவரை உள்ளவர்கள்தான். என்றாலும் நீங்கள் அதிர்ஷ்டமுள்ள பெண் தான். ஏனென்றால் நீங்கள் காதலனைத் திருமணம் செய்தபின் உங்கள் நண்பி தட்டிப் பறித்திருந்தால் உங்கள் நிலைமை இன்னும் கவலைக்கிடமாக அல்லவா இருந்திருக்கும்? அதுபோல் காதலிக்கும் போதே எங்களைக் கைவிட்டு விட்டு அடுத்த பெண்ணைக் காதலித்த உங்கள் காதலன் திருமணத்தின் பின் இதைச் செய்திருந்தால் நிலைமை என்னவாயிருக்கும்?. இன்று நம் நாட்டில் ஏராளமானவர்கள் இப்படி 'ஆப்பிழுத்த குரங்கான' நிலையிலேயே மனதுக்குள் அழுதழுது வாழ்கின்றார்கள். உங்களுக்கு அப்படியொரு நிலையை ஆண்டவன் தரவில்லையே என்று ஆண்டவனுக்கு நன்றி கூறுங்கள். நான் உங்களுக்குக் கூறக்கூடிய ஒரு உண்மை காதலின் இருப்பையும், காசின் இருப்பையும் ஒருநாளும் நட்புகளுக்குக் கூறாதீர்கள். ஏனென்றால் எல்லா மனிதர்களும் எல்லா நேரத்திலும் உண்மையானவர்களாக இருப்பதில்லை. நல்ல மனதுடன் இருங்கள். நல்ல வாழ்க்கையே அமையும்.

சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் உங்கள் மனதை அரித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகள் உள்ளதா? உடனே எமக்கு எழுதி அனுப்புங்கள். மனநல நிபுணர்கள் உங்கள் பிரச்சனைகளிற்கான தீர்வை தர தயாராக இருக்கிறார்கள்.

**மனமே நலமா?**
தீபம் வாரஇதழ்,
197, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

---

உள்ளிட்டவை நிகழ்கின்றன.

இப்போதெல்லாம் உணவகங்களில் உண்ணும் வழக்கம் மிக அதிகமாக உள்ளது. இயல்புக்கு மாறான வகையில் சூடாக இருக்கும் உணவுகளின் எல்லா தீமைகளையும் உணவகங்களில் அதிகமாக உண்போரிடம் காணலாம். ஒருபுறம் குளிரூட்டிகளால் உணவகம் முழுவதும் செயற்கையான குளிரில் இருக்கும். மறுபுறம் அங்கு பரிமாறப்படும் உணவுகளின் வெப்பம் கூடுதலாக இருக்கும். இந்த முரண்பாடு உடலின் இயற்கைவிதிகளுக்குப் பொருந்தாது.

தேநீர், குளம்பி (கோப்பி) பழக்கங்களைப் பாருங்கள். சுடச் சுட இவற்றை அருந்துவது ஒரு பழக்கமாக இருக்கின்றது. இந்தப் பழக்கத்தை முற்றிலும் தவிர்க்க வேண்டியதில்லை. ஆனால், எத்தனை முறை இதைச் செய்கின்றோம் என்பது கவனிக்கபட வேண்டியது. ஒரு நாளில் 10 முதல் 20 முறை தேநீர் போன்ற சூடான பானங்கள் அருந்துவோர் இப்போது அதிகம் என்கிறேன்.

வயிறு அதிகமாக சூடானால் நாக்கில் புண்கள் வருவது உண்டு. உடல் தனது அகநிலையை நம்மிடம் வெளிப்படுத்தும் முறைகளில் இதுவும் ஒன்று. உடலின் உள்வெப்பம் குறைந்து குளிர்ச்சி அதிகரித்தால், நாக்கில் கோழை படருவதுண்டு. புண்கள், கோழை படருதல் ஆகிய இரு நிலைகளும் உடலின் அகப் பருவ நிலையைக் காட்டும் இரு வேறு அறிகுறிகள். இவை இரண்டும் பொதுவான ஒரு தகவலைக் கூறுகின்றன. 'உடலின் உள்ளே ஐம்பூதச் சேர்க்கையில் மாறுபாடு உருவாகியுள்ளது' என்பது அந்தச் செய்தி. நாக்கின் தகவல்களை முறையாகப் புரிந்து கொண்டால், உடலின் உள்ளே நிகழும் பல மாற்றங்களை மிக எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்.

செரிமான ஆற்றல் அதிகமாகப் பாதிக்கப் பட்டால், நாக்கில் சுவை மரத்துப் போகும். எந்த உணவின் சுவையையும் தெளிவாக உணர முடியாது. மற்றவர்களுக்குக் கூடுதல் சுவையாகத் தெரிவது, மரத்துப் போனவர்களுக்குக் குறைந்த சுவையாகத் தெரியும். பிறருக்கு அதிக சூடான பானம். இவர்களுக்கு மிதமான சூடாக இருக்கும். குளிர்ச்சியும் இவ்வாறு குறைவாகவே உணரப்படும். செரிமானச் சிக்கலின் மிக முக்கிய அறிகுறி இது.

நாக்கில் கசப்புச் சுவை உருவானால், பித்தம் மிகுந்துள்ளது எனப் பொருள். சுவையே இல்லாத கோழை நாக்கில் ஊற்றெடுத்தால், உடலில் கபம் மிகுந்து வெளியேற வழியின்றித் தேங்கிவிட்டது எனப் பொருள்.

நாக்கு எனும் இரண்டாம் அறிவு, சுவைகளின் வழியாகவும் பொருட்களின் பருவ நிலைகளின் வழியாகவும் உடலுக்குப் பணியாற்றுகிறது. எவருடைய நாக்கு, சுவைகளையும் உணவுப் பொருளின் பருவ நிலைகளையும் தெளிவாக உணர்கிறதோ, அவருடைய உடல் சிறப்பான நிலையில உள்ளது எனப் பொருள்.

பசிக்கும் வரை உண்ணாமல் இருத்தல் நாவின் உணர்வைச் சீராக்கும் மிக எளிய வழி. ஏதேனும் ஒரு காரணத்திற்காக நோன்பு இருந்துவிட்டு உணவு உட்கொள்ளும் அனைவருக்கும் நாவின் சுவை உணர்வு மிகச் சிறப்பாக இருக்கும். நோன்பு இருக்கும் போது உடலின் வெப்ப ஆற்றல் இயற்கையான வழிகளில் தூண்டப்படுகின்றது. தேங்கிக் கிடந்த காற்று, நீர் ஆகியவை உள்வெப்பத் தூண்டலால் வெளியேற்றப்படுகின்றன. விளைவாக, உடலின் பருவநிலை சீராகிறது.

பசிக்கும் போதெல்லாம் நீர் அல்லது நீர் உணவுகளை அருந்துவது நோன்பு காலத்தின் வழக்கங்களில் ஒன்று. இந்த வழக்கத்தினால், உடலின் நீர்த் தன்மையில் பற்றாக்குறை உருவாகாமல் இருக்கிறது. ஒரு புறம் பசியினால் தூண்டப்படும் வெப்பம். மறுபுறம் உணவாக வழங்கப்படும் நீர்மங்கள் என்ற இனிய முரண்பாடு, உடலின் கழிவுகளை அகற்றி வீசுகிறது. வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று மூலங்களின் கழிவுகளும் நோன்பில் வெளியேறுகின்றன.

நோன்பின் போது நன்கு பசிக்கையில் பருகும் பழச்சாறு நாவில் அமுதமாகிறது. நல்ல பசியில் இருக்கும் போது இனிப்பான பழச்சாறு நாவில் பட்டதும், உடல் எங்கும் கிளிர்ச்சி அடைவதை உணர முடியும். இனிப்புச் சுவையில், உடனடி இயக்கத்துக்குத் தேவையான ஆற்றல் உள்ளது. மயக்கம், படபடப்பு, சோர்வு, நீண்டநேரப் பட்டினி ஆகியவற்றின் போது இனிப்புச் சுவையுள்ள பானங்களைத் தருவது இதனால்தான். இனிப்பு, உடனடி செயல்பாட்டுக்கான ஆற்றல்களைத் தனக்குள் பொதித்துள்ள சுவை.

பட்டினிக்குப் பிறகு பருகும் பானத்தில் கசப்பு இருந்தால், நாக்கு அதைப் புறக்கணிக்கும். புளிப்பு இருந்தால், அதை ஒதுக்கி வைக்கும். துவர்ப்பு இருந்தால், சிறிது சங்கடத்துடன் அனுமதிக்கும். உவர்ப்பு இருந்தால் மிகக் குவீறாவக அனுமதிக்கும். மீறி அனுப்பினால், தொண்டைக் குழிக்கும் கீழே இறங்கியதும் வாந்தியாக வெளியேற்றப்படும். இனிப்பான பானத்தையோ நாக்கு வாரி அணைத்து உள்ளிழுக்கும்.

நாக்குக்கு எல்லாம் தெரியும். நாக்குக்குத் தெரியாத எதுவும் வயிற்றுக்குத் தெரிவது இல்லை. நாக்குத்தான் இந்த உடலாகிய கோயிலின் வாயிற்காவலர். இந்தக் காவலரை மீறி எந்த தீங்கும் உள்நுழைந்து விடாத வகையில் ஒவ்வோர் உடலும் படைக்கப்பட்டுள்ளது.


'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து உணர்வுகளையும் அவற்றின் வகை அறிந்து தெளிந்தவர்களுக்குத்தான் இந்த உலகம்' என்பது ஆசான் திருவள்ளுவர் வாக்கு.

ஐந்து அறிவுகளையும் வகைப்படுத்திய அவர், சுவையை முதன்மைப்படுத்தினார். ஒவ்வோர் அறிவின் பின்னாலும் இருக்கும் மறை பொருட்களை அறிந்து கொள்ளும் போது அண்டம் நமக்கு எதிரே விரிந்து தனது இயல்புகளை வெளிக்காட்டுகிறது. அது ஒரு பெரும் பயணம்.

நாக்கின் உணர்வு அறிந்து உணவு உட்கொள்ளும் எளிய வழக்கத்தை மேற்கொண்டால், அந்தப் பயணத்தைத் தொடங்கிவிடலாம்.

# ஆஸ்மாவை குணப்படுத்தலாம்!

சித்தவைத்தியர் சிங்காரவேலர்



இப்போது ஆஸ்மாவினால் பாதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கிறது. சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை தினமும் இந்த பிரச்சனையால் வைத்தியசாலைக்கு செல் பவர்கள் ஏராளம். சுற்றுச்சூழல் பாதிப்பு, வாழ்க்கைமுறை மாற்றம் என பல உப காரணங்கள் இருந்தாலும், சற்று முயன்றால் ஆஸ்மாவை நிரந்தரமாக இல்லாமல் செய்யலாமென்பதே உண்மை.

ஆஸ்மாவிலிருந்து விடுதலையடைய சித்த வைத்திய வழிகளை பார்க்கப் போகி றோம்.

### ஆஸ்மா

சுவாசப் பாதையில் ஏற்படும் வீக்கத்தி னால், இயல்பாக மூச்சுவிட முடியாமல் சிரமப்படுவதை ஆஸ்த்துமா (இரைப்பு நோய்) என்கிறோம். இதற்க்கு இழுப்புநோய், சுவாசகாசம் என்ற வேறு பெயர்களும் உண்டு.குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரையும் பாதிக்கக்கூடிய நோய்களுள் ஒன்று இது.

தூசி, புகை, பூவின் மகரந்தம், செல்லப் பிராணிகளின் முடி போன்றவை ஏற்படுத் தும் ஒவ்வாமையினால் நோய்எதிர்ப்புத் திறன் செயல்பாடாக சுவாசப்பாதை வீங்கி ஆஸ்மாவை ஏற்படுத்தலாம். சிலவகை வேதிப்பொருட்கள், இரசாயனங்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுவோருக்கு ஆஸ்மா தாக்கலாம். தீவிர மன அழுத்தத்தில் இருப்பவர்க்கு ஆஸ்மா ஏற்படலாம்; மரபு வழியாகவும் ஆஸ்மா தாக்குதலுக்கு உட்பட நேரிடலாம்; பிற உறுப்புகளான இதயம், சிறுநீரகம் பாதிக்கப்படுவதன் தொடர்ச்சியாகவும் ஆஸ்மா வரலாம். அதேபோல, நோய் எதிர்ப்புத் திறன் குன்றியவர்களுக்கும் ஆஸ்மா ஏற்பட வாய்ப்புண்டு.

### ஆஸ்மா அறிகுறிகள்

- மூச்சு விட சிரமம்
- இருமல்,சளி,
- இருமினாலும் சளி வெளிப்படாமை
- தும்மல், மூக்கில் நீர் ஒழுகல்
- மூச்சுத்திணறல்
- விலாப்பக்கங்களில் வலி
- மார்பை இறுக்கிப் பிடித்தது போன்ற வலி
- மூச்சு விடும்போது சத்தம் வராதது

ஆஸ்மாவுக்குச் சித்த மருத்துவம் தரும் தத்துவ விளக்கம் இதுதான்.

உணவு, செயல் மாறுபாட்டினால் உடலில் கபநாடியானது பாதிக்கப்பட்டு இரைப்பு நோய் ஏற்படுகிறது. அதேபோன்று வாதநாடி பாதிக்கப்படும்போதும் ஆஸ்மா உருவாகும்.

உணவினால் உண்டாகும் பாதிப்பு

ஐஸ்க்ரீம், குளிர்பானங்கள் போன்ற குளிர்ச்சியான உணவுகள் மற்றும் நீர்க் காய்கறிகள், மோர், பழச்சாறுகள் போன்ற குளிர்ச்சியை ஏற்படுத்தும் உணவுகள் உடலில் கபநாடியைப் பாதிக்கச் செய்து ஆஸ்மாவை உருவாக்கவல்லவை. இதே போன்று மிகுதியான கிழங்கு வகை உணவுகள், புளிப்புச் சுவையுடைய உண வுகள்,எளிதில்சீரணிக்கஇயலாதஉணவுகள் போன்றவை வாதநாடியைப் பாதிக்கச் செய்து ஆஸ்மாவை ஏற்படுத்தலாம்.



### செயல்பாடுகளினால் பாதிப்பு

தூசி, புகை, பூவின் மகரந்தம், செல்லப் பிராணிகளின் முடி, ஒவ்வாத நறுமணம் உடைய இடங்களில் தக்க பாதுகாப்பு இல்லாமல் இருத்தல் போன்றவற்றினால் ஆஸ்மா உருவாகலாம். (மூக்கை rnask கொண்டு மூடும்போது, இதனைத் தவிர்க் கலாம்) மழையில் நனைதல், பனியில் இருத்தல், குளிச்சியான தரையில் படுத்துத் தூங்குதல் போன்ற செயல்களும் ஆஸ்மாவை தூண்டுவதாக அமையும்.

### உணவே மருந்து

- அன்றாட உணவில், மிளகாய்க்குப் பதிலாக மிளகு பயன்படுத்தலாம். மிளகில் உள்ள கார்ப்புச்சுவை ஆஸ்மா நோயாளிகட்கு மிகவும் ஏற்றது. இது சளியை வெளியேற்றுவதோடு மட்டு மின்றி, ஆஸ்மா நோயின் தீவிரத்தையும் குறைக்கும். ஐந்து மிளகை வாயில் அடக்கிக்கொண்டு அதன் சாரத்தை முழுங்கிக் கொண்டுவந்தால் ஆஸ்மா கட்டுப்படும். மிளகு மட்டுமின்றி இஞ்சி, சுக்கு, சீரகம், வெந்தயம், மஞ்சள், பெருங்காயம், ஏலம் போன்றவற்றையும் சமையலில் அன்றாடம் சேர்த்துவர வேண்டும். இவற்றால் சீரணம் எளிதாக நடக்கும்.
- முசுமுசுக்கை இலையை அரைத்து தோசைமாவுடன் கலந்து தோசை யாகவோ, அடையாகவோ செய்து உண்ணலாம். முசுமுசுக்கை இலை நல்ல கோழையகற்றியாகச் செயல்படும்.
- தும்பையின் பூ, இலை இவற்றை துவையலாகச் செய்து உண்டு வரலாம்.
- இம்பூறல் என்னும் மூலிகைச்செடியின் இலைகளைப் பறித்து, சுத்தம் செய்து, அரைத்து, பச்சரிசி மாவுடன் கலந்து அடையாகத் தட்டி உண்ணலாம். இதனால் ஆஸ்மா நோய் கட்டுப்படும்.
- மணத்தக்காளிச் கீரைச்சாற்றுடன் மிளகுத்தூள் கலந்து உண்ணலாம்.
- தூதுவளை இலை சேர்த்துச் செய்த ரசத்தைப் பருகிவரலாம்.
- குடிப்பதற்கு எப்பொழுதும் இளஞ் சூடான நீரையே பயன்படுத்தலாம்.

### சாப்பிட வேண்டிய சித்த மருந்துகள்

- நொச்சி இலைக்கொழுந்து 1, மிளகு 2, பூண்டுப்பல் 1, கிராம்பு 1 இவற்றை மென்று சாரத்தை விழுங்கி வர ஆஸ்மா நோயின் தீவிரம் உடனடியாகக் குறையும்.
- கம்மாறு வெற்றிலைச்சாறுடன் மூன்று மிளகைப் பொடித்து உண்டு வர ஆஸ்மா குறையும்.
- ஆடாதோடைக் குடிநீர்ச் சூரணம் பயன்படுத்தினால் ஆஸ்மா கட்டுப்படும். இதனை எளிதாகச் செய்யலம். ஐந்து கிராம் ஆடாதோடைக் குடிநீர்ச் சூரணத்துடன் 600 மி.லி. நீர் ஊற்றி, அடுப்பில் சிறுதீயாக எரித்துக் கொதிக்கவைத்து, 75 மி.லி. அளவு வற்றவைக்க வேண்டும். இதனை வடிகட்டி காலை, மாலை வேளையில் உணவிற்கு முன்பு அருந்தி வரலாம். குழந்தைகளுக்கு 10 மி.லி. முதல் 30 மி.லி. அளவு கொடுக்கலாம்.
- காலை, மதியம், இரவு உணவிற்குப் பின் ஆடாதோடை மணப்பாகு எடுத்துக்கொள்ளலாம். இதனை 5 வயது வரையுள்ள குழந்தைகள் 5 மி.லி. அளவு உட்கொள்ளலாம். 5-10 வயது வரையுள்ளவர்கள் 10 மி.லி. அளவும், பெரியவர்கள் 15 மி.லி. அளவும் எடுத்து, சுடுநீருடன் கலந்து குடித்து வர ஆஸ்மா நோய் கட்டுப்படும்.
- தாளிசாதி சூரணம் காலை, இரவு உணவிற்கு பின் தேனுடன் சேர்த்துச் சாப்பிடலாம். 3 - 5 வயதுள்ள குழந் தைகள் 1/4 தேக்கரண்டியும், 5-10 வயது குழந்தைகள் 1/2 தேக்கரண்டியும், பெரியவர்கள் 1 - 3 தேக்கரண்டியும் சாப்பிடலாம்.
- கற்பூராதி சூரணம் காலை, இரவு உணவிற்கு பின்பு, 13 தேக்கரண்டி சாப்பிடலாம். (பெரியவர்களுக்கு மட்டும்)
- திப்பிலி சூரணம் - காலை, இரவு உண விற்கு பின் 5 முதல் 10 வயதுடைய குழந்தைகள்ஒருபட்டாணிஅளவுசூரண மும், பெரியவர்கள் சிறிய நெல்லிக்காய் அளவு சூரணமும் உண்ணலாம்.

### வெளி மருந்துகள்

- கோதுமைத்தவிடை சூடுசெய்து நெஞ் சுப்பகுதியில் ஒற்றடமிடலாம்.
- கற்பூராதி தைலத்தை லேசாகச் சூடுசெய்து, நெஞ்சில் தடவிவரலாம்.
- வெந்நீரையே துணியில் தோய்த்து நெஞ் சில் ஒற்றடமிடலாம்.

ஆஸ்மா நோய் அண்டாமல் இருக்க..

ஆஸ்மா நோயை ஏற்படுத்தும் ஒவ்வாமைக் காரணிகளைத் தவிர்த்தல், மன அழுத்தத்திலிருந்து விடுபட முறையான தியானம் மற்றும் மூச்சுப்பயிற்சியில் ஈடுபடுதல், ஆஸ்மா நோயைத் தடுக்க வல்ல உணவுகளைச் சாப்பிடுதல், தேவைப்படும்போது சித்த மருந்துகளைப் பயன்படுத்துதல் மூலம் ஆஸ்மா நோயைக் கட்டுப்படுத்த இயலும். உயர்வகை சித்த மருந்துகள் எடுக்கும்போது, ஒரு சில வகைக் காரணிகளால் ஏற்படும் ஆஸ்மா நோயைக் குணப்படுத்த இயலும்.



மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்தில் எம்.ஜி.ஆர்., நடிகை பத்மபிரியா.

எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 40

# சகலகலாவல்லவர்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** போலவே அவரது ரசிகர்களும் கூர்மையானவர்கள் என்பதற்கு ஒரு உதாரணம். கடந்த தொடரில் மதுரையில் எம்.ஜி.ஆர் படங்களின் சாதனைகளை பெட்டிச்செய்தியாகவெளியிட்டிருந்தோம். அதில் 'மதுரை வீரன்', 'எங்க வீட்டுப் பிள்ளை', 'அடிமைப்பெண்', 'மாட்டுக்கார வேலன்', 'உலகம் சுற்றும் வாலிபன்', 'உரிமைக்குரல்' ஆகிய 6 வெள்ளிவிழாப் படங்களில் ஒன்றான 'எங்க வீட்டுப் பிள்ளை' விடுபட்டுவிட்டது என்றும் 'இதயக்கனி' படம் 20 வாரங்களுக்கு மேல் ஓடியதாகவும் ஏராளமான ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். மதுரையில் 20 வாரங்கள் ஓடிய படங்களை பட்டியலிட்டால் அதில் சதவீத அடிப்படையில் எம்.ஜி.ஆர் படங்களே அதிகம் என்றும் கூறியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி.

இதுபோன்ற கூர்மையான ரசிகர்களுள் 'கவர்ச்சி வில்லன்' என்று புகழப்பட்ட நடிகர் கே.கண்ண னும் ஒருவர். பின்னாளில் எம்.ஜி.ஆர் காலத்தில் அவரது ரசிகர் மன்றத்தின் பொருளாளராகவும் பணியாற்றியவர். சொந்த ஊரான சிவகங்கையில் ராம் தியேட்டரில் எம்.ஜி.ஆர் படங்கள் எல்லாவற்றையும் கண்ணன் விடாமல் பார்த்து விடுவார். அவரது நடிப்பையும் வசனங்களையும் கூர்ந்து கவனித்து, மாலை வேளைகளில் நண் பர்களிடம் எம்.ஜி.ஆரைப் போலவே நடித்து அவர்களை மகிழ வைப்பார்.

பின்னர், சினிமா ஆசையால் சென்னைக்கு வந்த கண்ணன் பல படங்களில் சிறிய வேடங்களில் நடித்து வந்தபோது, 'மதுரை வீரன்' படத்தில் எம்.ஜி.ஆருடன் நடிக்கும் அதிர்ஷ்ட வாய்ப்பு கிடைத்தது. முதல் நாளே எம்.ஜி.ஆருடன் வசனம் பேசி நடிக்கும் காட்சி. கதைப்படி வீரனின் நண்பர்களில் ஒருவராக கண்ணன் நடித்திருப்பார். வீரனின் நண்பர்களை தளபதியாக வரும் நடிகர் பாலையா கொடுமைப்படுத்துவார். அங்கு வரும் எம்.ஜி.ஆர் தனது நண்பர்களை காப்பாற்றுவார். "அது சென்டிமென்டாக அமைந்து நிஜவாழ்க்கையிலும் அப்படியே எம்.ஜி.ஆர் எங்களை எல்லாம் காப்பாற்றினார்" என்று பின்னர், கண்ணன் நெகிழ்ந்து போய் கூறியிருக்கிறார்.

'மதுரை வீரன்' படம் தொடங்கி எம்.ஜி.ஆரின் கடைசி படமான 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' வரை அவருடன் பல படங்களில் கண்ணன் நடித்திருக்கிறார். 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்தின் பல காட்சிகள் ஜெய்ப்பூரில் படமாக்கப்பட்டன. 26 நாட்கள் அங்கு படப்பிடிப்பு நடந்தது.

எம்.ஜி.ஆரும் மற்றவர்களும் நடித்த காட்சிகள் படமாக்கப்பட்டனவே தவிர, கண்ணனுக்கு வேலை இல்லை. மாலையில் படப்பிடிப்பு முடிந்து கண்ணனை சந்திக்கும் எம்.ஜி.ஆர் அவரிடம் "என்ன கண்ணன்? நன்றாக சாப்பிட்டாயா? தூங்கினாயா?" என்று விசாரிப்பார். கண்ணன் வெட்கப்பட்டு சிரித்துக் கொண்டு போய்விடுவார்.

படப்பிடிப்பின் கடைசி நாளில் பிற்பகல் இரண்டு மணிக்கு எம்.ஜி.ஆர் திடீரென ஏழு பக்க வசனங்களை கொண்டுவந்து அதன் ஒரு பகுதியை கண்ணனிடம் கொடுத்தார். மற்றொரு பகுதியை நடிகை லதாவிடம் கொடுத்தார். "இருவரும் வசனங்களை பாடம் செய்து விட்டு நான்கு மணிக்கு தயாராக இருங்கள். படப்பிடிப்பு இருக்கிறது" என்றார்.

படம் சரித்திரக் கதை என்பதால் நீண்ட வசனங்கள். இன்னும் இரண்டு மணி நேரத்தில் பாடம் செய்து தயாராக வேண்டுமே என்று கண்ணனுக்கு குழப்பம். அதை எம்.ஜி.ஆர் புரிந்து கொண்டார். "இன்றுடன் படப்பிடிப்பை முடித்துக் கொண்டு நாளை சென்னை புறப்படுகிறோம். நாடகத்தில் பல பக்க வசனங்களை மனப்பாடம் செய்த உனக்கு இது பெரிய காரியமா? ஐந்து மணிக்கு மேல் சூரிய வெளிச்சம் சரியாக இருக்காது. சீக்கிரம் தயாராகு" என்று சொல்லிவிட்டு படப்பிடிப்புக்கான ஏற்பாடுகளை கவனிக்க போய்விட்டார்.

எம்.ஜி.ஆர் சொன்னபடி கண்ணன் வசனங்களை பாடம் செய்து நான்கு மணிக்குத் தயாராக இருந்தார். கதைப்படி ஒரு நாட்டின் மன்னராக இருக்கும் கண்ணன், போருக்கு புறப்படுவார். அவரை லதா தடுத்து நிறுத்த முயற்சிப்பார். அப்போது இருவருக்கும் இடையே நடக்கும் உணர்ச்சிகரமான வாதங்கள்தான் அன்று எடுக்கப்பட இருந்த காட்சி.

இந்தக் காட்சியை எடுக்க எப்படியும் ஒரு நாளாவது ஆகும். படம் பார்ப்பவர்களுக்கு விறுவிறுப்பை ஏற்படுத்தும் வகையில் வெவ்வேறு கோணங்களில் படமாக்க வேண்டும். நான்கு மணிக்கு படப்பிடிப்பை ஆரம்பித்து ஐந்து மணிக்குள் எப்படி எம்.ஜி.ஆர் படமாக்கப் போகிறார் என்று கண்ணனுக்கு ஆர்வம்.

கண்ணனை விட சுறுசுறுப்பாக காட்சியை படமாக்குவதற்காக எம்.ஜி.ஆரும் தயாராக வந்தார். வசனங்களை கண்ணனும் லதாவும் பாடம் செய்து கொண்டிருந்த நேரத்துக்குள், காட்சியை விரைவாக படமாக்க எம்.ஜி.ஆர். செய்திருந்த ஏற்பாடுகளை பார்த்து பிரமித்துப் போய்விட்டார் கண்ணன்.


படத்தில் இடம்பெறும் பிரம்மாண்டமான போர்க் காட்சிகளை படமாக்குவதற்காக ஒன்பது கமராக்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. கண்ணனும் லதாவும் பேசும் வசனக் காட்சியை ஒரே ஷாட்டில் படமாக்க எம்.ஜி.ஆர் முடிவு செய்து அதற்காக, ஒன்பது கமராக்களையும் ஒன்றின் பார்வை ஒன்றின் மீது விழாத வகையில் திறமையாக கோணங்களை அமைத்திருந்தார். 4.15 மணிக்கு எம்.ஜி.ஆர். 'ஸ்டார்ட்' சொல்ல, 4.30 மணிக்கு காட்சி ஓ.கே. ஆகிவிட்டது. கண்ணனும் லதாவும் ஒரே 'டேக்'கில் நடித்த காட்சி இது.

ஒருநாள் முழுக்க படப்பிடிப்பு நடத்தி எடுக்க வேண்டிய காட்சியை பதினைந்து நிமிடத்தில் எம்.ஜி.ஆர் எடுத்து முடித்து விட்டார். அந்தக் காட்சியை ஒரே நேரத்தில் படமாக்கியது கூட பெரிதல்ல; அதை மிகச் சரியாக ஒன்பது 'ஷொட்'களாக பிரித்து எடிட் செய்தார். இப்போதுகூட படத்தில் அந்தக் காட்சி பல கோணங்களில் பல முறை எடுக்கப்பட்ட காட்சி போலத் தெரியும்.


எம்.ஜி.ஆர் நடிகர் மட்டுமல்ல; திரைப் படத்துறையில் எல்லாம் அறிந்த சகலகலாவல்லவர்.

தயாரிப்பாளரும் இயக்குநருமான பி.ஆர். பந்துலுவுக்கு உதவுவதற்காக அவரது 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் எம்.ஜி.ஆர் நடித்தார். "தொலைபேசியில்தான் எம்.ஜி.ஆரிடம் கேட்டேன். உடனே நடிக்க ஒப்புக் கொண்டு 'கால்ஷீட்' கொடுத்தார்" என்று பின்னர், 521971 தேதியிட்ட 'சித்ராலயா' இதழில் பந்துலு நன்றியுடன் கூறியிருந்தார். 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்தை முதலில் பந்துலுதான் இயக்குவதாக இருந்தது. இடையே அவர் இறந்து விட்டதால் எம்.ஜி.ஆரே படத்தின் இயக்குநராக பணியாற்றினார்.

தொடரும்...



நிகழ்ச்சி ஒன்றில் எம்.ஜி.ஆருக்கு மாலை அணிவிக்கிறார் நடிகர் கே.கண்ணன். இடது ஓரம் கே.பி.ராமகிருஷ்ணன்.



மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படப்பிடிப்பில் படக் குழுவினருக்கு மைக் மூலம் எம்.ஜி.ஆர். உத்தரவுகள் பிறப்பிக்கிறார். அருகே நடிகைகள் லதா, பத்மபிரியா.

# புத்தாண்டு ராசிபலன் - 2017

## தங்க தாம்பாளத்தில் தாங்கப் போகிறார் குரு



**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

**65 / 100**

ஆன்மிக விஷயங்களில் ஈடுபாடு கொண்ட தனுசு ராசி அன்பர்களே!

# புத்தாண்டு ராசிபலன் - 2017

## நீங்க தான் 'பாஸ்' உங்களுக்கே 'மாஸ்'



**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

**85 / 100**

திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காணும் மகர ராசி அன்பர்களே!

# உங்கள் புத்தாண்டு பலன் எப்படி?

**ஆன்மிக விஷயங்களில் ஈடுபாடு கொண்ட தனுசு ராசி அன்பர்களே!**

இந்த ஆண்டு உங்களுக்கு வளர்ச்சியான ஆண்டாக அமையும். ஜன.16ல் குரு பகவான் 11ம் இடமான துலாம் ராசிக்கு அதிசாரமாக மாறுகிறார். குருவால் முயற்சியில் வெற்றி, பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். லாப ஸ்தானத்தில் குரு இருப்பதால் தங்க தாம்பாளத்தில் தாங்கப் போகிறார் என்று தான் சொல்ல வேண்டும்.

மார்ச் 10 முதல் ஓக.31 வரை குரு வக்ரம் அடையும் காலத்தில் நற்பலன் குறையும். ராகு 9ம் இடமான சிம்மத்தில் இருப்பதால் பிறருக்கு கட்டுப்பட்டு போகும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பீர்கள். ஜூலை 26ல் ராகு 8ம் இடமான கடகத்திற்கு வருகிறார். கேது ராசிக்கு 3ம் இடமான கும்பத்தில் இருந்து நன்மை அளித்துக் கொண்டிருக்கிறார். பொருளாதார வளம் சிறக்கும்.

இதனால் அரசு வகையில் அனுகூலமான போக்கு இருக்காது. சனிபகவான் ராசிக்கு 12ம் இடத்தில் இருக்கிறார். ஏழரை சனி காலம் என்றாலும் சனியின் 7ம் இடத்துப்பார்வை மூலம் பொருளாதார வளம் சிறக்கும். மறைமுக எதிரிகளை வெல்லும் ஆற்றல் உண்டாகும். மார்ச் 10 முதல் ஓக.31 வரை வக்ரம் அடைவதால் நன்மை, தீமை கலந்தே இருக்கும். அவர் டிச.18ல் விருச்சிகத்தில் இருந்து உங்கள் ராசிக்கு மாறுகிறார். மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான பலனைக் காணலாம்.

குடும்பத்தில் உங்களுக்கு சாதகமான சூழ்நிலை அமையும். ஆடம்பர பொருள் வாங்கி மகிழ்வீர்கள். புதிய வீடு, மனை வாங்கலாம். சிலர் வசதியான வீட்டிற்கு குடிபோகும்வாய்ப்புகிடைக்கும்.திருமணம் போன்ற சுபநிகழ்ச்சி திட்டமிட்டபடி நடந்தேறும். அதுவும் நல்ல வரனாக அமையும். புதுமணத் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் பெறுவர்.

**வியாபாரம்:** குருவால் லாபம் அதிகரிக்கும். கூட்டாளிகள் இடையே ஒற்றுமை மேம்படும். இயந்திர தொடர்பான தொழில், நல்ல வளர்ச்சி அடையும். அரசிடம் இருந்து உதவி கிடைக்கும். ஏப்.10 முதல் ஓக.6 வரை சனி வக்ரம் அடைவதால் நன்மை அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சியை ஆண்டின் முற்பகுதியில் தொடங்குவது நல்லது. போட்டியாளர்கள் மீது ஒரு கண் இருப்பது நல்லது.

**பணியாளர்கள்:** சிறப்பான முன்னேற்றம் காணலாம். வேலையில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உங்களின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. வேலையை இழந்தவர்கள் மீண்டும் நல்ல வேலை கிடைக்கப் பெறுவர். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை அலைச்சல், பணிச்சுமையைத் தவிர்க்க முடியாது. நெருப்பு தொடர்பான பணியாளர்கள் கவனமாக இருப்பது நல்லது.

**கலைஞர்கள்:** புதிய ஒப்பந்தம் தங்கு தடையின்றி கிடைக்கும். பாராட்டு, விருது போன்றவை வந்து சேரும். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை விடாமுயற்சியும், உழைப்பும் தேவைப்படும்.

**அரசியல்வாதிகள்:** சமூகத்தில் அந்தஸ்து கிடைக்கும். எதிர்பார்த்த பதவி கிடைக்கப் பெறுவர். ஜூலை 26க்கு பிறகு சுமாரான பலன் கிடைக்கும்.

**மாணவர்கள்:** கல்வியில் நல்ல வளர்ச்சி காண்பர். போட்டி, பந்தயத்தில் வெற்றி கிடைக்கும். நல்லவர்கள் நட்பு, ஆசிரியர்களின் அறிவுரை வளர்ச்சிக்கு துணைநிற்கும். பெப்ரவரி முதல் ஜூலை வரை படிப்பில் அக்கறை தேவை.

**விவசாயிகள்:** நல்ல வளர்ச்சி காண்பர். நெல், சோளம், கேழ்வரகு, எள், பனை போன்ற பயிர்களில் நல்ல வருமானம் கிடைக்கும். மார்ச், ஏப்ரல் மாதத்தில் புதிய சொத்து வாங்கலாம். சிலர் நவீன முறையில் விவசாயம் செய்து கூடுதல் வருவாயைக் காணலாம். வழக்கில் தீர்ப்பு சாதகமாக அமையும்.

**பெண்கள்:** குடும்பத்தோடு புனித தலங்களுக்கு சென்று வருவீர்கள். நீண்ட நாட்களாக தடைபட்ட சுபநிகழ்ச்சிகள் கைகூடும். குழந்தை பாக்கியம் பெற்று மன நிம்மதி அடைவர். புதிய ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும்.

**பரிகாரம்:** சனிக்கிழமை சனீஸ்வரருக்கு அர்ச்சனை செய்யுங்கள். விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு தடைகளை தகர்க்கும். ஏழை மாணவர்களின் கல்விச் செலவுக்கு உதவி செய்யுங்கள். ஞாயிறு ராகு காலத்தில் பைரவருக்கு அர்ச்சனை செய்யுங்கள். பிரதோஷத்தன்று நந்தீஸ்வரரை தரிசியுங்கள்.

**திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காணும் மகர ராசி அன்பர்களே!**

ராசி நாதனான சனிபகவான் சாதகமாக இருக்கும் நிலையில் புத்தாண்டு மலர்கிறது. இந்த ஆண்டு சிறப்பாக அமையும். 9ம் இடத்தில் இருந்து நன்மையளித்த குருபகவான் ஜன.16ல் 10ம் இடத்திற்கு அதிசாரமாக வருகிறார். இதனால் நற்பலன் சற்று குறையும். குரு சாதகமற்று இருந்தாலும் அவரது 5,9ம் இடத்துப்பார்வை சிறப்பாக உள்ளது. இதன் மூலம் இடையூறைத் தகர்த்தெறிந்து முன்னேற்றம் காண்பீர்கள். மார்ச் 10 முதல் ஓக.31 வரை குருபகவான் வக்ரம் அடைகிறார். இந்த காலக் கட்டத்தில் நன்மை மேலோங்கும். சனி பகவான் தற்போது 11ம் இடமான லாபஸ்தானத்தில் இருக்கிறார். பெண்களால் பொன், பொருள் சேரும். பணம் பலவழிகளில் வந்து சேரும். நீங்கள் தான் இந்த ஆண்டின் 'பாஸ்' ஆக விளங்குவீர்கள். பலரும் உங்களைச் சுற்றி வந்த வண்ணம் இருப்பர்.

விருச்சிக ராசியில் இருக்கும் சனிபகவான் ஏப்.10 முதல் ஓக.6 வரை வக்ரம் அடைவதால் சனியால் ஏற்பட்ட நன்மை சற்று குறையலாம். டிச.18ல் விருச்சிகத்தில் இருந்து தனுசு ராசிக்கு மாறுகிறார். ராகு 8ம் இடமான சிம்மத்தில் இருப்பதால் முயற்சியில் தடை, உறவினர் வகையில் கருத்து வேறுபாடு ஏற்படலாம். ஜூலை 26 ராகு 7ம் இடமான கடகத்திற்கு மாறுவதால் வீண் குழப்பத்திற்கு ஆளாக நேரிடலாம். கேது 2ம் இடமான கும்பத்தில் இருந்து அரசு வகையில் பிரச்னைக்கு ஆளாகி இருப்பீர்கள். ஜூலை 26ல் மகர ராசிக்கு வருவதால் வீண் அலைச்சல், பணிச்சுமையை ஏற்படுத்தலாம். குடும்பத்தில் அமைதி நிலவும். சமூகத்தில் மதிப்பு உயரும்.

**வியாபாரம்:** எதிர்பார்த்ததை விட ஆதாயம் அதிகரிக்கும். ஓகஸ்ட் மாதத்திற்கு பிறகு தொழிலில் நல்ல வளர்ச்சி காணலாம். மறைமுகப்போட்டி இனி இருக்காது. பங்குதாரர்களிடையே ஒற்றுமை மேம்படும். அரசு வகையில் இருந்த பிரச்னை ஜூலை 26க்கு பிறகு மறையும். வரவு, செலவு கணக்கை சரியாக வைப்பது அவசியம். தொழில் ரீதியான பயணம் மூலம் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள்.

**பணியாளர்கள்:** பணிச்சுமை அதிகரிக்கலாம். ஆனால், வருமானத்திற்கு குறைவிருக்காது. சிலருக்கு இட, பணிமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. அதிகாரிகளை அனுசரித்து போவது நன்மையளிக்கும். குருவின் பார்வை சாதகமாக இருப்பதால் பிரச்னைக்குரிய தீர்வு உடனடியாக கிடைக்கும். மார்ச் முதல் ஓகஸ்ட் வரையுள்ள காலகட்டத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. வேலை இன்றி இருப்பவர்கள் விடாமுயற்சியுடன் நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கப் பெறுவர். ஜூலை 26க்கு பிறகு பணியிடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கலைஞர்கள்:** மார்ச் முதல் ஓகஸ்ட் வரை புதிய ஒப்பந்தம் தாராளமாக கிடைக்கும். மக்கள் மத்தியில் புகழ், பாராட்டு வந்து சேரும். நடிப்புத் திறனும், கலைநயமும் மிக்கவராகத் திகழ்வீர்கள்.

**அரசியல்வாதிகள்:** சீரான வளர்ச்சி காண்பர். தொண்டர்களின் ஆதரவும் சிறப்பாக அமையும். எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.


**மாணவர்கள்:** கல்வியில் சிறந்து விளங்குவர். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை சிறப்பான காலகட்டமாக அமையும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும்.

**விவசாயிகள்:** கரும்பு, எள், கீரை, காய்கறி வகைகளில் நல்ல மகசூல் காணலாம். கால்நடை வளர்ப்பின் மூலம் ஆதாயம் பெருகும். வழக்கு விவகாரத்தில் மெத்தனமாக இருக்க வேண்டாம். ஜூலை 26க்கு பிறகு அலைச்சல் அதிகரிக்கும்.

**பெண்கள்:** குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி காண்பர். ஆடம்பர பொருள் வாங்குவர். பிறந்த வீட்டினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஜூலை 26க்கு பிறகு ராகுவால் ஏற்பட்ட மனக்குழப்பம் மறையும்.

**பரிகாரம்:** ராகு, கேதுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். துர்க்கை வழிபாடு உங்கள் நல்வாழ்வுக்கு துணை நிற்கும். பாம்பு புற்றுள்ள கோவிலுக்கு சென்று பால் ஊற்றுங்கள். ஏழை மாணவர்களின் படிப்புச் செலவுக்கு உதவுங்கள். சதுர்த்தியன்று விநாயகருக்கு அருகம்புல் மாலை சாத்தி வழிபடுங்கள்.





▶ வாழைச்சேனை பிரதேசசபையினால் நிறுத்தப்பட்டுள்ள சந்தைக் கட்டட வேலையை மீண்டும் ஆரம்பிக்க வலியுறுத்தி பிரதேசசபையின் இரு பக்க கதவை மூடி பிரதேச மக்கள் கவனஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயாணந்தமூர்த்தி மற்றும் இளைஞர்கள், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# டெங்கு தொற்று

எஸ்.நிதர்சன்

நுளம்பு என்றதுமே முழு இலங்கையும் நடுநடுங்க ஆரம்பித்துள்ளது. "அது ஒரு பக்கமாக இருந்துவிட்டு போகிறதென" இவ்வளவு நாளும் அசட்டையாக இருந்தவர்கள் எல்லோரும், ஒரு நுளம்பை கண்டாலே அடிப்பதற்கு உலக்கை எடுக்காத குறையாக பீதியில் உள்ளனர். காரணம் டெங்கு!

நாடு முழுவதும் டெங்கு அபாயத்தில் உள்ளது. எல்லா மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்கள் அதிகளவில் வைத்தியசாலைகளிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அரச வைத்தியசாலைகளிற்கு வருபவர்களின் எண்ணிக்கைதான் புள்ளிவிபரங்களில் வருகிறது. தனியார் வைத்தியசாலைகளிற்கு வருபவர்களின் எண்ணிக்கை தனிக்கணக்கு. அரச வைத்தியசாலை புள்ளிவிபரங்கள் மட்டுமே இவ்வளவு அதிர்ச்சியை கிளப்பியுள்ளன.

நாளாந்தம் பத்திரிகைகள், இணையத்தளங்களில் டெங்கு பற்றிய செய்திகள் தான் பீதியை கொடுக்கின்றன. அரச தலைவர்கள் முதல் உள்ளூர் முக்கியஸ்தர் வரை டெங்கு அபாயம் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆம். இலங்கை எதிர்கொண்டுள்ள புதிய அபாயம் டெங்கு.

இலங்கையின் அனேகமான பகுதி டெங்கு அபாய வலயத்திற்குள்தான் உள்ளது. அதிலும் வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார் அதிக டெங்கு நோயாளர்களை உற்பத்தி செய்து, டெங்கு அதிகம் பரவும் இடமாக உருவெடுத்துள்ளன.

டெங்கு ஒழிப்பு, நுளம்பு ஒழிப்பு என பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தாலும், டெங்கு சுனாமி அலையாக கிளம்பியுள்ளது. டெங்கு ஒழிப்பு பொறிமுறையின் எல்லா உத்திகளையும் உடைத்துக்கொண்டு டெங்கு பரவி வருவது தான் அதிகாரிகளை கையை பிசைய வைத்துள்ளது.

டெங்கு நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லையென்பதுதான் பீதியை இன்னும் அதிகமாக்கும் செய்தி!

சுகாதார திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்கள் இணைந்து டெங்கு ஒழிப்பில் தீவிரமாக செயற்பட்டாலும், தற்போதைய நிலவரப்படி நுளம்பிற்கே வெற்றி. முன்னர் ஒருகாலத்தில் மலேரியாவிற்கு எதிராக போராடியபோது அடிக்கடி மலேரியா வெற்றியடைந்தது. ஆனால் இறுதியில் இலங்கை வெற்றிபெற்றுள்ளது. அதுபோல, நீண்டகால அடிப்படையிலான திட்டமிடல் டெங்கு விடயத்திலும் அவசியம்.

மழைக்காலங்களில்தான் டெங்கு அபாயம் வீரியம் பெறும். இம்முறையும் அதுதான் நடந்துள்ளது. கடந்த பருவமழை பொய்த்து, அடுத்து வரும் நாட்களில் அவ்வப்போது மழை பெய்யலாமென எதிர்வுகூறப்பட்டு வரும் நிலையில், நுளம்பு கட்டுப்பாடு பெரும் சவாலானதாக இருக்கப் போகிறது.

இலங்கையில் கொழும்பு மாவட்டம் அதிக டெங்கு பாதிப்பிற்குள்ளான மாவட்டம். இரண்டாமிடம் யாழ்ப்பாணம்!

வடக்கில் யாழ்ப்பாணம் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம். மன்னார் இரண்டாமிடம்.

2016ம் ஆண்டில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் 1272 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். மாவட்டம் முழுவதும் 2086 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். 03 பேர் மரணமடைந்துள்ளனர். இலங்கை முழுவதும் 30,000 இற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இந்த வருடத்தின் முதல் 23 நாட்களில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்கள் 291 பேர். இந்த ஒரு புள்ளிவிபரமே போதும் டெங்கு அபாயத்தை புரிய வைக்க.

யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை, மற்றும் தாழ்நிலப்பகுதிகளிலேயே டெங்குத் தாக்கம் அதிகமாக இருந்தது. நுளம்பு பெருகும் வாய்ப்புள்ள இடங்கள் பரவலாக இருந்ததால் எல்லா இடங்களிலும் தாக்கமிருந்தாலும், மேற்சொன்ன பகுதிகளில் தாக்கம் அதிகமிருந்தது. யாழ்நகரத்தின் கழிவகற்றல், வடிகாலமைப்பு குறைபாடுகள்தான் டெங்கின் தாக்கத்திற்கு காரணம். பொலித்தீன் குப்பைகளில் தற்போதைய பனிக்காலத்தில் தேங்கும் பனிநீரிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் தன்மையுடையவை என்ற தகவல், டெங்கிற்கெதிரான போரில் எவ்வளவு தீவிரத்துடன் இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது.

இலங்கையின் சுகாதார, உள்ளூராட்சிய மைப்பு கட்டமைப்பு வலுவானது. வினைத்திறனானது. மலேரியாவிற் கெதிரான போராட்டத்தில் இலங்கை வெற்றிகொள்ள இவை பெரிய பங்கு வகித்தன. ஆனால், டெங்கின் உடனடி அபாயம் தற்போது ஆபத்தானதாக மேலெழுந்துள்ளது. டெங்கு நோயை நிரந்தரமாக இல்லாமலாக்க முறையான நீண்டகால திட்டம் அவசியம். அத்துடன், முறையான கழிவகற்றப்படாத, நீர் தேங்கும், அடிப்படை வசதிகளின்றி மக்கள் வாழும் பகுதிகள்தான் டெங்கின் கோட்டை. இது அரசின் அசமந்தத்தின் மீது எழுப்பப்படும் கேள்வி.

## டெங்கு

டெங்கு வைரசால் ஏற்படும் அயனமண்டல தொற்றுநோயே இது. நுளம்புகளால் பரவுகிறது. எயிடிஸ், எஜிப்பாய் வகை நுளம்பினால் பரவுகிறது. டெங்கு தொற்று உலகின் பல பகுதிகளில் உள்ளது. உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு அபாய நோய்.

எந்த வயதினரையும் டெங்கு தாக்கும். ஆனால், குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். டெங்கு கிருமியில் பல உப பிரிவுகள் உள்ளதால், ஒருமுறை டெங்கு வந்தால் மீண்டும் வருவதற்கு சாத்தியமுள்ளது. முதல்முறை வரும்போது கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தாது. அடுத்தடுத்தமுறை வரும்போதே அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

## அறிகுறிகள்

கடுமையான காய்ச்சலுடன் கடுமையான மூட்டுவலி, தசைவலி, வாந்தி ஏற்படும். தோல் நமைத்தல் போன்ற உணர்விருக்கும். பசியின்மை, உணவில் விருப்பமின்மை இருக்கும். காய்ச்சல் விட்டபின்னரும் கடுமையான களைப்பு, தலைசுற்றல் ஏற்படலாம்.

டெங்கு தொற்று ஏற்பட்டவர் கடுமையான வேலை, உடற்பயிற்சி செய்யக்கூடாது. பாடசாலைகளின் முதலாம் தவணை விளையாட்டு போட்டிகள் ஆரம்பிக்கவுள்ள சமயத்தில் டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளது. மாணவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தும் முன்னர் ஆசிரியர்களும், பெற்றோரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

டெங்கால் பாதிக்கப்பட்டவர் அதிக நீராகாரம் உட்கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உலர் வெப்ப வலய நாடுகளில் டெங்கு அபாயம் அதிகமுள்ளது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பிரேசில், ஆர்ஜென்ரீனா போன்ற நாடுகளில் டெங்கு அபாயம் அதிகமுள்ளன.

டெங்கு நோய்க்காக அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கைதான் வெளிவருகிறது. வடக்கிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளில் டெங்கு நோய்க்காக பலர் சிகிச்சை பெற்றுள்ளனர். அதுதவிர, முன்னெச்சரிக்கையாக இரத்த பரிசோதனை செய்யும் பலர் தனியார் கிளினிக்குகளையே நாடுகிறார்கள். தற்போது இரத்த பரிசோதனை செய்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாகவும், பெரும்பாலான பரிசோதனைகள் டெங்கு தொடர்பானவையாகத்தான் இருப்பதாக கூறுகிறார்கள் தனியார் வைத்தியதுறையினர்.




டெங்கு பாதித்த ஒருவரை கடித்த நுளம்பு இன்னொருவரை கடிக்கும்போது நோய்க்கிருமி பரவுகிறது. வேறுவிதங்களில் பரவுவதில்லை. பகலிலும், விடியற்காலையிலுமே இந்த நுளம்புகள் கடிக்கின்றன. திண்மக்கழிவுகள், நீர்தேங்கி நிற்குமிடங்கள் உங்கள் சூழலில் இருந்தால், நீங்கள் டெங்கிற்கு அருகிலிருக்கிறீர்கள் என்று பொருள்.

காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்கு செல்லுங்கள். மருத்துவர் இரத்த பரிசோதனைக்கு சிபாரிசு செய்தால், தட்டிக்கழிக்காதீர்கள்.

டெங்கு நோய்க்கான தடுப்பு மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

**நுளம்பு பெருகலை கட்டுப்படுத்துவதே நோய்த்தாக்கத்திலிருந்து தப்பிக்க வழி.**

1. சுற்றுசூழலை சுத்தமாக வைத்திருங்கள்
2. நீர்தேங்கியுள்ள பாத்திரங்களை அகற்றுங்கள்
3. நீர்நிலைகளில் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் மருந்துகளை தெளியுங்கள்.
4. டெங்கின் அபாயத்தை அயலவர்களிற்கும் புரிய வைத்து, டெங்கிற்கெதிரான தேசிய போராட்டத்தின் அங்கமாகுங்கள்.

யாழ்ப்பாண நகரத்தை ஒரு உதாரணமாக பார்க்கலாம். நகர மையத்தில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் பண்ணைக்கு அண்மையாக கடலில் இணைக்கப்பட்டது. ஆனால் சில பத்தாண்டுகளாக கடலுக்கு செல்லும் வழி அடைபட்டு விட்டது. இப்போது அது கழிவு வாய்க்கால் அல்ல, நீளமான குளம். அரச நிர்வாகத்தின் இப்படியான அசமந்தங்களின் விளைவுதான் இப்போதைய டெங்கு.

டெங்கு நோயை ஒழிப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமை. நமக்கு மட்டுமல்ல, நமது பரம்பரைக்கே ஆபத்தை கொண்டு வரும் டெங்கை ஒழிப்பதில் ஒவ்வொருவரும் செய்யக்கூடியதை செய்ய வேண்டும். ஆனால், இதில் எவரும் அதிகமாக செய்ய வேண்டியதில்லை. உங்கள் சூழலை சுத்தமாக வைத்திருந்தாலே போதும்!

அருணகிரிநாதர்

காணாமல் போனவர்களின் உறவுகள் வவுனியாவில் உண்ணாமல், ஒருதுளி நீரும் பருகாமல், தமது வயிற்றில் தீ வளர்த்தார்கள். அவர்கள் வயிற்றில் வளர்த்த தீ மெல்லமெல்ல தமிழர் பகுதிகளில் பரவியது. பட்டினித்தீயால் பற்றியெரிந்த கதை நமக்கொன்றும் புதிதில்லையே!

காணாமல் போனவர்களின் நிலையை வெளிப்படுத்துங்கள் என இதுவரை எண்ணற்ற போராட்டங்கள் நடந்துவிட்டன. எல்லா போராட்டங்களிலும் குறிப்பிட்டளவானவர்களே கலந்துகொண்டிருந்தனர். எல்லா போராட்டங்களிலும் ஒரே முகங்கள். பார்த்து பார்த்து பழகிய முகங்கள்.

வவுனியாவிலும் அப்படித்தான் நடக்குமோ என்ற சந்தேகம் எழுந்தபோது, நமது இளையவர்கள் அந்த வரலாற்றை மாற்றியுள்ளனர். வடக்கின் எல்லா திசைகளிலிருந்தும் திரண்டுள்ள இளைஞர்களால் வவுனியா போராட்டகளத்தில் புது வரலாறு எழுதப்பட்டது. (போராட்டக்களம், புதுவரலாறு என அங்குள்ளவர்களை உணர்ச்சியூட்டுவது என் நோக்கமல்ல. உண்ணாவிரதிகளின் பட்டினிப் போருக்கு உடன் தீர்வு வேண்டுமென்பதே ஒட்டுமொத்த தமிழர்களின் எதிர்பார்ப்பும்)

வவுனியாவில்தொடங்கியபோராட்டம் பரவலாக கொந்தளிப்பை ஏற்படுத்தியது. நல்லூரிலும் ஒரு அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் நடந்தது. உறவுகளை பறிகொடுத்த யாழ்ப்பாண மக்கள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்திய அரசுக்கெதிராக ஏற்கனவே நமது மைந்தனொருவன் நல்லூரின் முன்றலில் உயிரை எரித்தான். நல்லூர்தான் நமக்கு அகிம்சையின் அடையாளம். நல்லூர் கந்தனுக்கும் இது நன்றாக தெரியும்.

ஆனால், வவுனியா உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக நல்லூரில் போர்ாட்டம் நடக்கவிருந்த சமயத்தில், முதல்நாள் இரவோடு இரவாக நல்லூர் ஆலய வளாகத்தில் வைக்கப்பட்ட அறிவித்தல்தான் எம் நெஞ்சைப் பிசைகிறது. நல்லூர் ஆலய வளாகம் புனிதப்பிரதேசம், இங்கு போராட்டங்கள் நடத்துவது தடை செய்யப்படுகிறது என்ற அறிவித்தல் இரவோடு இரவாக முளைத்தது. புனித பூமியின் புனிதம் பேணுவோம் என்ற வாசகம் வேறு.

இத்தனை நாளாக மௌனம் காத்த கோவில் நிர்வாகம், காணாமல் போனவர் போராட்டத்தின் முதல்நாள் அவசரகதியில் அறிவித்தல் பலகை நாட்டியதன் மர்மம் என்ன? காணாமல் போனவர் விவகாரம் எம் அரசியல்வாதிகளை போல நல்லூர் கந்தனிற்கும் கசப்பதாக காட்ட நினைக்கிறார்களா?

நல்லூர் கந்தனின் புனிதம் பேணுவதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் போராட்டங்கள் நடத்துவதால் புனிதம் கெட்டுவிடுமென்று கொள்ள முடியாதுதானே. போராட்டம் நடப்பதால் புனிதம்கெட்டுவிடுமென்றவாதம்ஏற்புடையதல்ல என்றபோது, எதற்காக ஆலய சூழலில் போராட்டத்திற்கு தடைவிதிக்கும் அறிவித்தலை வெளியிட்டது நல்லூர் நிர்வாகம்?

நல்லூர் ஆலயம் வெறும் ஆலயமல்ல. அது கற்களாலும், சீமெந்துகளாலும் ஆனதல்ல. அது ஈழத்தமிழர்களின் அடையாளம். தமிழர்களின் வரலாறு, பண்பாடு, வெற்றி, சுயமரியாதைகளால் கட்டியெழுப்பப்பட்டது.

நமது தேசத்தின் அடையாளங்கள் ஐந்தை வரிசைப்படுத்த சொன்னால், பெரும்பாலானவர்கள் நல்லூரரையும் அதற்குள் அடக்குவார்கள். அதுதான் நல்லூரின் மகிமை. அதனால் தமிழனுக்கும் பெருமை.

இந்திய அரசின் போலி முகத்திரையை கிழித்த திலீபனின் பட்டினிப் போர் நடந்ததும் நல்லூரில்தான். அண்மையில் சமூக வலைத்தளத்தின் மூலம் இளைஞர்கள் ஒன்றுகூடி ஜல்லிக்கட்டிற்கு ஆதரவு சொன்னதும் நல்லூரில்தான். மாவீரர்தினம், முள்ளிவாய்க்கால் நினைவுநாள் என பல்வேறு அஞ்சலிகளும் அங்கு வருடாவருடம் நடக்கிறது.

முருகப்பெருமான் மயிலேறி வந்து எத்தனையோ விக்கினங்களை தீர்த்துள்ளார். உலகில் அக்கிரமம் தலைவிரித்தாடிய சமயங்களில் அவற்றை அழித்து அமைதியை உண்டாக்கியவர் எம் பெருமான். எம் பெருமான் செய்த வதங்கள் எல்லாம் அவரது பக்தர்களின் தவங்களால் நிகழ்ந்தவையே.

உலகின் அமைதிக்காகஓயாதுபோராடிக் கொண்டிருந்தவர் முருகப்பெருமான். அதனால்தான் முருகப்பெருமானிடம் எல்லாவற்றையும் முறையிடுகிறோம். நல்லூர் ஆலய சூழலில் நடக்கும் போராட்டங்கள் எப்படி நடக்கின்றன? கத்தி, துப்பாக்கியுடன் சென்று எதிர்தரப்பை வெட்டிச்சாய்க்கிறார்களா? எவ்வளவு படைபலத்துடன் இருந்தபோதும், அகிம்சைப் போருக்கு நல்லூரரை எதற்காக தேர்வு செய்தார்கள் புலிகள்? நல்லூரில் திலீபன் ஆயுதப்போரிலா ஈடுபட்டார்? நமது கோரிக்கைகளை முருகப்பெருமானை சாட்சியாக வைத்து சொல்லத்தானே அங்கு போகிறோம். நமது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவார் என்பதுதானே நம்பிக்கை.

ஆனால், இப்போது இதற்கு தடை போட முயல்கிறது நல்லூர் ஆலய நிர்வாகம். நல்லூரில் தன்னெழுச்சியாக நடக்கும் போராட்டங்களால், நல்லூர் நமது அடையாளம் என்ற உணர்வு தமிழர்களிடம் வலுவடைந்துவிடும், அதனால் ஆபத்து என கருதுகிறார்களோ தெரியவில்லை.

பண்பாட்டு, கலாசார அடையாளமாகிய நல்லூரரை நமது வாழ்விலிருந்தும், வரலாறிலிருந்தும் நீக்கிப்பார்க்க முடியாது. இந்தபிணைப்பையாரும்அறுக்கமுடியாது. நல்லூர் நமது அடையாளமாகியதால் ஆலய உரிமையாளர்கள் பொருளாதார அனுகூலம் அடைந்தார்கள். பரஸ்பரம் அனுகூலமான பிணைப்பு இது. அதனால், தார்மீகரீதியில் மக்கள் அங்கு தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதை யாரும் தடை செய்ய முடியாது. இறைவனின் சன்னிதானத்தில் முறையிட யாரும் கட்டுப்பாடுகள் விதிக்க முடியாது. இறைவன் மாடமாளிகைகளில் குடியிருப்பதில்லை, எளிமையான உண்மைப் பக்தர்களின் உள்ளத்தில்தான் கோயில் கொண்டுள்ளார் என்பதுதானே நமது இறைக் கோட்பாடு.

நல்லூர் சூழலில் மக்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த யாரும் தடை விதிக்க முடியாதென்பதற்கான தார்மீகரீதியான இந்த வாதங்களிற்கு மேலதிகமாக, புரிந்துணர்வின் அடிப்படையிலும் ஆலய நிர்வாகம் நடந்து கொள்ள வேண்டும். அதாவது, நல்லூர் ஆலய திருவிழா காலங்களில் எல்லா திசைகளிலும் பாதைகள் அடைக்கப்படுகின்றன. போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டு, மாற்று பாதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாற்றுபாதைகளால் அலுவலகம் செல்பவர்களிற்கு சிறிய பயண தாமதங்கள் ஏற்படும். சிரமங்கள் ஏற்படும். யாழ்ப்பாண மக்கள் தொகை ஆறு இலட்சத்திற்கும் அதிகமென வைத்தால், அதில் பாதிக்கும் குறைவானவர்கள்தான் நல்லூரிற்கு வருகிறார்கள். ஆலயத்திற்கு வரும் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கும் குறைந்தவர்களிற்காக, ஆலயத்திற்கு வராத அரைவாசிக்கும் அதிகமானவர்களின் பிரயாணம் சிரமமாக்கப்பட்டுள்ளது. எனினும், யாரும் இது பற்றி பேசவில்லை. யாரும் ஆட்சேபணையும் சொல்வதில்லை. ஏனெனில், நல்லூர் நமது அடையாளம். மதம் கடந்து, சாதி கடந்து நல்லூரரை நமது அடையாளமாக கொள்வதில் பெருமை கொண்டோம். இப்போது இதனை குறிப்பிட்டதுகூட, ஒரு தர்க்கத்தினடிப்படையிலேயே.

நல்லூரில் மக்களின் உணர்வுகளிற்கு இடமளிக்க மறுத்தால், அது அவர்களின் அடையாளமாக தொடருமா?

புதிதாக வாங்கிய உடைகளையும், நகைகளையும் அணிந்து அழகு பார்த்து, மின்னொளியில் மணலில் உட்கார்ந்து பேசிவிட்டு செல்வல வேண்டுமென, நிர்வாகம் விரும்புகிறதா? அழகு காட்டும் இடமாக மட்டுமே வரலாற்றில் இருந்திருந்தால், நமது அடையாளமாக நல்லூர் உருவாகியிருக்குமா? அழகு காட்ட மட்டும் வாருங்கள் என்றால், எதற்கு நல்லூர்? இதற்கு தற்போதைய திருமண மண்டபங்களே போதுமே!

நெற்றிக்கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமேயென்ற நீதிக்கு மட்டுமே தலைவணங்கும் வாழ்வியலை உருவாக்கித் தந்தது நமது இனமும், மதமும். அதனால், கட்டாயம் கேட்க வேண்டிய கேள்விகளை கேட்டுள்ளேன். இந்த விமர்சனங்கள் நல்லூர் கந்தனின் மீதல்ல. நல்லூர் கந்தனிற்கும் பக்தர்களிற்கு மிடையில் எழுப்பப்படும் சுவர்களின் மீதே.

அகிம்சை போராட்டங்கள் செய்வதாலேயே ஆலயங்களின் புனிதத்தன்மை கெட்டுவிடுமென்பதெல்லாம் இறைவனே சொல்லாத லொஜிக். அகிம்சைப் போராட்டங்களென்பது, இறைவனையும் நோக்கியதுதான். ஆகவே, இறைவனிடம் வருபவர்களை யாரும் தடுக்காதீர்கள்.

நல்லூர் ஆலய வளாகத்திற்குள் போராட்டங்களை தடைசெய்து ஆலய நிர்வாகம்விடுத்த அறிவித்தல்தொடர்பான கட்டுரை இது. உரையாடப்பட வேண்டிய விடயமாக இது உள்ளதால், இந்தக்கட்டுரையை பிரசுரிக்கிறோம். இது தொடர்பாக உங்களின் கருத்துக்களையும் எழுதி அனுப்புங்கள்.

# நல்லூர் கந்தனே... இது நியாயமா?





# சுடிதாரில் அசத்தலாக தெரிய டிப்ஸ்

தான் தேர்ந்தெடுக்கும் சுடிதார்களோ, அல்லது புடைவைகளோ மிகவும் புது வரவாகவும், புது டிசைன்களிலும் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் பெண்கள். நாம் அணிந்து செல்லும் உடைகளை வைத்தே நமக்கு மரியாதை கொடுக்கிறார்கள். ஆகவே மற்றவர்களின் முன் நம்மை பெருமையாகவும், அடுத்தவர்களை திரும்பி பார்க்க வைப்பதும் நம்முடைய ஆடைகள் தான்.

ஒரு சிலர் அதிக ஆடம்பர டிசைன்களை விரும்பமாட்டார்கள். தான் உடுத்தும் சுடிதார் மற்றவர்களை கவர வேண்டும். ஆனால் நிறைய டிசைன்கள் இருக்க கூடாது என்று தான் எண்ணுவார்கள். ஒரு சிலர் அதிக வேலைப்பாடுகள் இருந்தால் தான் பிடிக்கும். முதலில் நாம் எடுக்கும் சுடிதார் கலர் நம்முடைய டிசைன்களுக்கு ஒத்துவருமா என்று பாருங்கள்.

அதை விட்டுட்டு, தேவையில்லாமல் டிசைன்களுக்கு ஆசைப்பட்டால், என்னதான் அதிக விலை கொடுத்து வாங்கியிருந்தாலும், மற்றவர்களின் முன் உங்களை 'டல்லாக' தான் காட்டும். எனவே அதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம். முதலில் கருப்பு நிறமாக உள்ளவர்கள், 'லைட்' நிறத்தில் உள்ள ஸ்டோன் வேலைப்பாடுகள் செய்த சுடிதாரை தேர்ந்தெடுக்கலாம். லைட் கிரீன், எலுமிச்சை நிறத்தில் உள்ள மஞ்சள் கலர், லைட் வைலட், லைட் சாண்டில், ஒயில் நிறத்தில் உள்ள சுடிதார்களை தேர்வு செய்யுங்கள். கொஞ்சம் கலராகவோ அல்லது மாநிறமாகவோ உள்ளவர்கள் மெரூன், இங்க் புளூர், பிங்க் கலர், ஆஷ் கலர், வையிட் அல்லது ஏதாவது காமினேஷன் கலரை தேர்வு செய்யலாம்.

கலராக உள்ளவர்களுக்கு டார்க் கலரில் எந்த நிறவகையான சுடிதார்கள் போட்டாலும் அழகாக தெரியும். பெரும்பாலும் நிறத்திற்கு ஏற்றார்போல் தேர்வு செய்வதை காட்டிலும், அவரவர் உடல் வாகுக்கு தகுந்தாற்போல் சுடிதார்களை எடுக்க வேண்டும். குண்டாக உள்ளவர்கள் கொட்டன் சுடிதார் அணிந்தால், அது மேலும் அவர்களை குண்டாகத்தான் காட்டும்.

அதற்கு பதில், அவர்கள் நிறைய ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யாத சிம்பிளாக உள்ள சல்வார்களை போட்டாலே அழகாக தெரியும். ஒல்லியாக உள்ளவர்கள் கொஞ்சம் அதிக வேலைபாடுகள் செய்த கொட்டன் அல்லது சில்க் கொட்டன் சுடிதார் தேர்வு செய்யலாம். அது அவர்களை சற்று குண்டாக காட்டும்.

என்னதான் சுடிதார்களை தேர்வு செய்தாலும், அவர்கள் தைக்கும் முறை அந்த துணியின் அழகை கெடுத்து விடுகிறது. முடிந்தவரையில், சுடிதார்களை அம்பர்லா மொடலில் தைத்தால், பார்ப்பதற்கு பூக்கள் விரிந்திருப்பது போன்று அழகாக தெரியும். தேர்வு செய்யும் சுடிதாரை, நாம் அழகாக தெரிய தைக்கும் முறையும் மிக மிக அவசியம்.



# வீட்டிலேயே எளிய முறையில் செய்யலாம் பேசியல்

பெண்கள் முகத்தில் பேசியல் என்னும் மசாஜை செய்து கொள்ள நிறைய செலவு செய்கிறார்கள். ஒரு முறை செய்தால் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற எண்ணம் பெண்களின் மத்தியில் இருக்கிறது. சிலரால் அடிக்கடி செய்ய முடியாது. வருத்தப்படாதீங்க. இப்போது நீங்களே வீட்டில் செய்து கொள்ளலாம்.

**தேவையான பொருட்கள் :** காய்ச்சாத பால், ஏதாவது பழக்கூழ்

**செய்முறை :** மசாஜ் செய்யும் போது மசாஜை மேல் நோக்கி செய்ய வேண்டும். கிளன்சிங் லோசனாக பாலைப் பயன்படுத்தி கழுத்திலிருந்து முகம் வரை தடவி பின் பஞ்சைக் கொண்டு துடைத்து எடுக்க வேண்டும்.

பழக்கூழைக் கொண்டு கழுத்து மற்றும் முகம் முழுவதும் பூசி கழுத்திலிருந்து மேல் நோக்கி மசாஜ் செய்ய வேண்டும்.

மசாஜ் செய்யும் போது முகத்தில் விரல்கள் ஒன்றன் பின் ஒன்றாக சேர்ந்தாற்போல் வைத்து செய்ய வேண்டும். மசாஜ் செய்யும்போது எந்த காரணத்தைக் கொண்டும் நடுவில் கையை எடுக்காமல் செய்யவேண்டும். அவ்வாறு எடுக்க நேரிட்டாலும் ஒரு கை முகத்திலேயே இருக்க வேண்டும். முகம் முழுவதும் நுனி விரல்களைக் கொண்டு மெதுவாக தட்டிவிட விட வேண்டும்.

மசாஜை கழுத்திலிருந்து ஆரம்பித்து விரல்களை மெதுவாக மேல்நோக்கி தாடைக்கு கொண்டு வரவேண்டும். தாடையின் நடுப்பகுதியின் பக்கவாட்டில் செய்ய வேண்டும். தாடையிலிருந்து மேல்நோக்கி கன்னப்பகுதிகளில் செய்ய வேண்டும். உதட்டினைச் சுற்றியும், உதட்டின் ஓரங்களிலும் நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். முதல் மூன்று விரல்களைக்கொண்டு சிரிப்பு வரிகளின் (Laugh Line) மீது மசாஜ் செய்ய வேண்டும். கன்னத்தில் முதல் மூன்று விரல்களைக் கொண்டு கிள்ளியும் மசாஜ் செய்ய வேண்டும். மூக்கின் மேலும், மூக்கின் ஓரங்களிலும் நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். கண்களுக்கு நடுவில் குறுக்காக முதல் விரலைக்கொண்டு மசாஜ் செய்ய வேண்டும். புருவங்களையும் நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். புருவங்களை பிடித்தும் விட வேண்டும்.

நெற்றியில் முதல் இரு விரல்களைக் கொண்டு வட்டமாக மசாஜ் செய்ய வேண்டும். இவை அனைத்தையும் இரண்டு முதல் மூன்று முறை செய்ய வேண்டும். பிரஷர் பொயிண்ட்ஸ் உள்ள இடங்களில் அழுத்திவிட வேண்டும். பிரஷர் பொயிண்ட்ஸ் உள்ள இடங்கள் தாடையின் நடுப்பகுதி, மூக்கின் பக்கவாட்டு இடம், நெற்றி மேல்முடிவில், புருவங்களின் நடுவில், கண்புருவங்களின் முடிவின் சிறிது கீழ்பகுதி, மூக்குத்தண்டிற்கும், கண்களின் ஆரம்ப பகுதி ஆகும். தூக்கம் வராதவர்களுக்கு கைகளை சுண்டுவிரல்களின் பக்கமாக வைத்து நெற்றியில் மேல் நோக்கி மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு மசாஜ் செய்தால் நன்றாக தூக்கம் வரும். கண்பாவைகளை மெதுவாக அழுத்திவிட வேண்டும்.

சைனஸ் பிரச்சனையுள்ளவர்களுக்கு மூக்கின் முடிவிலிருந்து கன்னப்பகுதிக்கு செல்லும் கன்ன எலும்புகளின் கீழ் நன்றாக அழுத்தி கீழ் நோக்கி தாடை வரை கொண்டு வந்துவிடவும். அவ்வாறு செய்தல் சைனஸ் பிரச்சனையிலிருந்து தற்காலிக விடுதலை கிடைக்கும்.

# வீட்டிலேயே செய்யலாம் மிக்ஸ்ட் ப்ரூட் ஜாம்



**தேவையான பொருட்கள் :** அப்பிள் 5, பப்பாளி 1, திராட்சை 1 கிலோ (விதை இல்லாத திராட்சை), வாழைப்பழம் 3, ஸ்ட்ராபெர்ரி 8, அன்னாசி 1 (சிறியது), எலுமிச்சை சாறு 1 1/2 டீஸ்பூன், சிட்ரிக் ஆசிட் 67 டீஸ்பூன், சர்க்கரை 1 கிலோ, உப்பு தேவையான அளவு

**செய்முறை :**

- அன்னாசி மற்றும் பப்பாளியின் தோலை சீவி சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும்.
- அப்பிளை தோல் சீவாமல் நறுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் நறுக்கிய அன்னாசி, பப்பாளி மற்றும் அப்பிள் பழங்களைப் போட்டு, 10 நிமிடம் வேக வைத்து, இறக்க வேண்டும். அதன் பின்பு அப்பிளின் தோலை நீக்கிவிடவும்.
- மிக்ஸி/பிளெண்டரில் திராட்சை, எலுமிச்சை சாறு, அப்பிள், பப்பாளி, ஸ்ட்ராபெர்ரி, வாழைப்பழம் மற்றும் அன்னாசி சேர்த்து நன்கு கூழ் போன்று அரைத்துக் கொள்ள வேண்டும்.
- அடிகனமான வாய் அகன்ற பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் அரைத்து வைத்துள்ள கூழ், சர்க்கரை மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து, தீயை குறைவில் வைத்து, கெட்டியாக வரும் வரை கொதிக்க விட வேண்டும்.
- அடுத்து அதில் சிட்ரிக் அசிட் சேர்த்து 2 நிமிடம் அடுப்பில் வைத்து, கெட்டியானதும் இறக்க வேண்டும்.
- அப்போது கலவையானது நீர்மமாக இல்லாமல் கெட்டியாக இருந்தால், ஜாம் ரெடியாகிவிட்டது என்று அர்த்தம்.
- பின்னர் அதனை ஒரு காற்று புகாத கண்ணாடி போத்தலில் ஊற்றி, அறைவெப்ப நிலையில் குளிர வைத்து, பின்பு அதனை குளிர்சாதன பெட்டியில் குளிர வைக்க வேண்டும்.
- இப்போது சுவையான மிக்ஸ்ட் ப்ரூட் ஜாம் ரெடி!!!
- விதை இல்லாத திராட்சை கிடைக்காவிட்டால் திராட்சையில் உள்ள விதைகளை எடுத்து விட்டும் செய்யலாம்.

## விடுகதை

1. வகை வகையாய் தெரியும் வண்ணப்படம், கண்மூடிக் காணும் காட்சிப் படம் அது என்ன?
கனவு
2. மென்மையான உடம்புக்காரன், பாரம் சுமக்கும் கெட்டிக்காரன் அது என்ன?
நத்தை
3. மூன்று கால் குள்ள அக்கா, பாரம் தாங்கி, நெருப்பை சுமந்து, சோறு சமைப்பாள் அவள் யார்?
அடுப்பு
4. பட்டனைத் தட்டினால் சட்டென விரியும் அது என்ன?
குடை
5. நீரிலும் நிலத்திலும் வாழ்வான், பாறைக்குள்ளும் பதுங்கி வாழ்வான் அவன் யார்?
தவளை
6. கையளவு உடம்புக்காரன், காவலுக்கு கெட்டிக்காரன் அவன் யார்?
பூட்டு
7. மேகத்தின் பிள்ளை, தாகத்தின் நண்பன் அது என்ன?
மழை
8. இருட்டில் கண் சிமிட்டும் ஆனால் நட்சத்திரம் அல்ல அது என்ன?
மின்மினிப் பூச்சி
9. ஒற்றைக்கால் சுப்பனுக்கு தலைக்கனம் அதிகம்?
பம்பரம்
10. வெளுத்த அழகி மஞ்சள் புடவை கட்டியிருக்கிறாள் அவள் யார்?
வாழைப்பழம்

## பொன் மொழி

1. மிருகத்தைப் போல நடக்கும் மனிதன், மிருகத்தை விடவும் மோசமானவன்.
காந்திஜி
2. ஒருவருக்கு ஒருவர் நல்ல பண்புகளோடு நடந்து கொள்வது, வாழ்க்கையில் மிகவும் அடிப்படையான தேவையாகும்.
நபிகள் நாயகம்
3. இந்த உலகம் கோழைகளுக்கல்ல, பயந்து ஓட முயலாதே, வெற்றியோ தோல்வியோ எதிர்பார்க்காதே.
விவேகானந்தர்
4. அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கும் வரை, உங்களுக்கு என்றும் விடிவு காலம் தான்.
பிளாட்டோ
5. நீங்கள் செய்யும் தவறை உடனே திருத்திக் கொள்ளுங்கள், இல்லையென்றால், இன்னொரு தவறை செய்தவராகி விடுவீர்கள்.
கன்பூசியஸ்
6. இதயத்தின் வாசல்கள் திறக்கப்படாதவரை, ஒரு நாடு சுதந்திரம் பெற்றதாகச் சொல்ல முடியாது.
வல்லபாய் படேல்
7. குற்றங்கள் பிறக்கும் இடங்களில் முக்கியமானவை குடியும், அறியாமையுமே.
ஆவ்ப்ரி
8. அரிய செயலைச் செய்து முடிப்பது வலிமையால் அல்ல, விடா முயற்சியால் தான்.
ஜேம்ஸ் ஆலன்
9. நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர, வேறு யாராலும் தடுக்க முடியாது.
ப்ரெமர்
10. நாம் துணிச்சலோடு இருந்தால், எந்த சக்தியும் நமக்குத் துணையாக வந்துவிடும்.
பெசில்சிங்

## புத்திசாலி!



ஒரு நாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது.

கழுதையை கவனித்த ஓநாய் ஒன்று அதை அடித்துத் தின்னும் நோக்கத்துடன் அதன் மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்தது கழுதை.

ஓநாயை எதிர்த்து சண்டை போடுவது கஷ்டம். அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்துதான் சமாளிக்க வேண்டும் என கழுதை தீர்மானித்தது.

ஓநாயின் பாய்ச்சலின்போது சற்று விலகிக் கொண்டு, "ஓநாயாரே, உம்முடைய வலிமையின் முன்னால் நான் எம்மாத்திரம்... நான் இன்று உமக்கு இரையாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க. முடியாது. நானும் உமக்கு இரையாகத் தயாராக இருக்கிறேன். அதற்கு முன்னால் நான் சொல்லக் கூடிய விஷயத்தைத் தயவுசெய்து கேட்க வேண்டும்," என வேண்டிக் கொண்டது.

"நீ என்ன சொல்ல விரும்பினாய். சொல்வதை சீக்கிரம் சொல்". என உறுமியது ஓநாய்.

"ஓநாயாரே என் காலில் பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. காலில் முள் உள்ள நிலையில் நீ என்னை அடித்துச் சாப்பிட்டால் அந்த முள் உன் தொண்டையில் மாட்டிக் கொள்ளும். அது உமக்குக் கடுமையான வேதனையைத் தருவதுடன் உன் உயிரையும் வாங்கி விடும். அதற்கு தயவு கூர்ந்து முதலில் என் காலில் இருக்கும் முள்ளை எடுத்துவிடு.

அதற்குப் பிறகு நீ என்னை அடித்துத் தின்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என கழுதை கூறிற்று. ஏமாந்த ஓநாய் ஒத்துக் கொண்டது. கழுதை தனது பின்னங் கால்களைத் திருப்பிக் காண்பித்து,

ஓநாய் கழுதையின் பின்னங்கால்களில் முள் இருக்கிறதா என தேடும் வேளையில், அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கழுதை பின்னங் கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்தது.

கழுதையின் உதை தாங்காமல் ஓநாய் துடிதுடித்து சரிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடி தப்பித்துக் கொண்டது.



## பதிலடி!

இந்தியாவின் முன்னாள் துணை குடியரசு தலைவரும், ஆசிரியருமான டாக்டர்.ராதாகிருஷ்ணன், மற்றும் இங்கிலாந்து பிரதமர் திரு.வின்செண்ட் சர்ச்சில் இருவரும் ஒரு உணவு விருந்தில் பேசிக் கொண்டது. சர்ச்சில் "இந்தியர்களுக்கு சுகாதார பழக்கம் ஏதும் தெரியவில்லை, அவர்கள் கையால் உணவு சாப்பிடுகிறார்கள், மேசைக்கரண்டியை பயன்படுத்த தெரியவில்லை" என்று ராதாகிருஷ்ணனை பார்த்து சொன்னார். ராதாகிருஷ்ணன் "நீங்கள் பயன்படுத்தும் மேசைக்கரண்டி வேறு அனைவரும் பயன்படுத்திய எச்சில், ஆனால் என்னுடைய கையை என்னை தவிர வேரு யாரும் பயன்படுத்தவில்லை" என்று நூதானமாக பதில் தந்து சர்ச்சிலை வியக்க வைத்தார்.

ஒரு தோட்டத்தில் நிறைய குரங்குகள் இருந்தன. பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரனுக்கு நண்பர்களாயிருந்தன. தோட்டக்காரன் செய்யும் காரியங்களைப் பார்த்து குரங்குகளும் அவற்றைச் செய்து விளையாடும். ஒருமுறை தோட்டக்காரன் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது.


குரங்குகளை அழைத்து தோட்டத்துக்கு தண்ணீர் ஊற்றச் சொன்னான். குரங்குகளுக்கு சந்தோஷம். ஆனால், எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரியவில்லை.

"வேர் பெருசா இருந்தா நிறைய தண்ணீர் ஊத்துங்க. சின்ன வேரா இருந்தா கொஞ்சமா, ஊத்துங்க" என்று யோசனை சொன்னான்.

வெளியூர் போய் திரும்பி வந்து தோட்டத்தைப் பார்த்தால், அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டு காய்ந்து கிடந்தன. "என்னாச்சு?" என்றான் தோட்டக்காரன். "வேர் பெருசா இருக்கா, சின்னதா இருக்கானு பாரப்பதற்காக செடியெல்லாம் பிடுங்கினோம்" என்றன குரங்குகள்.

**நீதி: புத்தியில்லாதவர்களிடம் பொறுப்பை கொடுப்பது, புத்தியில்லாத செயல்.**



## டிங்கோ நாய்

அவுஸ்திரேலியாவில் உள்ள பழக்கப்படுத்தபடாத காட்டுநாய் டிங்கோ என்னும் நாய். இதன் எடை 10 முதல் 24 கி.கி இருக்கும். உயரம் ஏறத்தாழ 44 செ.மீ முதல் 63 செ.மீ வரை இருக்கும். உடல் நீளம் 86 முதல் 122 செ.மீ இருக்கும். பெரும்பாலும் இவை குரைப்பதில்லை. மரத்திலும் ஏறவல்லவை. ஆண்டிற்கு ஒருமுறைதான் இனப்பெருக்கம் செய்கின்றன

## கொஞ்சம் சிரியுங்கள்

அப்புச்சாமிக்கு அவசரமாகக் கொஞ்சம் பணம் தேவைப் பட்டது. பக்கத்து வீட்டுக்காரரிடம் போய்த் தலையைச் சொறிந்தார். பக்கத்து வீட்டுக்காரர் 'என்ன விஷயம்?" என்றார். "சீக்கிரம் கடனாகப் பத்து ரூபாய் கொடுத்து என்னை அனுப்பி விடுங்கள். இல்லாவிட்டால் நிறைய பொடுகு உங்கள் வீட்டில் பரவிவிடும்" என்றார் அப்புச்சாமி.

"ராதா! மறந்து விடாதே. நாளைக்கு எனக்குப் பிறந்தநாள். கேக் கூட வாங்கிட்டன்' என்றார் ராமு. மனைவி ராதா "என்னைக் கேட்காமல் ஏன் பிறந்தநாள் விழா" என்றாள். ராமு நிதானமாக "நான் பிறந்ததே உன்னைக் கேட்டுக் கொள்ளாமல்;தானே" என்றார்.

9-ம் பக்க தொடர்ச்சி

தான் கேட்கின்றோம். குடும்பம் குடும்பமாக போனவர்களை கேட்கின்றோம். எதற்குமே இதுவரைக்கும் எந்த பதிலும் இல்லை. திரும்பவும் என்ன நடக்கபோகின்றது என்றால் யுத்தம்தான் செய்ய வேண்டிவரும். வேறு ஒன்றும் நடக்காது. ஆயுதம் தூக்குவதோ யுத்த வழிக்கு ஏற்பதோ அரசாங்கம் தான். எங்களது பிள்ளைகள் சின்ன பிள்ளைகள் இல்லை. நாங்களே மண்கிடங்கில் போக போகின்றோம். எங்களது பிள்ளைகளை விட்டு விடுங்கள் என்றுதானே கேட்கின்றோம். எங்கள் கைகளால் கொடுத்த பிள்ளைகளை விடுவதற்கு ஏன் ஜனாதிபதியால் இயலாது.

**எனது மகனை கடத்திதான் கொண்டு சென்றனர். இதுவரைக்கும் எந்த தகவலும் இல்லை எனது மகனை வெள்ளைவான்தான் கடத்திச்சென்றது. ஏழு எட்டு பேருடன்வந்து கேபிலடியில் வைத்து கடத்திதான் கொண்டு சென்றனர்.**





இவரும் மகிந்தவின் அரசின் கீழ் இருந்தவர் தானே. ஜனாதிபதி எங்களது பிள்ளைகளை எடுத்து தர மகிந்தாவிற்கு பயப்படுகின்றார். ஜனாதிபதி ஐந்து வருடத்தை கடத்தி விட்டு செல்வதற்கு அந்த கதிரையில் இருக்க வேண்டிய தேவை இல்லை.

**கீதாம்பாள்** - நிச்சயமாக எங்களது உறவுகளை ஒரு பக்கம் தேடிக்கொண்டே இருப்பம். எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை இந்த அரசாங்கம் சொல்ல வேண்டும். எங்களது உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். எங்களது பிள்ளைகளை தொலைக்க வில்லை அல்லது தூக்கி கொண்டே வைத்த இடத்தில் காணாமல் போகவில்லை. எங்களது உறவுகளை குடும்பம் குடும்பமாக கொண்டு சென்று இலங்கை இராணுவத்திடம் கையழித்தோம். யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் கையழித்தோம். அந்த பிள்ளைகளுக்கான முடிவினை தான் 08 ஆண்டுகளாக கேட்கின்றோம். பார்திருந்தோம், கேட்டிருந்தோம் ஆனால் அவர்களால் எங்களிற்கான ஒரு நீதியினை தர முடியவில்லை. எங்களிற்காக பாராளுமன்றம் சென்றவர்களாலேயோ இந்த நல்லாட்சி அரசாங்கத்தாலோ எமக்கான தீர்வினை பெற்றுத்தருவார்கள் என எதிர் பார்த்து இருக்க முடியாது. நாங்கள் 10 மாதம் சுமந்து பெற்ற பிள்ளைகளை, உயிரோடு உள்ளவர்களை தேடுகின்றோம். எங்களது உறவுகளுக்காக வாதாடுகின்றோம். எத்தனையோ சகோதரிமார்கள் தனது கணவன்மார்களை, பிள்ளைகளை இழந்து ஒரு நேரம் கூட உணவு வழங்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள். தங்களை பாதுகாக்க முடியாத நிலையிலும், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்றுவரை இந்நேரம் வரை அச்சுறுத்தல்களின் மத்தியில் தான் வாழ்ந்து வருகின்றோம்.


**மனுவல் உதயச்சந்திரா** - மன்னார் மாவட்டத்தில் இருந்து வந்தள்ளேன். மன்னார் மாவட்டம் முப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இடம். இங்கு 192 பேர் காணவில்லை. இராணுவத்தால் விசாரணைக்கு என்று கொண்டு போனவர்கள், கடலுக்கு மீன் பிடிக்கச்சென்றவர்கள், விளையாடிக் கொண்டு இருந்தவர்கள், கடைக்கு போனவர்களை பிடித்துச்சென்றனர். 24 தொடக்கம் 35 வரை வயதுடையவர்களை பிடித்துக்கொண்டு சென்றனர். மன்னார் மாவட்டம் எத்தனையோ போராட்டங்களை செய்துள்ளோம். தற்போது மைத்திரி சொல்லியிருக்கின்றார் பிள்ளைகள் இல்லை என்று இவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது இவர்கள் தானே பிடித்துக்கொண்டு போனார்கள் இவர்கள் எவ்வாறு அப்படி சொல்ல முடியும்.

எங்களுக்கு இப்போது முக்கியமானது எங்களது பிள்ளைகளை உயிரோடு கொண்டு வந்து தர வேண்டும் இல்லையோல் சாகும் வரை உண்ணா விரதம் தொடரும். பிடித்து வைத்த பிள்ளைகளை அவிட்டுவிட சொல்லுங்கள் எங்களது பிள்ளைகள் எங்களிடம் ஒடி வந்து விடும். நாங்கள் இவர்களிடம் உப்பு, புளி சாமான்களை கேட்கவில்லை எங்களது பிள்ளைகளின் உயிர்களையும் அவர்களின் வருங்காலத்தையும் கேட்கின்றோம்.

**காணாமல் ஆக்கப்பட்டவர் ஒருவரின் தாய்** - எனது மகனை கடத்திதான் கொண்டு சென்றனர். இதுவரைக்கும் எந்த தகவலும் இல்லை எனது மகனை வெள்ளைவான்தான் கடத்திச்சென்றது. ஏழு எட்டு பேருடன்வந்து கேயிலடியில் வைத்து கடத்திதான் கொண்டு சென்றனர். இதுவரைக்கும் நான் ஐந்து இடங்களிற்கு சென்று தெரிவித்தும் எல்லோரும் தேடலில்விட்டிருக்கோம் என்கின்றார்களே ஒழிய ஒரு ஒழுங்கான பதில் இல்லை. எனக்கு என் மகன் வேண்டும்.

## ஓடி ஓடிப் படிக்கணும்னு சொல்வார்கள். அதில் உள்ள சந்தோசமே தனி. அனுபவிக்க ரெடியானவர்கள் இல.1க்கு பார்வையைத் திருப்புங்கள்.

நிலவன்




**1**
சூறாவளிகள் அதிகம் உருவாகும் கடல் எது தெரியுமா? பசுபிக் எனின் 18க்கும், அட்லாண்டிக் எனின் 12க்கும், ஆர்ட்டிக் எனின் 8க்கும் வாருங்கள்.

**2**
தவறான பதில். 5 முதல் 38 கி.மீ; தான் சரியான பதில். அடுத்து 6இல் ஒரு கேள்வி உண்டே.

**3**
உங்கள் கணிப்பு தவறாகி விட்டதே. கவலை வேண்டாம். 20இல் விடை காத்திருக்கின்றது.

**4**
ஜோனின் அம்மாவுக்கு 3 மகன்கள் மூத்தவன் பெயர் ஜனவரி, இரண்டாதவன் பெயர் பெப்ரவரி, மூன்றாவது மகனின் பெயர் என்ன? மாரச் எனின் 10க்கும், பங்குனி எனின் 16 க்கும், ஜோன் எனின் 13க்கும் வருக.

**5**
தவறான பதில். சரியான பதில் 9இல்.

**6**
"தார்" பாலைவனம் எங்குள்ளது? இந்தியா எனின் 9க்கும், ஈரான் எனின் 17க்கும், எகிப்து எனின் 5க்கும் வாருங்கள்.

**7**
தவறான பதில். 20ற்குச் செல்லுங்கள் விடை தெரிந்து விடும்.

**8**
ஆர்ட்டிக் அல்ல அட்லாண்டிக் தான் சரியான பதில். அடுத்த கேள்வி 15இல்.

**9**
கரெக்ட். இந்தியா தான் சரியான பதில். அடுத்த கேள்வி 15இல்.

**10**
ம்ஹீம். தவறு தவறு. 13க்கு வாருங்கள் விடை தெரிந்து விடும்.

**11**
5 முதல் 38 கி.மீ என்பது தான் சரியான பதில் அடுத்த கேள்வி 6இல்.

**12**
கரெக்ட். அட்லாண்டிக் தான் சரியான பதில். அப்படியே 15ற்குச் செல்லுங்கள் பார்க்கலாம்.

**13**
கரெக்ட். ஜோன் தான் பெயர். ஜனவரி, பெப்ரவரி என இரண்டு பேர். மீதம் இருப்பது ஒருவர். அவரே ஜோன். அடுத்த வாரம் சந்திப்போம்.

**14**
ம்ஹீம். உங்கள் விடை தப்பாச்சே. 11இல் சரியான விடை உள்ளது.

**15**
0.2, 0.4, 1.2, 4.8 இவ் எண் தொடரில் அடுத்து வரும் எண் எது?

**16**
நன்றாக யோசியுங்கள். 13ல் தான் சரியான விடை உண்டு.

**17**
பிழை. இந்தியா தான் சரியான பதில்.

**18**
தவறு. சரியான விடை 12 இல்.

**19**
தென்றலின் வேகம் எவ்வளவு தெரியுமா? 5 முதல் 38 கி.மீ எனின் 11க்கும், 5 முதல் 36 கி.மீ எனின் 14க்கும், 6 முதல் 18 கி.மீ எனின் 2க்கும் விரையுங்கள்

**20**
கரெக்ட. 24 தான் பதில். சரியாகக் கவனித்துப் பாரத்தால் புரியும். அடுத்தடுத்து வரும் எண்கள் 2, 3, 4 என்பவற்றால் பெருக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 4.8ஐ 5ஆல் பெருக்க வரும் விடை 24 ஆகும். அடுத்த கேள்வி 19இல்.

# நீரின்றி அமையாது உலகு



நிலவன்


உயிருள்ள அனைத்து ஜீவன்களினதும் இயக்கத்துக்கு ஆதாரம் நீர். எல்லா வளங்களுக்கும் மூல வளம் நீரே. பூமியென்னும் உயிரின வாழ்விடத்தைத் தவிர வேறு எந்தக் கோளிலும் நீர் இல்லை என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். பூமியின் நிலப்பரப்பில் 71% சதவீதம் இருப்பது நீர் எனினும் உலக சனத்தொகையின் ஒவ்வொரு நான்கு பேரிலும் ஒருவர் குடிப்பதற்குத் தூய நீரின்றி அவதிப்படுகின்றனர். (எமது நாட்டின் 25 மாவட்டங்களுள் 14 மாவட்ட்ங்களில் வாழும் மொத்த சனத்தொகையின் 33 சதவீதமானவர்களுக்குத் தூய குடிநீர் கிடைப்பதில்லை) உலக நீர்ப் பரப்பில் 97.5 சதவீதம் உப்பு நீராகவும் 2.5 சதவீதம் நன்னீராகவும் உள்ளது. இந்த நன்னீர்ப் பரப்பிலும் 69 சதவீதம் பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ள அதே வேளை 30 சதவீதம் நிலத்தடிநீராகவும் 3 சதவீதம் நன்னீர் ஏரிகளாகவும் எஞ்சிய பகுதி ஈரலிப்பான தரைப் பிரதேசங்களாகவும் காணப்படுகின்றது. மொத்தத்தில் நிலத்தடி நீரும், நன்னீர் ஏரிகளுமே தற்போதைய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வனவாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் போதியளவு நீர் வளம் இருக்கின்ற போதிலும் யாழ் குடாநாட்டைப் பொறுத்த வரைக்கும் (யாழ் கிளிநொச்சி) போதிய நிலத்தடி நீர் வளம் இல்லை என்றே நிரூபிக்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டின் பிரதான நீர் பெறும் வழிகளாக இரணைமடுக் குளமும், பிரதானமான 4 நிலத்தடி நீர் முதல்களுமே (நீர் வில்லைகள்) காணப்படுகின்றன. சுன்னாகம், வடமராட்சிக் கிழக்கு (மணற்காடு), சாவகச்சேரி, ஊர்காவற்றுறை (மண்கும்பான்) போன்ற நான்கு இடங்களுமே யாழ் குடாநாட்டின் பிரதானமான நிலத்தடி நீர் முதல்களாகும். ஒவ்வொரு நீர் முதல்களில் இருந்தும் கோடை காலத்திலும், மாரி காலத்திலும் குறிப்பிட்ட அளவு நீரினையே எடுக்க முடிகின்றது. (தீவகப் பகுதியின் நீர் முதலான மண்கும்பானில் கோடை காலத்தில் நீர் பெறப்பட முடியாது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்). இத்தனைக்கும் யாழ் குடாநாட்டின் ஒரு நாளைக்கான குடிநீர்த் தேவையானது 50,000,000 லீற்றர் குடிநீரும் இந்த நான்கு நிலத்தடி நீர் முதல்களில் இருந்து பெறப்படும் நீரின் மூலமே நிறைவு செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரைக்கும் தற்போதைய சனத்தொகை 607,158 ஆகக் காணப்படுகின்றது. இம் மக்களின் குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்காக தினம் தோறும் 360000 லீற்றர்களுக்கு குறையாத நிலத்தடி நீர் கிணறுகள் மூலமும், ஏனைய நீர் முதல்களின் மூலமும் பெறப்படுகின்றது. இவ்வாறு நாள் தோறும் அகழப்படும் நிலத்தடி நீரானது குடிநீர்த் தேவைகளுக்கு மட்டுமின்றி விவசாயம், பயிர்ச் செய்கைபோன்ற இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் (அதாவது வேறு தேவைகளுக்கு குடிநீரைப் பயன்படுத்துவதனால்) காலப் போக்கில் நிலத்தடிநீரின் ஆழம் அதிகரித்து குடிநீரின் அளவு குறைவடைந்து செல்லக் கூடிய வாய்ப்புக்கள் மிக அதிகம். இத்தகைய விளைவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டுமெனில் தற்போது இருக்கும் நன்னீரை சிக்கனமாகப் பாவிப்பதே ஒரே வழி.

ஆனால் குடாநாட்டின் நிலத்தடி நீரானது தற்போது மிகவும் மாசுபட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாறு குடாநாட்டின் நிலத்தடி நீரானது மாசுபடுவதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. விவசாயத்தில் அளவுக்கு அதிகமான உரப் பாவனை, அளவுக்கு அதிகமான நிலத்தடி நீரின் அகழ்வு, தொழிற்சாலைக் கழிவுகள், முக்கியமாக கடந்த காலத்தில் யாழ் மண்ணில் போர் மூலம் வீசப்பட்ட குண்டுகளால் ஏற்பட்ட இரசாயனக் கழிவுகள் போன்ற காரணங்களால் குடா நீர் இன்று கூடா நீராக மாறியுள்ளது. நைத்திரேற்றின் அளவு, மலத் தொற்று பக்டீரியாக்களின் அளவு,உவர் தன்மையின் அளவு போன்றவை குடாநாட்டின் நிலத்தடிநீரில் அதிகரித்துள்ளமை தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் நிலப்பரப்பின் உட்புறத்தில் சுண்ணாம்புப் பாறைகளே அதிகளவில் காணப்படுகின்றன. இச் சுண்ணாம்புக் கற்களிலுள்ள கல்சியமானது அதிகமாக காணப்படுவதால் நிலத்தடி நீரானது "வன்னீர்" ஆகவே காணப்படுகின்றது. (இக் கல்சியம் சிறுநீரகங்களில் படிவதால் சிறுநீரகக் கற்கள் உருவாகும் வாய்ப்பும் அதிகம்). ஆதை விடவும் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அளவுக்கு அதிகமான யூரியா, கிருமி நாசினி, களை நாசினி போன்றவற்றின் காரணமாக தற்போது நைத்திரேற்றின் அளவும் அதிகரித்துள்ளது. சாதாரணமாக குடிநீரில் 45mg/l (அதாவது ஒரு லீற்றரில் 45 மில்லி கிராம் நைத்திரேற்றே காணப்படல் வேண்டும்) என்ற கணக்கிலேயே நைத்திரேற்று காணப்படல் வேண்டும். ஆனால் யாழ் குடாநாட்டின் பெரும்பாலான இடங்களில் நைத்திரேற்றின் அளவானது 250mg/l என்ற அளவில் காணப்படுகின்றது. இது மிகவும் அபாயகரமான பிரச்சினையே ஆகும். காரணம் இவ்வாறு நைத்திரேற்றுக்கள் கலந்த நீரை கொதிக்க வைத்தோ, வடிகட்டியோ சுத்தமாக்கி விட முடியாது. (பிரசாரணம் மூலமே சுத்தப்படுத்த முடியும்). இவ்வாறான நீரைத் தொடர்ந்து அருந்துவதன் மூலம் "நீலக் குழந்தை" பிறக்கும் அபாயம் தோன்றும் வாய்ப்பும் அதிகம். அதே போல் கிருமி நாசினிகள் மூலம் விசிறப்படும் நைத்திரேற்று ஆனது மரக்கறிகளின் இலைகளிலும் ஒட்டிக் காணப்படும். இதன் மூலமும் நைத்திரேற்று உடலினுள் செல்லும் ஆபத்து அதிகம்.



குடாநாட்டு நீரை மாசுபடுத்தும் இன்னொரு விடயம் மலத் தொற்று பக்டீரியாக்கள். இதற்கான முக்கிய காரணம் மலசலகூடங்களின் பாவனை சரியான அளவில் இல்லாததே ஆகும். பொதுவாக கிணற்றிற்கும் மலசலகூடத்திற்கும் இடைப்பட்ட குறைந்தளவு தூரம் 30 மீற்றர் ஆகும். ஆனால் தற்போது யாழ் குடாநாட்டில் இந்த முறைமை பின்பற்றப்படுவது என்பது சந்தேகமே. குறிப்பாக யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் 30 மீற்றருக்கும் குறைவான இடைவெளியிலேயே கிணறும் மலசலகூடமும் காணப்படுகின்றன. இதனால் மலசலக் கழிவுகளில் உள்ள ஈகொலி போன்ற பக்டீரியாக்கள் கிணற்று நீரினுள் உட்புகுந்து நெருப்புக் காய்ச்சல் போன்ற பல வகைப்பட்ட வியாதிகளை ஏற்படுத்தி விடுகின்றன. மலசலக் கழிவுகள் போன்று தான் எண்ணெய்க் கழிவுகளும் மிகவும் ஆபத்தானவை. (அண்மையில் சுன்னாகத்தில் நீகழ்ந்த கழிவு நீர் பிரச்சினை எல்லோரும் அறிந்ததே)

யாழ் குடாநாட்டைச் சுற்றிவர கடல் காணப்படுவதால் கரையோரப் பகுதிகளும், கடனீரேரியை அண்டிய பகுதிகளும் உவர் நீராகக் காணப்படுவதில் ஆச்சரியமில்லை. எனினும் உட்புறப் பிரதேசங்களில் அதிகமான நிலத்தடி நீர் அகழ்வால் வற்றிப் போகும் நிலத்தடி நீரின் இடத்தை நிரப்புவதற்காகக் கடல் நீர் உட்புகுவதால் காலப் போக்கில் நிலத்தடி நீர் உவர் நீராக மாறுவதுடன் பாவனைக்கு உதவாமலும் போகக் கூடிய வாய்ப்புக்கள் மிக மிக அதிகம். இப்படியாக குடாநாட்டின் நிலத்தடி நீர் பல வகைகளிலும் வேகமாகப் பாதிக்கப்படுவது நம்மில் பலருக்குத் தெரிந்திருந்தும் நீரைச் சிக்கனமாகப் பாவிப்பதிலோ, நீரைப் பாதுகாப்பதிலோ நாம் அக்கறை காட்டுவதில்லை. எம் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட நீர் முகாமைத்துவம், நீரின் கட்டுப்பாடான பாவனை, விவசாயங்களில் சேதன உரங்களின் பாவனை போன்றவற்றினாலேயே நிலத்தடி நீரைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அது மட்டுமன்றி நிலத்தடி நீரை மாசுபடுத்தும் காரணிகளை முடிந்தளவுக்கு அகற்றி விடுவதே எதிர்காலத்தில் நன்னீரை மாசின்றிச் சேமிப்பதற்கான ஒரே வழி என்பதை அனைவரும் உணர வேண்டும்.

## விளம்பரத் தொடர்புகளுக்கு
## 076 825 5567, 021 492 7561

Green Grass Valampuri Hotel

**THE VALAMPURI**
A Small Luxurious Hotel in Jaffna

148/10, Station Road, Jaffna
Tel : 021 222 0111 / 3444
Web : www.valampurihotel.com
E-mail : info@valampurihotel.com



**IECE**
INSTITUTE of ENGLISH & COMPUTER EDUCATION

IELTS™ Now Prepare for Your IELTS Exams
Academic Level and General Training
E.mail: info.iecejaffna@gmail.com

IELTS™ Life Skills
Level A1 & B1

121/1(219/A) Arasady Road, Kantharmadam, Jaffna. Sri Lanka
012 221 9140/ 021 567 4133/ 077 378 0390

10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

Bright Inn
**BRIGHT INN**
பிறையிட் இன் ஹோட்டல்




அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் BRIGHT INN

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு
0112 329664, 0117 242233, 0117 242244
E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933

NO 1 TOPAZ
**TOPAZ**
No. 01 Shop in Jaffna





திருமணப் பட்டுச்சேலை
காஞ்சிபுரம் பட்டுச்சேலை
சுரிதார் மற்றீரியல்கள்
மற்றும்
ரெடிமெற் ஆடைகள்

ஆண்களிற்கான
சேட் சூட் மற்றும்
ரெடிமெற் ஆடைகள்

மிஸ் சுட்டி
மிஸ் பியூட்டியாக
வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களுக்கான
பெஷன் ஆடைகள்

We are Specialist in
Wedding Suits | Wedding Sarees | Party Sarees | Wedding Frocks | Party Frocks
and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No. 72, Grand Bazaar, Jaffna. | No. 80/24, Kasthuriyar Road, Jaffna. | No. 195, Power House Road, Jaffna. |
| Tel : 021 222 4743 | Tel : 021 222 4643 | Tel : 021 222 4933 |
| Fax : 021 222 7645 | | 021 221 9933 |

E-mail : topazagn@gmail.com

# அல்பா மிக்சர்

சுவைக்க சுவைக்க, சுவையின் உச்சம்,
அதுவே அல்பா மிக்சர்

கால்நூற்றாண்டுக்கு மேலாக
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

அனைத்து முன்னணி விற்பனை நிலையங்களிலும்
இப்போது அமோக விற்பனையில்...

வீடு செல்லும் முன் வாங்குங்கள்
அல்பா மிக்சர்

பக்கஸ் லேன், உடுவில் வீதி,
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 744 8689
021 225 5278

பிரதான வீதி சங்கானை
மற்றும்
கஸ்தூரியர் வீதி
யாழ்பபாணம்

இல: 140 பரமேஸ்வராச்சந்தி
பலாலி வீதி திருநெல்வேலி.
தொ.பே: 021 222 6695

DS No - 882

# த சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

THE SASIKA DRIVING SCHOOL

## THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக்
கற்றுக்கொள்ள எம்முடன்
இணைந்து கொள்ளுங்கள்

- விண்ணப்பதாரி கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல்,பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.
- காணொளி மூலமும் (வீடியோ மூலம்) கற்பிக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247
021 221 7678 077 614 0361
sasikaLearners
sasikadrivingschool@gmail.com

கிளைக் காரியாலயங்கள்:

| | |
|---|---|
| வேலணை வங்களாவடிச் சந்தி | 021 221 5472<br>070 301 3012 |
| மல்லாகம் கே.கே.எஸ் வீதி. | 021 224 3393<br>070 301 3014 |
| சங்கானை ஒடக்கரை வீதி. | 021 225 1664<br>070 301 3016 |

### சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்

- தேசிய அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப் பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி - பெண்களுக்கு மட்டும்)
- மருந்துவச் சான்றிதழ் (தேசியு போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
- சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)




வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 29.01.2017 அன்று வெளியிடப்பட்டது.